டெரிக் பிரின்ஸ்

தேவனுடைய

பிரசன்னத்தில் பிரவேசித்தல்

Derek Prince Ministries - India

“DEVANUDAIYA PRASANNATHIL PRAVESITHTHAL”

This book was compiled from the extensive archive of Derek Prince’s unpublished materials and edited by the Derek Prince Ministries editorial team.

“ENTERING THE PRESENCE OF GOD” (Tamil)

5000/0524/LOP

Published by DPM India
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201/03

ISBN : 978-93-92947-98-8
BK-B067-200-TAM

Derek Prince Ministries - India
www.derekprince.com/ta

Derek Prince
MINISTRIES INDIA

பொருளடக்கம்

முகவுரை

1970-ம் வருடம் தொடங்கி, 1990-ம் வருடம் வரை, ஏதோ குறிப்பிடத்தக்க ஒன்று, சபை வரலாற்றை உருவாக்கியது.

மாரநாதா, இன்டெகரிட்டி ஒசன்னா! என்ற அமைப்புகளின் துதியும், ஆராதனையும், உலகம் முழுவதிலும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒரு புரட்சி அலையை உண்டாக்கியது. இசையும், பாட்டுக்களும் ஒவ்வொரு வீடுகளிலும் பேசப்பட்டன. இலட்சக் கணக்கான விசுவாசிகள், தங்கள் முகங்களையும், கைகளையும், குரல்களையும் பரலோகத்துக்கு நேராக உயர்த்தி பாடித் துதித்தார்கள். ஒரு புது வகையான சங்கீதக்காரர்கள், மேல் நோக்கி உயர்த்திய பாடல் புத்தகங்களை இயற்றினார்கள். அது குழுவாகப் பாடக்கூடியது மட்டுமல்ல, தனி நபர்கள் பாடக் கூடியதாகவும் இருந்தது. எண்ணற்ற அமைதியான நேரங்கள் குறைந்து போயின. மக்கள் தனிப்பட்ட துதியின் வல்லமையை அறிந்து கொண்டதால், மிக உற்சாகமான நேரங்களாக உருவானது.

இந்த புரட்சிக்கு ஒரு முன்னோடியாக, கேரிஸ்மேட்டிக் ரினீவல் 60 மற்றும் 70 என்ற இயக்கம் ஆரம்பித்தது. அது உலகம் முழுவதும் புகழ் பெற்றது. அதில் பரிசுத்த ஆவியானவர் முழுமையாகக் கிரியை செய்தார். எங்கெல்லாம் ஆவியானவருக்கு இடங்கொடுக்கப்பட்டதோ, அவர், ஜனங்களை குணமாக்குதலுக்குள்ளும், உயிர்ப்பிக்கும் தேவ பிரசன்னத்துக்குள்ளும் வழி நடத்தினார்.

டெரிக் பிரின்ஸ் அந்த கேரிஸ் மேட்டிக் இயக்கத்தின் மத்தியில் இருந்தார்.

நீங்கள் டெரிக் பிரின்ஸ் என்பவருக்குப் புதியவராயிருந்தால், நீங்கள் அவரை அறிந்து கொள்வது அவசியம். அவர் இருபதாம் நூற்றாண்டின் மகாப் பெரிய கிறிஸ்தவ ஊழியர். அவர் பிரிட்டிஷ் பிரஜையாக இருந்த போதிலும், அவருடைய வாழ்க்கையின் பிற்பகுதியை, அமெரிக்காவிலும், இஸ்ரவேலிலும் கழித்தார். அவர் இங்கிலாந்தின் புகழ் பெற்ற கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தில் கற்றார். அங்கே. C.S. லூயிஸ் அவரோடு பயின்றார். கேம்பிரிட்ஜில் பண்டைய மற்றும் நவீன தத்துவத்தில் ஃபெல்லேரிஷப் பெற்ற எத்தனை வேதாகம ஆசிரியர்கள் உங்களுக்குத் தெரியும்?

2003-ம் வருடம் குளிர்காலத்தில், டெரிக் பிரின்ஸ், அவருக்குப் பிரியமான இஸ்ரவேலில் இறந்தார் (எருசலேமில்) சுமார் 20 வருடமாக அங்கே வாழ்ந்து வந்தார். அவர் இறக்கும் போது, வயது 88ஆக இருந்தது.

டெரிக்கின் போதனைகள் தத்துவ பூர்வமானவை, ஆனால், சலிப்பூட்டக் கூடியவை அல்ல. அவருக்கு தத்துவ மனது இருக்கலாம். ஆனால், கர்த்தர் அவருக்கு, ஒரு கவிஞனுடைய ஆற்றலைக் கொடுத்திருக்கிறார். அவருடைய போதனைகள் உணர்ச்சியூட்டக் கூடியதும், உயர்த்தக் கூடியதும், செயல்-முறைக்கு ஏற்றதுமாயிருக்கும், அறிவூட்டக் கூடியதுமாகவும், எளிதாகக் கிடைக்க கூடியதுமாக இருக்கும் - முக்கியமான விஷயங்களாகிய தேவனை ஆராதிப்பது மற்றும் அவரோடு உள்ள ஐக்கியத்திற்கும் இது பொருந்தும்.

1980-ல், அவருடைய வானொலிப் பிரசங்கம் ஒன்றில், அவர் சொன்னதாவது:-

உலகத்தின் பல பகுதிகளிலும் ஊழியம் செய்யக் கூடிய சிலாக்கியம் பெற்றிருக்கிறேன். அங்கேயெல்லாம் பரிசுத்த ஆவியானவர்

ஊற்றப்பட்டார். ஆவிக்குரிய வரங்கள் கிரியை செய்தன. ஒரு சில இடங்களில், உண்மையான அபிஷேகம் நிறைந்த துதியும் ஆராதனையும் ஏறெடுக்கப்பட்டன. நீங்கள் ஆவிக்குரிய ஆராதனையில் ஈடுபடும் போது, நீங்கள் தேவனோடு ஐக்கியப்படுகிறீர்கள். அதன் மூலம் உங்களுக்கு வெளிப்பாடுகள் கிடைக்கின்றன. தேவனிடமிருந்து அனுகூலங்களைப் பெற, இது தான் வழி என்று நான் சொல்லாவிட்டாலும், தேவன் ஏற்றுக்கொள்ளும் துதி ஆராதனையை அவர் அங்கீகரிக்கிற விதத்தில் அணுகும்போது, கர்த்தர் அளவில்லாமல் நம்மை ஆசீர்வதிக்கிறார்.

டெரிக் பிரின்ஸ், சத்தியங்களை போதிப்பதின் மூலம், உங்களை தேவனுடைய பரிசுத்த பிரசன்னத்தில் திறம்பட வழிநடத்துகிறார். ஆராதனையின் ஆழமான பரிமாணத்தை அறிய செய்கிறது. தேவனோடு நெருங்கிய உறவு ஏற்படுகிறது, பெலனும், வல்லமையும் "மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள்" பிரவேசிக்கும் சிலாக்கியமும் ஏற்படும்.

அந்த இடத்துக்குள் பிரவேசிக்க ஆயத்தப்படுங்கள்.

-டெரிக் பிரின்ஸ் ஊழியங்கள்

தேவ பிரசன்னத்தில் மனநிலை

ஆரானை, வேதாகமத்தின் முக்கியக் கருத்துக்களில் ஒன்று. விசுவாசியின் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது. ஆனால், அநேகருக்கு ஒரு ஆராதனையின் தன்மை தெளிவாகத் தெரியாது. ஆலயத்துக்குப் போகிறவர்கள் ஆராதனைப் பற்றிச் சொல்லும் போது, அவர்கள் ஞாயிறு காலை ஆராதனையைப் பற்றித் தான் சொல்லுவார்கள். அவர்கள், சங்கீர்த்தனங்கள், கொயர் பாடல்கள், வழக்கமான பாடல்கள் பற்றிச் சொல்வார்கள். துர்பாக்கியவசமாக, இந்த சபைகளில் மிகச் சிறிய ஆராதனை நடத்தப்படுகிறதோ என்று அஞ்சுகிறேன். அவர்கள் சொல்வதை வைத்துப் பார்த்தால், அங்கே ஆராதனையே நடைபெறவில்லை.

இந்த புத்தகத்தில், செயல்கள் மற்றும் நடத்தைக்கு அப்பால் எங்கு (உள்ளத்தில்) உண்மையான ஆராதனை நடைபெறுகிறதை பற்றிப் பார்ப்போம். நாம், துதி, நன்றியறிவித்தல், ஆராதனை பற்றி பார்ப்போம். ஆராதனைக்குத் தடையாயிருக்கிற காரியங்களை பார்ப்போம். படிப்படியாக, தேவ பிரசன்னத்திற்குள் முன்னேறி பிரவேசிப்போம். அங்கே, அவருடைய குரலைக் கேட்போம், அவருடைய தோள்களில் இளைப்பாருவோம்.

நம்முடைய காணிக்கை

நாம் தேவ பிரசன்னத்துக்கு வரும் போது, நாம் பல காணிக்கைகளையும், பலிகளையும் கொண்டு செல்வதை

எதிர்பார்க்கிறார். இது பணமாக இருக்கலாம், பொருட்களாகவும் இருக்கலாம் இதனுடன் முடியவில்லை. ஆனால், இதைவிட உயர்வாக வேதாகமம் ஆவிக்குரிய காணிக்கைகளையும், பலிகளையும் பற்றிக் கூறுகிறது. இந்த ஆவிக்குரிய காணிக்கைகள், நன்றியறிவித்தல், துதி, ஆராதனை போன்றவையாகும்.

நாம் இவற்றை ஒன்றுக்கொன்று இடமாற்றி பயன்படுத்துகிறோம். நான் இவற்றை வானவில்லின் நிறத்துக்கு ஒப்பிடுகிறேன். அது தெளிவாக இருக்கும். ஆனால், ஒன்றோடொன்று கலந்து விடுகின்றன. அதே போல், நன்றியறிவித்தல், துதி, ஆராதனை இவை தனித்தனியாக இருந்தாலும், ஒன்றொடொன்று இணைந்து விடுகின்றன. அவற்றை எப்படி பிரித்தறிவது என்று பார்ப்போம்.

நன்றியறிவித்தல், தேவனுடைய நற்குணத்தைக் குறிக்கிறது.

துதி, தேவனுடைய மேன்மையை (மகத்துவம்) குறிக்கிறது.

ஆராதனை, தேவனுடைய பரிசுத்தத்தைக் குறிக்கிறது.

பரிசுத்தம் என்பது தன்னில்தானே சிறப்பு வாய்ந்தது. அது தேவனுடைய ஒரு குணாதிசயம். மனித அறிவால் அதைப் புரிந்து கொள்வது கடினம். ஏனென்றால், அதற்கு ஈடானது ஒன்றும் பூமியில் இல்லை. நாம் தேவனுடைய ஞானத்தை பற்றி பேசலாம், ஏனென்றால், நாம் ஞானமுள்ள நபர்களை அறிவோம். நாம் கர்த்தரின் மேன்மையை பேசலாம், நாம் மேன்மையான நபர்களை அறிவோம். நாம் தேவனுடைய வல்லமையை பற்றிப் பேசலாம், ஏனென்றால், நாம் வல்லமையான மனிதர்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால், தேவனைப் போல, பரிசுத்தமானவர்கள் பூமியில் இல்லை. அது தேவனுக்கே உரியது. அதை அவரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டவர்கள் அதேபோல இருக்கிறார்கள். பரிசுத்தத்தை புரிந்து கொள்வது கடினம் என்பதால் அதை புரிந்துகொண்டு ஆராதனைக்குள் பிரவேசிப்பதும் கடினம்.

எனவே, இந்த மூன்று காணிக்கைகள் அல்லது பலிகளில் ஆராதனையை தேவன் ஏற்றுக்கொள்ளும் வகையில் செலுத்துவது விசுவாசிக்கு கடினமாக இருக்கிறது. நன்றியறிவித்தலும், துதியும் வாய்வழிச் சொற்கள். ஆனால், ஆராதனை, ஒரு குணாதிசயம், அல்லது சுபாவமாகும். எனவே, தேவனுக்கு காணிக்கையாக செலுத்த நாம் மூன்று வார்த்தைகளையும் நன்கு அறிந்து கொள்வது அவசியம்.

துதித்தல்

துதி என்பது, வேதாகமத்தின் ஆரம்பம் முதல் கடைசி வரை ஓடுகிற ஒரு தங்க நூல் போன்றது. துதி நித்தியமானது. அதனுடைய ஆரம்பம், பரலோகம். பரலோகவாசிகளுடைய நித்தியமான வேலை துதிப்பதுதான். அதன் மூலம் அவர்கள், தேவ பிரசன்னத்திலிருக்க வேண்டுமானால், நித்தியமாகத் தேவனை துதிக்க வேண்டும். தடையற்ற அணுகல் தடையற்ற துதிக்கு அழைப்பு விடுகிறது.

நன்றியறிவித்தலும்,
துதியும் வாய்வழிச்
சொற்கள்.
ஆனால்,
ஆராதனை,
ஒரு குணாதிசயம்,
அல்லது சுபாவம்.

துதி பூமி உண்டானது முதல், அதனுடன் தொடர்புடையது. யோபு **38**இல், தேவன் யோபுவை இந்த கேள்வியால் எதிர்கொண்டார்.

> *நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிற போது, நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி. அப்பொழுது, விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி, தேவ புத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே!*
>
> *யோபு. 38:4,7*

உலக ஆரம்பத்தைப் பற்றி எவ்வளவு அழகான காட்சி! துதிதான் நம்முடைய கிரகத்தை அதனுடைய பாதையில் உருண்டு செல்ல

வைத்தது! எனவே, இந்த வானமும் பூமியும் அழியும் வரை துதித்துக் கொண்டிருக்க வேண்டியது நமது கடமை.

தேவனை சிங்காசனத்தில் அமர வைப்பது நமது துதிதான்.

இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்.

சங்கீதம்:22:3

துதித்தல், நன்றியறிவித்தலோடு சேரும்போது துதி, தேவ பிரசன்னத்தை அணுக வைக்கிறது. சங்கீதம் 100ல் சங்கீதக்காரர் கூறுவதை நாம் பார்க்கிறோம்.

தேவப்பிரசன்னத்திற்கும், வாசஸ்தலத்துக்கும் ஒரே வாசல் துதித்தான்!

அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து. அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.

சங்கீதம் 100:4

இங்கே, தேவ பிரசன்னத்தில் பிரவேசிக்க இரண்டு வழிகள் உண்டு: முதலாவது, தேவனுடைய வாசல் வழியாக, இரண்டாவது அவருடைய பிரகாரங்கள் வழியாக. சங்கீதக்காரன், சொல்கிறான், நன்றியறிவித்தல் நம்மை, வாசல்வழியாக அழைத்துச் செல்கிறது. ஆனால், துதி, பிரகாரங்களுக்குள் கொண்டு செல்கிறது. இது ஏசாயாவிலும் அழகாக சொல்லப்பட்டிருக்கிறது, அங்கே தீர்க்கதரிசியானவர் தேவனுடைய மக்களை பார்த்து சொல்கிறதாவது:

இனிக் கொடுமை உன் தேசத்திலும், அழிவும், நாசமும், உன் எல்லைகளிலும் கேட்கப்படமாட்டாது. உன் மதில்களை இரட்சிப்பென்றும், உன் வாசல்களைத் துதியென்றும் சொல்லுவாய்.

ஏசாயா 60:18

தேவன், பூரண சமாதானமும், அமைதியும் உள்ள இடத்தில் வாசம் பண்ணுகிறார். அங்கே வன்முறையோ, அல்லது அழிவோ இல்லை, அவற்றின் சத்தம் கூட அங்கே கேட்பதில்லை. ஆனால், அணுகுமுறையைக் கவனிக்கவும்: எல்லா வாசங்களும் துதிதான். எனவே, தேவப்பிரசன்னத்திற்கும் வாசஸ்தலத்துக்கும் ஒரே வாசல் துதித்தான்! துதியில்லாமல், அவர் பிரகாரத்துக்குள்ளும் பிரவேசிக்க முடியாது!.

நன்றியறிவித்தல்

> *ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும், பக்தியோடும், தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி, கிருபையைப் பற்றிக் கொள்ளக்கடவோம்.*
>
> *எபிரெயர் 12:28*

நாம் கிருபையைப் பற்றிக் கொள்வோம் என்று பதிப்பு கூறுகிறது. ஆனால் புதிய அகில உலக பதிப்பு (New International Version) சொல்கிறது.

> *ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம், நன்றியறிதலோடு தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்வோம்.*

உண்மையில், இரண்டும் சரியான மொழிப்பெயர்ப்பாகும். கிரேக்க மொழியில், "கிருபை பெற்றுக்கொள்வதற்கு" முக்கிய வார்த்தை "கேரிஸ்" என்பதாகும், அது நன்றி என்று சொல்லும் அதே வார்த்தையை குறிப்பதாகும். கிருபைக்கும், நன்றியுணர்வுக்கும் நேரடியான தொடர்பு இருக்கிறது. நன்றியுணர்வில்லாத மனிதன் தேவனுடைய கிருபைக்கு அப்பால் இருக்கிறான். நீங்கள் நன்றியுணர்வில்லாமல் கிருபைக்குள் இருக்க முடியாது.

லத்தீன் மொழியை அடிப்படையாகக் கொண்ட உலகின் மூன்று ரோமானிய மொழிகளும் கிருபைக்கும் நன்றியுணர்வுக்கும் இடையே நேரடி தொடர்பைக் கொண்டிருக்கிறது. பிரெஞ்சு மொழியில், "கிரேஸ் எ டையு" என்பதற்கு "தேவனுக்கு நன்றி" என்பதாகும். இத்தாலிய மொழியில், "நன்றி" என்று சொல்வதற்கு "கிரேஸி" என்ற வார்த்தையாகும். ஸ்பானிஷ் மொழியில், அது "கிரேஸியாஸ்" என்ற வார்த்தையாகும். நன்றியுணர்வை தேவனுடைய கிருபையிலிருந்து உங்களால் பிரிக்க முடியாது. நாம் சாப்பிடும்முன் "கிருபை" என்று சொல்லும்போது, "நன்றியுடன் இருப்போம்" என்று சொல்கிறோம்.

சங்கீதம் 95இல் ஒரு அழகான வசனம், ஆராதனைக்குள் முன்னேறி செல்வதை சித்தரிக்கிறது. இது உரத்த சத்தமான - சில தேவாலயங்கள் அனுமதிப்பதை விட மிகவும் சத்தமான, மகிழ்ச்சியான துதியில் இருந்து ஆரம்பமாகிறது.

கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள்.

சங்கீதம் 95:1

இதற்கு சத்தமாக பாடுதல் என்று அர்த்தமல்ல-உரத்த சத்தம்போடுதல் ஆகும். அது எனக்கு விருப்பமானது. கர்த்தருக்குப் பிடிக்காத ஒருகாரியம் உண்டானால், அது அரை மனதோடு துதிப்பது தான். சங்கீதம் 145:3 சொல்கிறது. கர்த்தர் பெரிய வரும், மிகவும் புகழப் படத்தக்கவருமாயிருக்கிறார். உண்மையில், அவரை அதிகமாய் (மிகவும்) துதிக்கவில்லை என்றால், அதைச் செய்யாதீர்கள்.

துதித்தலுடனே, அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து, சங்கீதங்களால், அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம்.

சங்கீதம் 95:2

இரண்டு வகையான அணுகு முறையைக் கவனியுங்கள். நன்றியறிவித்தல் மற்றும் துதித்தல். தேவ பிரசன்னத்தில் பிரவேசிக்க

வேறுவழியே இல்லை. அடுத்து வரும் மூன்று வசனங்கள், நாம் தேவனை ஏன், நன்றி சொல்லிதுதிக்க வேண்டும் என்று சொல்கிறது. வேதம் ஒரு தத்துவ புத்தகமாகும். அது தேவனை நாம் நன்றி சொல்லி துதிக்க வேண்டும் மட்டும் என்று சொல்லவில்லை; அதன் காரணத்தையும் சொல்கிறது.

> *கர்த்தரே மகாதேவனும், எல்லா தேவர்களுக்கும், மகாராஜனுமாயிருக்கிறார்.*
>
> *சங்கீதம் 95:3*

துதிப்பதினால் தான், நாம் அவருடைய மேன்மையை ஏற்றுக் கொள்கிறோம் என்பதை நினைவு கூருங்கள். இங்கே, "மகா" என்ற வார்த்தை இரண்டு முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கர்த்தர் "மகா தேவனும், மகா ராஜனுமாயிருக்கிறார்" அவரது மகத்துவத்தை உரத்த மகிழ்ச்சியான உற்சாகமான துதியால் நாம் ஏற்றுக்கொள்கிறோம். பின்னர், அவரை வல்லமையுள்ள சிருஷ்டிகராக பார்க்கிறோம்.

கர்த்தருக்குப் பிடிக்காத ஒரு காரியம் உண்டானால், அது அரை-மனதோட துதிப்பதுதான்.

> *பூமியின் ஆழங்கள், அவர் கையில் இருக்கிறது; பர்வதங்களின் உயரங்களும் அவருடையவைகள். சமுத்திரம், அவருடையது, அவரே அதை உண்டாக்கினார்; வெட்டாந்தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று.*
>
> *சங்கீதம் 95:4-5*

எனவே, அவருடைய சிருஷ்டிப்பின் மகத்துவத்திற்கான நாம் நன்றியறிதலோடும், துதியோடும் தேவ சந்நிதியில் வருகிறோம். அவரை அணுக அது ஒன்று தான் வழி. **6**-வது வசனத்தில், நாம் அவரை ஆராதிக்கிறோம். துதியும், நன்றியறிதலும் உண்மையில்

ஆராதனைக்குள் செல்லும் ஒரு வழிமுறையாகும். நாம் ஆராதனைக்குள் வந்தவுடன் அது ஒரு மனப்பான்மையாகிறது என்பதை கவனியுங்கள்.

> *நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக, நாம் பணிந்து குனிந்து முழங்காற் படியிடக்கடவோம் வாருங்கள்.*
>
> *சங்கீதம் 95:6*

இங்கே, நாம் பேச்சிலிருந்து, செயலுக்கு வருகிறோம். நாம் துதியோடும், நன்றியறிவித்தலோடும் ஆரம்பித்தோம். ஆனால், அது முடிவு அல்ல. கிறிஸ்தவர்கள், துதியோடும், நன்றியறிவித்தலோடும் முடித்து விட்டால், அவர்கள் குறிக்கோளை தவற விடுகிறார்கள். உண்மையான ஆராதனை: பேச்சில் அல்ல, செயலில்தான் இருக்கிறது.

ஆராதனை

நீங்கள் தேவனுடைய பரிசுத்தத்தை அறிந்து கொள்வது, அல்லது தேவனோடு உறவு கொள்ளும் ஒரே வழி - ஆராதனை! இந்த வெளிப்பாடு இல்லாமல், நாம் ஆராதனை செய்ய முடியாது. நாம் பாடல் ஆராதனையில் பங்கெடுக்கலாம், ஆனால், நமக்கு அந்த வெளிப்பாடு இல்லையென்றால், நாம் ஆராதனையில் பங்கு பெற முடியாது. தேவனின் பரிசுத்தத்தை நாம் விவரிக்க முடியாது. அதை வெளிப்படுத்த மட்டுந்தான் முடியும்.

> நீங்கள் செய்யக் கூடாத காரியங்களில், எவ்வளவு கவனம் செலுத்துகிறீர்களோ, அவ்வளவுக்கு அந்த காரியங்கள் உங்கள் மேல் ஆதிக்கம் செலுத்தும்.

அநேக கிறிஸ்தவர்கள், பரிசுத்தமென்பது, ஒரு பட்டியல் விதிகள் - நீங்கள் எங்கே போகலாம், எதைச் செய்யலாம், எப்படி பேசலாம், போன்ற விதிகள் என்று

நினைக்கிறார்கள். அதற்கும் பரிசுத்தத்துக்கும் சம்பந்தமில்லை. பவுல் கொலோசெயரில் அதை மிகவும் வலியுறுத்துகிறார்:

> *நீங்கள் கிறிஸ்துவுடனே கூட, உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள் போல, மனுஷருடைய கற்பனைகளின்படியும், போதனைகளின் படியும் நடந்து: தொடாதே, ருசி பாராதே, தீண்டாதே, என்கிற கட்டளைக்கு உட்படுகிறதென்ன? இவைகயெல்லாம் அனுபவிக்கிறதினால் அழிந்து போகுமே. இப்படிப்பட்ட போதனைகள், சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி, ஞானமென்கிற, பேர் கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே, ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது.*
>
> *கொலோசெயர் 2:20-23*

இது முற்றிலும் உண்மை. நீங்கள் செய்யக் கூடாத காரியங்களில், எவ்வளவு கவனம் செலுத்துகிறீர்களோ, அவ்வளவுக்கு அந்த காரியங்கள் உங்கள் மேல் ஆதிக்கம் செலுத்தும். நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். உங்கள் நிதானத்தை இழக்காதீர்கள். நீங்கள் என்ன செய்தாலும் நிதானமாகச் செய்யுங்கள். அடுத்து என்ன செய்யப் போகிறீர்கள்? நீங்கள் தவறான காரியத்தைச் செய்வதால் நிதானத்தை இழக்கிறீர்கள். அநேகர், தங்களுக்கும் பரிசுத்தத்துக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்கிறார்கள். எபிரெயர் 12, பிதாவாகிய தேவன் தனது பிள்ளைகளுக்குக் கொண்டிருக்கும் ஒழுக்கத்தைப் பற்றி பேசுகிறது:

> *அவர்கள் (நம்முடைய சரீர தகப்பன்மார்கள்) தங்களுக்கு நலமென்று தோன்றினபடி, கொஞ்சக்காலம், சிட்சித்தார்கள்; இவரோ, தம்முடைய பரிசுத்தத்துக்கு, நாம்*

பங்குள்ளவர்களாகும் பொருட்டு, நம்முடைய பிரயோஜனத்துக்காகவே, நம்மைச்சிட்சிக்கிறார்.

எபிரெயர் 12:10

பரிசுத்தம் என்பது இதைச் செய், இதைச் செய்யாதே என்ற விதிகள் அல்ல. தேவன் தனக்கு முன்னால் விதிகளின் பட்டியல் வைத்துவிட்டு, தனது சொந்த நடத்தையை சரிபார்க்கிற பரிசுத்தர் அல்ல. விதிகளுக்கும், வேதத்தில் சொல்லப்படும் பரிசுத்தத்துக்கும் சம்பந்தமில்லை.

தேவனின் குணாதிசயங்கள்

தேவன் என்றாலே பரிசுத்தந்தான். தேவனைப் பற்றிய எல்லாமே பரிசுத்தம் தான். எனவே, பரிசுத்தத்தைப் பற்றி புரிந்து கொள்ள தேவன் யார் என்றும், அவர் யாரைப்போல இருக்கிறார் என்றும் அறிந்து கொள்ள வேண்டும். எனவே, தேவனுடைய சில குணாதிசயங்களைச் சுட்டிக்காட்டுகிறேன்-தேவன் எப்படி இருக்கிறார் என்று வேதம் என்ன சொல்கிறது.

தேவன் ஒளியாயிருக்கிறார்

தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை, இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது.

1 யோவான் 1:5

தேவன் ஒளியாயிருக்கிறார். அவர் வெளிச்சத்தை உருவாக்கி அதை அனுப்புகிறவர் மட்டுமல்ல, அவர்தாமே ஒளியாயிருக்கிறார்.

தேவன் அன்பாயிருக்கிறார்

அன்பில்லாதவன் தேவனை அறியான்: தேவன் அன்பாகவே இருக்கிறார். தேவன் நம்மேல் வைத்திருக்கிற

அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன். தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.

1 யோவான் 4:8,16

தேவன், ஒளியாகவும், அன்பாகவும் இருக்கிறார். ஒளிக்கும், அன்புக்கும் இடையில் அழுத்தம் இருக்கிறது. வெளிச்சம் உங்களை பயமுறுத்தக் கூடும். அன்பு உங்களை ஈர்க்கிறது. தேவனிடம் உள்ள உறவிலும் இத்தகைய அழுத்தம் இருக்கிறது. நாம் தேவனிடம் நெருங்கிச் சேர விரும்புகிறோம். ஆனால், அந்த பேரொளிக்குள் பிரவேசிக்கப் பயப்படுகிறோம்.

தேவன் நீதியாகவும், நியாயத்தீர்ப்பாகவும் இருக்கிறார்

இது முற்றிலும் அவரது இயல்பின் ஒரு பகுதியாகும். உபாகமத்தில் மோசே இதை வலியுறுத்துகிறார்:

கர்த்தருடைய நாமத்தைப் பிரசித்தம் பண்ணுவேன். நம்முடைய தேவனுக்கு மகத்துவத்தைச் செலுத்துங்கள். அவர் கன்மலை; அவர் கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக் கேடில்லாத சத்தியமுள்ள தேவன், அவர் நீதியும் செம்மையுமானவர்.

உபாகமம் 32:3-4

அநேக மக்கள், அவர்களுடைய குறிப்பிட்ட சூழ்நிலைகளில் நியாயமற்றவர் என்று தேவனை குறை கூறுகிறார்கள். ஆனால், தேவனிடம் எந்த அநியாயமும் இல்லையென்று வேதம் சொல்கிறது. அவர் முற்றிலும் நியாயமுள்ளவர், உண்மையுள்ள தேவன். ஆதியாகமம் புத்தகத்தில் ஆபிரகாம் சோதோமைக் குறித்து கர்த்தரிடம் மன்றாடும்போது சொல்வதைப் பாருங்கள்.

துன்மார்க்கனோடே நீதிமானையும் சங்கரிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக; நீதிமானையும் துன்மார்க்கனையும், சமமாய் நடப்பிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக; சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யாதிருப்பாரோ என்றான்.

ஆதியாகமம் 18:25

அவர் சரியானதையேச் செய்வார். அவரிடம் அநீதியில்லை, அவரிடம் எந்த அக்கிரமும் இல்லை.

அப்படித்தான் தேவன் இருக்கிறார். தேவன் உலகம் அனைத்துக்கும் நீதிபதியாயிருக்கிறார். அவர் சரியானதையேச் செய்வார். அவரிடம் அநீதியில்லை, அவரிடம் எந்த அக்கிரமமும் இல்லை. தேவன் அநீதியானவர் என்று நம்பும்படி, சோதிக்கப்படுகிறோம். ஆனால், உண்மையல்ல என்று வேதம் சொல்கிறது.

கர்த்தர் எரிச்சலும், உக்கிர கோபமும் உள்ளவர்

இதை சமகால கிறிஸ்தவம் அரிதாகவே பார்க்கிறது. ஆனால் இது மிகவும் முக்கியமானது. நம்முடைய தேவன், கோபமும் எரிச்சலுமான தேவன். நாகூம் இதைக் குறித்த ஒரு கண்ணோட்டதை தருகிறார்.

கர்த்தர் எரிச்சலுள்ளவரும், நீதியைச் சரிக்கட்டுகிறவருமான தேவன்; கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவர், உக்கிர கோபமுள்ளவர்; கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்குப் பிரதி பலன் அளிக்கிறவர். அவர் தம்முடைய பகைஞருக்காகக் கோபத்தை வைத்து வைக்கிறவர்.

நாகூம் 1:2

கர்த்தர் எரிச்சலுள்ளவர். அவர் உக்கிர கோபமுள்ளவராய் பிரதிபலன் அளிக்கிறார். இது கர்த்தருடைய தெய்வீக, நித்திய சுபாவத்தின் ஒரு

பகுதியாகும். நாம் இந்த பாகத்தை விட்டுவிட்டால், நாம் கர்த்தருடைய சுபாவத்தை, முழுமையாய் காட்டவில்லை. வெளிப்படுத்தின விசேஷம், அந்திக்கிறிஸ்துவுக்கு நேரிடும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் ஒரு பகுதியைக் காட்டுகிறது.

> *அவர்களுக்குப் பின்னே, மூன்றாம் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு, மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கி, தன் நெற்றியிலாவது தன் கையிலாவது, அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிறவனெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல், வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக் குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும், கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான். அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும், அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும், பகலும் இளைப்பாறுதலிராது.*
>
> *வெளிப்படுத்தல் 14:9-11*

தேவன் மிகுந்த இரக்கமுள்ளவர், அவர் நித்திய நியாயத்தீர்ப்பை எவர்மேலும் செலுத்துவதில்லை என்று சிலர் நம்புகிறார்கள். அது வேதத்தின்படி சரியல்ல.

ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் வாதிக்கப்படுவார்கள் இது சாந்தமான மென்மையான இயேசுவின் தற்காலத்தின் தோற்றம் அல்ல, இது அவருடைய தெய்வீக சுபாவத்தின் ஒரு பாகம், கர்த்தர் ஒரு நீதிபதி. தேவன் மிகுந்த இரக்கமுள்ளவர், அவர் நித்திய நியாயத்தீர்ப்பை எவர்மேலும் செலுத்துவதில்லை என்று சிலர்

நம்புகிறார்கள். அது வேதத்தின்படி சரியல்ல. மேலும், இது மிகவும் பயங்கரமாக இருக்கிறது.

> *இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன் மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப் போடுவார்.*
>
> *வெளிப்படுத்தல் 22:18-19*

வெளிப்படுத்தின விசேஷத்தில் ஏதாவது தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது என்றால், அது நித்திய நியாயாத்தீர்ப்பை தான். நாம் ஒரு பாதிக்கப்பட்டவரிடம் காட்டும் இரக்கத்தை விட, குற்றவாளியிடம் அதிகம் இரக்கம் காட்டக் கூடிய அந்த நிலைக்கு வந்திருக்கிறோம். ஏன்**?** ஏனென்றால், நாம் நியாயந்தீர்க்க விரும்பவில்லை. ஏன் நாம் நியாயந்தீர்க்க விரும்பவில்லை**?** நாம் பிறரை நியாயம் விசாரித்தால் நாம் நியாயம் தீர்க்கப்படுவோம் என்று நாம் சிந்திப்பதால் தான் என்று நம்புகிறேன்.

கர்த்தர் கிருபையும், மிகுந்த இரக்கமும் உள்ளவர்

"மிகுந்த இரக்கம்" என்பதற்கு "உறுதியான அன்பு" என்று அர்த்தமாகும். இதை படித்த போது, நான் ஒரு முடிவுக்கு வந்தேன், அதற்கு உண்மையான அர்த்தம், "உடன்படிக்கையை நிறைவேற்றும் கர்த்தரின் உண்மை" இது அவருக்கு உடன்படிக்கை மீதுள்ள உண்மையாகும். இது அவருடைய சுபாவங்களில் ஒன்று.

சங்கீதம் **51**ல், தாவீது, மிகுந்த துன்பத்தின் வேளையில் ஜெபிக்கிற ஜெபம். அப்போது அவனுடைய ஆத்துமா அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. பத்சேபாளிடம் அவன் பாவம் செய்தபின், அவன் ஜெபித்த ஜெபம். மேலும் உரியா கொலை செய்யப்பட்ட செய்தி வெளிப்பட்டது.

> *தேவனே, உமது கிருபையின்படி, எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின் படி, என் மீறுதல்கள் நீங்க, என்னைச் சுத்திகரியும்.*
>
> *சங்கீதம் 51:1*

உமது, மிகுந்த இரக்கங்களின்படி என்பதற்கு கர்த்தரின் உடன்படிக்கையை நிறைவேற்றுகிற உண்மை என்று அர்த்தம். அதாவது, "நான் நிபந்தனைகளை சந்தித்தால், என்னை மன்னிக்க ஒப்புக் கொண்டீர். அந்த அடிப்படையில் நான் உம்மிடம் கேட்கிறேன்" என்று தாவீது சொல்கிறார். அந்த அடிப்படையில் கர்த்தரை அணுக முடிவது, எவ்வளவு முக்கியமானது! இந்த கருத்து வேறுபல சங்கீதங்களிலும் காணப்படுகிறது.

> *அல்லேலூயா கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை (அவருடைய மிகுந்த இரக்கங்கள், அவருடைய உடன்படிக்கை மீதுள்ள அவருடைய உண்மை) என்று முள்ளது.*
>
> *சங்கீதம் 106:1*

கர்த்தர் கிருபையுள்ளவர்

> *ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.*
>
> *எபிரெயர் 4:16*

இந்த வசனத்தில் சொல்லப்பட்ட இரண்டு காரியங்களாகிய

இரக்கத்தையும், கிருபையையும், சம்பாதிக்க முடியாது. முதலாவது, நமக்கு இரக்கம் வேண்டும், பிறகு கிருபை வேண்டும். கிருபையை நாம் சம்பாதிக்க முடியாது. மதபக்தியுடையவர்களுக்கு உண்மையான பிரச்சனை என்னவென்றால், அவர்களால் எல்லாவற்றையும் சம்பாதிக்க முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள். இதன் விளைவாக, அவர்கள் கர்த்தரின் கிருபையை இழந்து விடுகிறார்கள். "நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்றகாலத்தில் சகாயம் பெறவும், தைரியமாய் கிருபாசனத்தண்டையிலே, சேரக்கடவோம்". நாம் கடந்த காலத்துக்காகக் கிருபையையும் வருங்காலத்துக்காக இரக்கத்தையும் பெற வேண்டும். தேவனுடைய பெரிதான இரக்கத்தால் மாத்திரம் நாம் அத்தகைய மக்களாய் மாற முடியும். அவர் விரும்பும் வாழ்க்கையை நடத்த முடியும்.

கர்த்தர் வல்லமையுள்ளவர்

முழு வேதாகமுமே, கர்த்தருடைய வல்லமைக்கு அத்தாட்சியாக இருக்கிறது. சங்கீதத்தில் ஒரு உதாரணத்தை மட்டும் பார்ப்போம்.

> *கர்த்தர் ராஜரிகம் பண்ணுகிறார், மகத்துவத்தை அணிந்து கொண்டிருக்கிறார்; கர்த்தர் பராக்கிரமத்தை அணிந்து, அவர் அதைக் கச்சையாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்; ஆதலால், பூச்சக்கரம் அசையாதபடி நிலை பெற்றிருக்கிறது. உமது சிங்காசனம் பூர்வமுதல் உறுதியானது; நீர் அநாதியாயிருக்கிறீர். கர்த்தாவே நதிகள், எழும்பின; நதிகள் இரைச்சலிட்டு எழும்பின; நதிகள் அலைதிரண்டு எழும்பின. திரளான தண்ணீர்களின் இரைச்சலைப் பார்க்கிலும், சமுத்திரத்தின் வலுமையான அலைகளைப் பார்க்கிலும், கர்த்தர் உன்னதத்திலே வல்லமையுள்ளவர்.*
>
> *சங்கீதம் 93:1-4*

கர்த்தர் பரிசுத்தத்தின் மொத்த உருவாயிருக்கிறார்

நான் கர்த்தரின் ஏழு குணாதிசயங்களை இங்கு வர்ணிக்கிறேன். 1) ஒளி 2)அன்பு 3)நீதியும், நியாயத்தீர்ப்பும் 4) எரிச்சலும் உக்கிரமும். 5) கிருபையும், மிகுந்த இரக்கமும் 6) இரக்கம். 7) வல்லமை கர்த்தரின் பரிசுத்தம் இவை யாவையும் உள்ளடக்கியது என்று நம்புகிறேன். அது தான் அவருடைய மொத்த உருவம். பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும், பரிசுத்தம் என்ற வார்த்தை கர்த்தரைப் பற்றி, மூன்று முறை, ஒரே வாக்கியத்தில் எழுதப்பட்டுள்ளது. ஏசாயாவில் சேராபீன்கள் கூப்பிடுகிறது,

> *ஒருவரையொருவர் நோக்கி, சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூட்பிட்டுச் சொன்னார்கள்.*
>
> *ஏசாயா 6:3*

வெளிப்படுத்தின விசேஷத்தல், ஜீவன்களும் மூப்பர்களும், கீழே விழுந்து, வணங்கி,

> *இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன.*
>
> *வெளிப்படுத்தல் 4:8*

இப்படி, மூன்று முறைக் கூப்பிடுவதில், முக்கியத்துவம் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். பரிசுத்தர் என்பது பிதாவைக்குறிக்கிறது. பரிசுத்தர் என்பது குமாரனைக் குறிக்கிறது. பரிசுத்தர் என்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது, வேறு எவருமே பரிசுத்தர் இல்லை. நாம் தேவனோடு ஐக்கியப்பட்டிருந்தால், அவர்களோடு பரிசுத்தத்தில் பங்கேற்க முடியும் அல்லது புரிந்துகொள்ள முடியும்.

கர்த்தருடைய பரிசுத்தத்துக்கு, ஆராதனைதான் நம்முடைய பதில், மேலும், பரிசுத்தம் எங்கே வெளிப்படவில்லையோ, அங்கே ஆராதனை இல்லை. உங்களுக்கு ஒரு அழகான பாடல் ஆராதனை இருக்கலாம்.

துதியும் ஸ்தோத்திரப் பலியும் இருக்கலாம். ஆனால், ஆராதனை இருக்க முடியாது. ஏனென்றால், கர்த்தருடைய பரிசுத்தம் இருக்கும் இடத்தில் தான் ஆராதனை இருக்க முடியும்.

> *அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.*
>
> *சங்கீதம் 100:4*

கர்த்தர் செய்த எல்லா காரியங்களுக்காகவும், நாம் அவருக்கு நன்றி சொல்கிறோம். நாம் அவரைத் துதிக்கும் போது, நாம் அவருடைய மேன்மையை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அது முடிவல்ல. நம்மில் பலர் அதோடு நின்று விடுகிறோம். நாம் பிரகாரங்களில் பிரவேசித்தோம், அங்கே நாம் எதற்காகப் போகிறோம்? அங்கே, ஆராதிக்கப் போகிறோம். ஒரு துதி பாடலோடு நிறுத்திவிட்டால், நமக்கு நல்ல நேரம் போயிருக்கும், ஆனால், தேவனுடைய இருதயத்தின் விருப்பமான காரியத்தை செய்யவில்லை. அதற்குமேல் ஏதோவொன்று இருக்கிறது. நாம் தேவ பிரசன்னத்தை விரும்புகிறோம். நாம் ஜீவனுள்ள தேவனோடு ஐக்கியம் வைக்க விரும்புகிறோம். நாம் அவருக்கு பலியாக கொடுப்பதெல்லாம், ஆராதனை ஒன்று தான். எனவே, நாம் நம்முடைய யாத்திரையைத் தொடர்வோம். கர்த்தரின் இரக்கத்தை நாடுவோம். அவர், நம்மை, தம்முடைய பிரசன்னத்தில் அனுமதிப்பார். நாம் அவருடைய பிரசன்னத்தில் நுழையும் போது, நாம் ஆராதிக்க ஆரம்பித்து விடுகிறோம்.

நம்முடைய ஏற்றபதில்

சங்கீதம் உண்மையான ஆராதனை பற்றி அழகாக விவரிக்கிறது. சங்கீதம் 95இன் வளமான மற்றும் வல்லமையான மொழியின் மீது மீண்டும் ஒருமுறை தியானிப்போம்.

> *கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி, நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக் கடவோம், வாருங்கள். துதித்தலுடனே, அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து, சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம். கர்த்தரே மகாதேவனும், எல்லா தேவர்களுக்கும் மகாராஜனுமாயிருக்கிறார். பூமியின் ஆழங்கள் அவர் கையில் இருக்கிறதும் பர்வதங்களின் உயரங்களும் அவருடையவைகள். சமுத்திரம் அவருடையது. அவரே அதை உண்டாக்கினார். வெட்டாந்தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று. நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக, நாம் பணிந்து, குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள். அவர் நம்முடைய தேவன்; நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே.*
>
> *சங்கீதம் 95:1-7*

இதில், மூன்று பகுதிகளை நான் ஆராயப் போகிறேன். முதலாவது, 1,2 வசனங்களில் துதியும், நன்றி அறிவித்தலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. "கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி நம்முடைய

இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம்." துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து சங்கீதங்களால், அவரை ஆர்பரித்துப் பாடக்கடவோம். இது சத்தமான, கெம்பீரமான துதியும், ஸ்தோரத்திரமும் ஆகும். இது ஒரு வகையான முன்னுரை.

பின்னர், 3-வது வசனத்திலிருந்து 5-வது வசனம் வரையிலும், சங்கீதக்காரன் துதி, ஸ்தோத்திரத்துக்கான காரணங்களைக் கொடுக்கிறான். நாம் ஏற்கனவே பார்த்தது போல், கர்த்தரின் செயல்களுக்காக நாம் அவரைத் துதிக்கிறோம். அவர் யார் என்பதற்காக அவரைத் துதிக்கிறோம். இரண்டு காரணங்களுமே, மூன்றாவது வசனத்தில் சொல்லப்படுகின்றன. "கர்த்தரே மகா தேவன்", வேறு ஒரு இடத்தில், "கர்த்தர் பெரியவரும், மிகவும் புகழப்படத்தக்கவருமாய் இருக்கிறார். (சங்.145:3) அவருடைய புகழ்ச்சி அவருடைய மகத்துவத்துக்கு தொடர்பாக இருக்கிறது. 95-ம் சங்கீதம், கர்த்தர் செய்த காரியங்களை நினைவுப்படுத்துகிறது, சமுத்திரம் அவருடையது. அவரே அதை உண்டாக்கினார். வெட்டாந்தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று. (சங்கீதம் 95:5).

நாம், நம்மையேச் சுற்றிக் கொண்டிருக்கும் வரை ...நாம் முழு மனதோடு கர்த்தரை ஆராதிக்க முடியாது.

நாம் துதியோடும், நன்றி அறிவித்தலோடும் கர்த்தரிடத்தில் வரும் போது, நம் கவனம் அவர் மேல் பதியும். ஆராதனைக்கு இது முக்கியமானது. ஏனென்றால், ஆராதனையின் பெரிய எதிரி, தன்னை மையமாக்குதலாகும். நாம், நம்மையேச் சுற்றிக் கொள்ளும் போது, நம்முடைய சொந்தப் பிரச்சனைகளும், நம்மை சுற்றி நடக்கும் காரியங்களும் நம்மைச் சுற்றிக் கொள்ளுகின்ற போது நாம் முழு மனதோடு கர்த்தரை ஆராதிக்க முடியாது.

நான், முந்தின அதிகாரத்தில் சொன்னது போல, 6-வது, 7-வது

வசனங்களில் மூன்றாவது பகுதி சொல்லப்படுகிறது - அதாவது, ஆராதனை நம்முடைய மனோநிலை மூலம் வெளிப்படுகிறது.

> *நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக, நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள்.*
> *சங்கீதம் 95:6*

இந்த வசனங்களைப் பற்றி, நான் இரண்டு காரியங்களைச் சொல்கிறேன். முதலாவது, ஆராதனை, நம்மை, தேவ ஜனங்களாகப் பிரித்து காட்டுகிறது. ஆராதனைக்குக் கொடுக்கப்படும் காரணம், "அவர் நம்முடைய தேவன், நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே" (சங்கீதம் 95:7) நாம் தேவனை ஆராதிக்கும்போது, கர்த்தர் யார் என்பதைக் காட்டுகிறோம். நாம் ஆராதிக்கிறவர் நிச்சயமாக நம்முடைய தேவனாக இருக்க வேண்டும். நாம் ஏன் தேவனை மட்டும் ஆராதித்து வணங்குவது மிக முக்கியமானது என்பதை பின்னர் சுட்டிக்காட்டுகிறேன்.

இரண்டாவதாக, ஆராதனை கர்த்தருடைய அன்புக்கும், ஆதரவுக்கும் ஏற்ற பதிலாக இருக்கிறது. "நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே." (சங்கீதம் 95:7)

ஆராதனையின் விளைவுகள்

ஆராதனையின் இரண்டு விளைவுகளை விளக்க, நான் 95-ம் சங்கீதத்தை தொடர்ந்து படிக்க விரும்புகிறேன், இறுதியில் ஆராதனை செய்ய தவறியதற்கான விலையையும் சொல்கிறேன்.

> *இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டின போதும் சோதனை நாளிலும் நடந்தது போல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சை பார்த்து. என்*

கிரியையையும் கண்டார்கள். நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும் என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி, என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று, என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்.

சங்கீதம் 95:8-11

இங்கே பணிந்து குனிந்து தேவ சந்நிதியில் முழங்கால் படியிட்டு ஆராதிப்பதன் இரண்டு விளைவுகளைப் பார்க்கிறோம். முதலில் நாம் தேவனுடைய குரலைக் கேட்கிறோம். சத்தமான, கெம்பீரமான துதி, மற்றும் ஸ்தோத்திரத்திலிருந்து, உள்ளான இளைப்பாறுதலாகிய, அமைதியான நிலைக்குச் செல்கிறோம். இங்கே, எல்லாம் அமைதியாக்கப்பட்டு, தேவ பிரசன்னத்துக்கு வருகிறோம். அந்த நிலையில், நாம் தேவனுடைய குரலைக் கேட்கிறோம். அந்த குரலை நாம், பிரச்சனைகளால், உலகக் காரியங்களால் சூழப்பட்டிருக்கும் சூழ்நிலையில் கேட்க முடியாது. ஆராதனையின் ஒரு முக்கியமான காரியம், என்னவென்றால் ஆராதனை என்பது நம்மை விட்டு தேவன் மேல் முழுக்கவனத்தை பதிப்பதாகும். அவரோடு ஒன்றுப்படுவதாகும்.

தேவனுடைய குரலைக் கேட்பது மிகவும் முக்கியமானது. எரேமியாவில், தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு உறுதியாக அறிவிக்கிறார்.

என் வாக்குக்குச் செவி கொடுங்கள் அப்பொழுது, நான் உங்கள் தேவனாயிருப்பேன். நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்.

எரேமியா 7:23

கர்த்தர் சொன்ன மிக எளிமையான வார்த்தை இதுதான். "என் வாக்குக்குச் செவி கொடுங்கள். அப்பொழுது, நான் உங்கள் தேவனாயிருப்பேன்." உபாகமம் **28**-ம் அதிகாரம், கீழ்ப்படிதலின்

ஆசீர்வாதங்களையும், கீழ்ப்படியாமையால் வரும் சாபங்களையும் பட்டியலிடுகிறது. ஆசீர்வாதம் ஆரம்பமாகிறது,"இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின் படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும் படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப் பலிக்கும்." உபாகமம் 28:1-2. சாபம் ஆரம்பமாகிறது, இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் கட்டளைகளின்படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவிகொடாதே போவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப் பலிக்கும். உபாகமம் 28:15

கர்த்தருடைய சத்தத்திற்கு செவிக் கொடுப்பதும் அல்லது செவி கொடாமல் இருப்பதும் திருப்புமுனையாக இருக்கிறது. உங்களை பயமுறுத்துவதற்கு சொல்லவில்லை, வேதத்தை வாசிப்பது மட்டும் போதாது. என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது.... அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது... யோவான் 10:27 இயேசுவின் சத்தத்தைக் கேட்காவிட்டால் நீங்கள் அவரை பின்பற்ற முடியாது. வேதம் வாசிப்பது நல்லதுதான். ஆனால், அவருடைய சத்தத்தை ஒரு போதும் கேட்காமலே வாசிக்கக் கூடும். தேவனுடைய சத்தத்தைக் கேட்க, ஆராதனை ஒரு நியமிக்கப்பட்ட வழிமுறையாக இருக்கிறது என்று நம்புகிறேன்.

இரண்டாவது விளைவு, நாம் அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம். ஆராதனையும் தேவனுடைய சத்தத்தைக் கேட்பதும், வேறெந்த வழியிலும் கிடைக்காத இளைப்பாறுதலை நமக்குத் தருகிறது. எப்படி ஆராதனை செயவ்து என்று அறிந்திருக்கிறவர்கள் மட்டுமே அவருடைய இளைப்பாறுதலை அனுபவிக்க முடியும். (தற்காலத்து அமெரிக்கர்கள் மத்தியில், இளைப்பாறுதல் மிக அரிது. ஏனென்றால், அவர்கள் ஓய்வில்லாதவர்கள்.)

ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது. ஏனெனில், அவருடைய இளைப்பாறுதலில், பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து, ஓய்ந்ததுபோல, தானும், தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான். ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின் படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்து போகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம்.

எபிரெயர் 4:9-11

ஆராதனை என்பது தேவன் பேரிலேயே முழுகவனத்தையும் செலுத்தி, நம்மையே விட்டு திரும்புவதாகும்.

நாம் இப்பொழுது, ஒரு கணம், பரிசுத்த ஓய்வு நாளைப் பற்றி கருத்தில் கொள்வோம். நான் பிரமாணங்களை பற்றி பேசவில்லை. கிறிஸ்தவர்கள், மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் இல்லையென்று நினைக்கிறேன். ரோமர் புத்தகத்தில் "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும் படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் படியாகக் முடிவாயிருக்கிறார். (ரோமர் 10:4) என்று நினைவூட்டப்படுகிறோம். கிறிஸ்துவின் மரணம், நியாயப்பிரமாணத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது - மற்ற அம்சங்களில் அல்ல, ஆனால், தேவநீதி பெறும் விசயத்தில் - மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கடைப் பிடிப்பதின் மூலம், நாம் தேவநீதி பெற முடியாது. அதனால்தான், கிறிஸ்தவர்களும், யூதர்களைப் போல, பரிசுத்த ஓய்வு நாளை கடைப்பிடிக்க வேண்டும் என்று நான் நம்பமாட்டேன்.

மேலும், பரிசுத்த ஓய்வு நாள், வாரத்தின் ஏழாவது நாள் என்று சொன்னாலும், ஞாயிற்றுக் கிழமை, வாரத்தின் முதல் நாளாக இருக்கிறது. இப்படியிருக்க, நாம் ஞாயிற்று கிழமை தான் பரிசுத்த

ஓய்வு நாள் என்று சொல்வது, பரிசுத்த ஓய்வு நாளை மீறுவது போல் இருக்குமல்லவா? ஓய்வுநாளில், நீங்கள் தீ பற்ற வைக்கக்கூடாது. ஒரு விளக்கை பொருத்தக்கூடாது. அடுப்பை, பற்ற வைக்ககூடாது, ஒரு குறிப்பிட்ட தூரத்துக்கு மேல் நடக்கக் கூடாது. முதலியவை நம்மில் பெரும்பாலானோர், சபைக்குச் செல்வதின் மூலம், பரிசுத்த ஓய்வு நாளை மீறுகிறோம்!

ஆனால், வேதம் சொல்கிறது, "ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு, இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது." (எபிரெயர் 4:9). வாரத்தின் ஏழு நாட்களும் நான் அலுவலாக இருந்தால், தேவனைப் பிரியப்படுத்த முடியாது என்று நான் நம்புகிறேன்.

நீங்கள் படுத்துக் கொண்டு, நான் என்னப் பண்ணப் போகிறேன் என்று சிந்தியாமல் இருக்க முடியுமா?

கர்த்தர், முதன்முதலாக, பரிசுத்தப்படுத்தியது காலத்தையாகும். அவர் ஏழாவது நாளை பரிசுத்தப்படுத்தினார். அவர் ஒரு இடத்தையோ, அல்லது ஒரு பொருளையோ, பரிசுத்தப்படுத்துமுன், காலத்தை பரிசுத்தப்படுத்தினார். காலம் இன்னும் இன்றும் கூட பரிசுத்தப்படுத்தப்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். கர்த்தர், இஸ்ரவேலிடம் சொன்னார், "ஏழாம் வருஷத்தில், நிலம் சும்மா கிடக்க விட்டு விடுவாயாக". (யாத்.23:11). அது என்ன என்று உங்களுக்கு தெரியுமா? இது ஒரு விசுவாச சோதனையாகும். நாங்கள் என்ன சாப்பிடுவோம், கர்த்தாவே! "அதை நான் பார்த்துக் கொள்வேன். நீ நிலத்தை சும்மாவிட்டுவிடு" என்கிறார். இஸ்ரவேலர் அப்படிச் செய்யத் தவறிவிட்டார்கள். சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு, கர்த்தர் சொன்னார், "சரி. உன்னுடைய நிலம் பரிசுத்த ஓய்வுநாளை ஆசரிக்கவில்லை. நான் அதை மாற்றப் போகிறேன். நீ சிறையிருப்புக்குப் போவாய். நீ விட்டுப் போன பரிசுத்த ஓய்வுகளுக்குப்

பதில் சரிகட்டுவாயாக" என்றார்.

கர்த்தர் விசுவாசிகளோடு இப்படியாக ஈடுபடுகிறார் என்று நினைக்கிறேன். சிலர், வாரந்தோறும், நாள் முழுதும், ஒரே வேகத்தில், வேலை செய்கிறார்கள். காலத்தை, கர்த்தருக்காக பரிசுத்தம் செய்வதில்லை. இதன் விளைவாக, அவர்கள் தவறவிட்ட பரிசுத்த ஓய்வு நாட்களை, மருத்துவமனையில் செலவிடுவார்கள்.

இளைப்பாறுதல் என்றால் என்ன? என்று உங்களிடம் கேட்கிறேன். உடலைப் பொறுத்தவரையிலும், அல்லது மனதளவிலும் ஒரு வேலையும் செய்யாமல் இருக்க முடியுமா? நீங்கள் படுத்துக் கொண்டு, நான் என்னப் பண்ணப் போகிறேன் என்று சிந்தியாமல் இருக்க முடியுமா? அநேகருக்கு ஓய்வு என்றால், என்ன என்றே தெரியாமல் இருக்கிறார்கள்.

இது எனக்கு ஒரு புதுக் கருத்தாக இருக்கிறது: ஆராதிக்கக் கற்றுக் கொள்வது, ஓய்வெடுக்கக் கற்றுக் கொள்வது. அவைகள் நெருக்கமாக இணைக்கப்பட்டவை. நான் நடனமாடி, கைத்தட்டி, பாட்டுப்பாடி, கர்த்தரைத் துதிப்பதையும், நன்றி அறிவிப்பதையும் நம்புகிறேன். ஆனால், ஏற்ற வேளையில், பணிந்து வணங்கி, அமைதியாயிருக்கவும் பழக வேண்டும். இன்று, அவருடைய சத்தத்தைக் கேட்டால், உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதிருங்கள். அவருடைய பரிசுத்த ஓய்வுநாளை தவறவிடாதீர்கள்.

ஆராதனை செய்யத் தவறுவதின் விளைவுகள்

இஸ்ரவேல் ஜனங்கள், ஆராதிக்கும் படியான தேவ அழைப்பை புறக்கணித்தார்கள். 95-ம் சங்கீதத்தில், அதன் விளைவைக் காணலாம்.

அவர் நம்முடைய தேவன்; நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே.. இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டின போதும், சோதனை நாளிலும், நடந்தது போல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். அங்கே உங்கள் பிதாக்கள், என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சை பார்த்து என் கிரியையையும் கண்டார்கள். நாற்பது வருஷமாய், நான் அந்தத் சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப் போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி, என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று, என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்.

சங்கீதம் 95:7-11

இஸ்ரவேலர் தேவனை ஆராதிக்கத் தவறியதின் விளைவுகள் எவை**?** முதலாவது, அவர்களுடைய இருதயங்கள் கடினப்பட்டன. இரண்டாவதாக, அவர்கள் தேவனுடைய சத்தத்தைக் கேட்க வில்லை. மூன்றாவது, அவர்கள் தேவனுக்குக் கோபமூட்டினார்கள். நான்காவது, அவர்களுக்கு நியமித்த இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிக்கவில்லை. அவர்கள், துதித்தல், ஸ்தோத்தரித்தல் படிகளைப் பின்பற்றவில்லை. அதன் மூலம், பணிந்து வணங்கி, முழங்கால் படியிட்டு அமைதியாய் இருக்கவில்லை. அதனால், அவர்கள் தேவனுடைய சத்தத்தை கேட்கவில்லை, மேலும் அவர்களுக்கு நியமித்த இளைப்பாறுதலுக்குள் செல்லவில்லை.

1 இராஜாக்கள் **19**ல், எலியா தீர்க்கதரிசி, யேசபேல் இடமிருந்து, தப்பித்து ஓடுவதைப் பார்க்கிறோம். அவன் வனாந்தரத்தில் தங்கி, ஓரேப் பர்வதத்துக்குச் சென்றான். அங்கே தான், தேவன், இஸ்ரவேல் ஜனங்களோடு உடன்படிக்கை செய்தார். எலியா, ஓரேப் பர்வதத்தின்மேல் இருந்த போது, தேவன் அவனுடன் பேசினார். அதன்

பிறகு, அவன் பல அனுபவங்கள் ஊடாகச் சென்று தேவனுடைய வெளிப்பாட்டை பெற்றான்.

> *அப்பொழுது, அவர்: நீ வெளியே வந்து, கர்த்தருக்கு முன்பாகப் பர்வதத்தில் நில் என்றார்; அப்பொழுது இதோ, கர்த்தர் கடந்து போனார்; கர்த்தருக்கு முன்பாகப் பர்வதங்களைப் பிளக்கிறதும், கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த பெருங்காற்று உண்டாயிற்று; ஆனாலும், அந்தக் காற்றிலே கர்த்தர் இருக்கவில்லை; காற்றிற்குப்பின் பூமி அதிர்ச்சி உண்டாயிற்று; பூமி அதிர்ச்சியிலும் கர்த்தர் இருக்கவில்லை. பூமி அதிர்ச்சிக்குப்பின் அக்கினி உண்டாயிற்று; அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை;*
>
> *1 இராஜாக்கள் 19:11-12*

இது தான் ஆராதனைக்கு முன் நிகழும் காரியங்கள்: காற்று, பூமியதிர்ச்சி. அக்கினி - பயங்கர இரைச்சல், அதிர்ச்சி, ஆனால், அது ஆராதனையல்ல.

> *.... அக்கினிக்குப் பின் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று.*
>
> *1 இராஜாக்கள் 19:12*

"அமர்ந்த மெல்லிய சத்தம்" இதைத்தான் ஆராதனையோடு தொடர்புபடுத்த விரும்புகிறேன்.

> *அதை எலியா கேட்ட போது, தன் சால்வையினால், தன் முகத்தை மூடிக்கொண்டு.*
>
> *1 இராஜாக்கள் 19:13*

இது எதைக்குறிக்கிறது? இது தான் ஆராதனை. வேதத்தில் சொல்ப்பட்டிருக்கிறது, தேவதூதர்களும், கேராபீன்களும், வேதபிரசன்னத்தில், தங்கள் முகங்களையும், கால்களையும் தங்கள் சிறகுகளால் மூடிக்கொண்டதைப் போல, எலியா தன் முகத்தை

மூடிக்கொண்டான்.

> *அதை எலியாக் கேட்ட போது, தன் சால்வையினால் தன் முகத்தை மூடிக் கொண்டு வெளியே வந்து, கெபியின் வாசலில் நின்றான். அப்பொழுது, இதோ, எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்கிற சத்தம் உண்டாயிற்று.*
>
> *1 இராஜாக்கள் 19:13*

எலியா, அமைதியும், பக்தியும் உள்ள அந்த தேவ பிரசன்னத்திற்குள் பிரவேசித்தான். அப்பொழுது, தேவன் அவனோடு பேசினார். அந்த மனநிலையில், எலியா, தேவனின் மெல்லிய சத்தத்தை கேட்டான். அதைத் தொடர்ந்து நீங்கள் வாசித்தால், அவன் பெலனும், புதிய வழி நடத்துதலையும் பெற்றான். அவன் ஒரு புதுபிக்கப்பட்ட மனிதனாக, புது நோக்கத்தோடு, புதிய தைரியத்தோடு, வெளியே வந்தான். ஆராதனையின் மூலமாக, அவன் தன் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தான்.

ஆவியிலும், உண்மையிலும்

இயேசு சமாரிய ஸ்திரீயுடன், கிணற்றின் அருகில் பேசும்போது, நம்முடைய மனோநிலை தான், நம்முடைய ஆராதனையை கர்த்தருக்கு ஏற்புடையதாக்குகிறது என்று சொன்னார். அந்தப் பெண், கர்த்தரை ஆராதனை செய்ய வேண்டிய இடங்களாகிய எருசலேமையும், சமாரியாவையும் பற்றி இருக்கிற எதிர்வாதங்களை பேச ஆரம்பித்தார்கள். அப்படி அவன் இந்த இரண்டு புவியியல் இருப்பிடங்களைக் குறித்து விவாதித்த போது, இயேசு ஒரு புதிதான எதிர்பாராத விதத்தில் தனது பேச்சை திசை திருப்பினார்.

> *அதற்கு, இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு. நீங்கள் இந்த மலையிலும், எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங் காலம் வருகிறது. நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுது கொள்ளுகிறோம்; ஏனென்றால், இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது. உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுங்காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும் படி, பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள், ஆவியோடும்*

உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்கிறார்.

யோவான் 4:21-24

இயேசு, சமாரிய ஸ்திரீயுடன் பேசிய வார்த்தைகள், தீர்க்கதரிசன வார்த்தைகள். அந்த உரையாடலின் பின், நூறு வருடங்களுக்குள் எருசலேம் ஆலயம் அழிக்கப்பட்டது. யூதர்கள் அங்கே ஆராதனை செய்ய முடியாமற் போயிற்று என்ற போதிலும், ஆலயம் அழிக்கப்படுமுன், கர்த்தர் தம்முடைய ஜனங்கள் ஆராதிக்க, மாற்று ஏற்பாடு செய்திருந்தார். உலகப் பிரகாரமான இடத்திலிருந்து, ஆவிக்குரிய இடத்துக்கு மாற்றியிருந்தார். இதைத்தான், இயேசு, பிதாவை ஆவியிலும், உண்மையிலும் தொழுதுகொள்ளும் காலம் வரும் என்று குறிப்பிட்டிருந்தார்.

கர்த்தர், உண்மையில் இப்படிப்பட்ட ஆராதனை வீரர்களைத்தான் விரும்புகிறார். இது வேதாகமத்திலேயே, அதிசயமான வாக்கியமாக எனக்கு தோன்றுகிறது. பிதாவானவர், ஆவியிலும், உண்மையிலும் தொழுது கொள்கிறவர்களைத் தேடுகிறார்.

இயேசு சொன்ன ஆவிக்குரிய உள்ளான நிபந்தனைகளைப் பார்க்கலாம். இப்பொழுது, "உண்மையில்" என்று சொல்லப்பட்ட பிற்பகுதியில் இருக்கும் வார்த்தையைப் பார்ப்போம்.

"உண்மையில்" ஆராதிப்பது

இறுதியில் தேவனுடைய பிரசன்னத்திலிருந்து விலக்கப்பட்ட நபர்களின் பட்டியலை வெளிப்படுத்தின விசேஷம் நமக்கு வழங்குகிறது.

பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும்
அருவருப்பானவர்களும், கொலைபாதகரும்,
விபசாரக்காரரும், சூனியக்காரரும்,
விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும்,

இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும், எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.

வெளி.21:8

இதில் கடைசி வார்த்தையைக் கவனியுங்கள்: "பொய்யர் அனைவரும்". பொய்யர்கள், தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசிக்க முடியாது. அதனால் தான் நாம் பிதாவை "உண்மையில்" ஆராதிக்க வேண்டும். இதற்கு ஒருநல்ல உதாரணம், அப்போஸ்தலர் நடபடிகள் 5-ம் அதிகாரத்தில் வரும் அனனியா, சப்பீராளின் சம்பவம். அவர்கள், தங்கள் நிலத்தை விற்று, அதில் ஒரு பாகத்தை, காணிக்கையாக, அப்போஸ்தலர்களிடம் கொண்டு வந்தவர்கள். அவர்கள், அதில் ஒரு பாகத்தை, வைத்துக் கொண்டார்கள். அவர்கள், அப்போஸ்தலர்களிடம் பொய் சொன்னார்கள். அதனால், அவர்கள் மரித்தார்கள், தேவனுடைய பிரசன்னத்தில், ஒருவர் பின் ஒருவராக, கணவனும், மனைவியும் மரித்து விழுந்தார்கள். (அப்.5:1-11). பொய்யும், உண்மையற்ற தன்மையும் தேவனுடைய பிரசன்னத்துக்குள் பிரவேசிக்க முடியாது என்பதற்கு இது நமக்கு ஒரு தெளிவான எச்சரிக்கையாயிருக்கிறதல்லவா ?.

நாம் தேவனிடம் வரும் போது, நாம் ஒளிக்குள் வருகிறோம். அங்கே இருளுக்கு இடமில்லை.

மீண்டும் 1 யோவான்-இல் இதைத்தான் அப்போஸ்தலனாகிய யோவான் கூறினார்.

தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும், இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு, உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது. நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின் படி, நடவாமல், பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்.

1 யோவான் 1:5-6

நாம் தேவனிடம் வரும் போது, நாம் ஒளிக்கு வருகிறோம். அங்கே இருளுக்கு இடமில்லை. முன்பதிவு செய்யப்பட்ட இடமுமில்லை மற்றும் உண்மையற்ற தன்மைக்கு இடமில்லை. எல்லாம் திறந்த நிலையிலிருக்க வேண்டும். அவரோடு ஐக்கியப்பட்டவர்கள் என்ற வார்த்தையைக் கவனியுங்கள். ஐக்கியமும் ஆராதனையும் ஒன்றொடொன்று இணைந்து செல்கின்றன. இவற்றிற்கு, நேர்மை, உண்மை, திறந்த மனம் தேவை. நாம் பிதாவை உண்மையில் ஆராதிக்க வேண்டும்.

"ஆவியில்" ஆராதனை செய்வது

"ஆவியில்" ஆராதனை செய்வது என்பதை நாம் புரிந்து கொள்ள, முழு ஆளுமையையும் குறித்து, வேதாகமம் சொல்வதை அறிந்து கொள்ள வேண்டும். வேதத்தின்படி, முழு மனித ஆளுமையும் ஒன்றோடென்று தொடர்புடைய மூன்று கூறுகளைக் கொண்டுள்ளது: ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம் ஆகும். அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேயர் சபைக்கு செய்யும் ஜெபத்தால் தெரிகிறது.

> *சமாதானத்தின் தேவன் தாமே, உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும் போது, குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.*
>
> *1 தெசலோனிக்கேயர் 5:23*

ஆத்துமாவோ, சரீரமோ அல்ல. ஆனால், ஆவிதான் கர்த்தரை ஆராதிக்க வேண்டும்.

சரீரம் என்ன என்று நமக்குத் தெரியும். ஆத்துமா என்பது, சுயம் நான் செய்வேன் நான் செய்யமாட்டேன் அல்லது, நான் நினைக்கிறேன். நான் நினைக்கவில்லை என்பது. அது, சித்தம், அறிவு, உணர்ச்சி, இந்த மூன்றும் அடங்கியது. இந்தப் பகுதிகள் மூன்று எளிமையான

அறிக்கைகளால் வெளிப்படுத்தப்படுகின்றன. "நான் செய்வேன்" "நான் நினைக்கிறேன்" மற்றும் "நான் உணர்கிறேன்". இது மிகவும் எளிமையாக்கப்பட்டது. ஆனால் இதுதான் மனிதனுக்குள் இருக்கும் ஆத்துமாவின் சரியான தோற்றம் என்று நினைக்கிறேன். ஆத்துமாவோ, சரீரமோ அல்ல. ஆனால், ஆவிதான் கர்த்தரை ஆராதிக்க வேண்டும்.

ஆனால் ஆவிக்கு ஒரு உன்னதமான கிரியை உண்டு-தேவனோடு ஈடுபடுவது அல்லது ஒன்றுப்படுவது ஆகும். ஆனால் இந்த மூன்று கூறுகளின் செயல்பாடுகள் மற்றும் பரஸ்பர உறவுகளைப் புரிந்துகொள்ளாவிட்டால் நாம் ஆராதனையை முழுமையாக புரிந்துகொள்ள முடியாது.

என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி... சங்கீதம் 103:1 என்று தாவீது சொல்கிறான். தாவீதின் ஆத்துமாவோடு பேசுவது யார்? அவன் ஆத்துமா, அதற்குள்ளேயே பேசவில்லை. அப்படியானால், கர்த்தரை ஸ்தோத்திரி என்று சொல்வது யார்? அது தான் தாவீதின் ஆவி. அவனுடைய ஆவி சொல்கிறது நாம் இதற்கு ஏதாவது செய்ய வேண்டும். கர்த்தரை ஸ்தோத்திரி. ஆத்துமா, தீர்மானம் எடுக்கிறது. பிறகு சரீரத்திடம் கட்டளையிடுகிறது. ஆவி ஆத்துமாவுக்கு, கட்டளையிடுகிறது. ஆத்துமா, சரீரத்துக்கு கட்டளையிடுகிறது. சரீரம் கிரியை செய்கிறது.

ஆதியாகமம் 2-வது அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்ட மனிதனின் சிருஷ்டிப்பைக் குறித்த தொகுப்பை ஒரு கணம் பார்ப்போம்.

> *தேவனாகிய கர்த்தர், மனுஷனைப் பூமியின் மண்ணினாலே, உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமா வானான்.*
>
> *ஆதியாகமம் 2:7*

மனித ஆளுமைக்கு இரண்டு ஆதாரங்கள் உண்டு. ஒன்று மேலிருந்தும், ஒன்று கீழேயிருந்தும் வருவதாகும். மேலேயிருந்து சுவாசம்,

தேவ ஆவியானவர் மனிதனுக்குள் ஊதப்பட்டார். கீழேயிருந்து, மனுஷனுடைய சரீர சுபாவம் களிமண்ணாலான சரீரம். ஆவியும் களிமண்ணுமாகிய கலவை, ஒரு ஜீவாத்துமாவை உண்டாக்குகிறது. இப்படியாக, மனுஷனில், ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய மூன்று அம்சங்கள் உள்ளது.

ஆனால், மனுஷன் பாவம் செய்து தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்த போது அவனுடைய ஆவி, தேவ ஐக்கியத்திலிருந்து பிரிக்கப்பட்டது. மனுஷன், தேவனுக்கு மரித்தவன் ஆனான். அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த.... **(எபேசி.2:1)** என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது.

மனுஷன், மனந்திரும்பி, விசவாசத்தில் கர்த்தரிடம் திரும்பிய போது, மறுபடியும் பிறப்பதினாலே, அவனுடைய ஆவி புதுபிக்கப்பட்டு, தேவனோடுள்ள ஐக்கியத்தை மறுபடியும் பெற்றான். ஐக்கியமும், ஆராதனையும் கை கோர்த்துச் செல்லுகின்றன. ஆனால், ஆத்துமா அல்ல, சரீரமல்ல, ஆனால், ஆவிதான் தேவனோடு ஐக்கியம் வைக்க முடியும்.

எனவே, மறுபடியும் பிறந்த ஆவியையுடைய மனுஷன் தான் நேரடியாக தேவனுடன் ஐக்கியம் வைக்க முடியும். இயேசு சொன்னார், தேவன் ஆவியாயிருக்கிறார் அவரை தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத்தொழுது கொள்ள வேண்டும். **(யோவான் 4:24)** அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின வார்த்தைகளை வாசியுங்கள்.

> *வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா? இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறதே. அப்படியே, கர்த்தரோடு இசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்.*
>
> *1 கொரிந்தியர் 6:16-17*

ஒரு நபர், இன்னொரு நபருடன் ஐக்கியப்படும் வெவ்வேறு வழிகளைப் பற்றி பவுல் கூறுகிறார். ஒன்று, மாம்சீக வழி, ஒரு ஆணும், ஒரு பெண்ணும் இணைவது. ஆனால், மற்றது ஆவிக்குரிய வழி, ஆவிக்குரிய ஐக்கியம். மனுஷரின் ஆவி, தேவனுடைய ஆவியோடு ஐக்கியம். இது ஒரு அதிசய காட்சி, ஆனால், மிகத்தெளிவானது. ஒரு மனிதன், ஒரு பெண்ணோடு நெருக்கமாக, பாலுணர்வில் ஈடுபடுகிறான். அது போலவே, ஒரு விசுவாசி, கர்த்தரோடு ஆவியில், ஆராதனையின் மூலம் ஐக்கியப்படமுடியும். அது தான், கர்த்தரை ஆவியில் ஆராதிப்பது. ஆராதனை என்பது, தேவனோடு நெருங்கிய உறவு அது தேவனோடு, நேரடித் தொடர்புடையதாகும்.

மனிதனுடைய ஆத்துமாவோ, அல்லது அவனுடைய சரீரமோ, தேவனோடு ஐக்கியம் வைக்க முடியாது. மனிதனுடைய ஆவியே இந்த தனித்துவமான விலையேறப்பெற்ற தேவனோடு உள்ள உறவில், ஐக்கியத்தில் ஈடுபட முடியும். மனிதன் செய்யக் கூடிய உன்னத கிரியை தேவனை, ஆவியோடும், உண்மையோடும் ஆராதிப்பது ஆகும்.

நம்முடைய முழு ஆளுமையும் தேவன் விரும்புகிற படி, அவரோடு இசைந்து போகவேண்டும். உங்களுடைய ஆவி, உங்கள் ஆத்தமா மூலம், தேவனை ஆராதிக்க விரும்பும் போது, ஆத்தமா சரீரத்தின் உதவியில்லாமல், அது ஆராதிக்க முடியாது. அப்படி ஆராதிக்க முடியாத ஆவி, செயலற்ற ஆவி. அந்த ஆவியின் சரீரம், சிறைப்பட்டு செயல்படமுடியாது.

இன்று அநேக கிறிஸ்தவர்களின் பிரச்சனை இது தான். நாம் அவர்களுக்கு வார்த்தையைக் கொடுக்கிறோம். ஆனால், சபையைப் பற்றியும், ஆராதனை பற்றியும், முழுமை பெறாத காட்சியை கொடுக்கிறோம். எனவே, ஜனங்கள், நிஜத்துக்குள் வரும் போது, அவர்கள் அந்நியமாக உணர்கிறார்கள்.

அதிரிஷ்ட வசமாக, நம்மைப் பெறுத்த வரையிலும், கர்த்தர் ஆராதனைக்குரிய ஒரு வரைபடத்தைக் கொடுத்திருக்கிறார். அவர் ஒரு மாதிரியைக் கொடுத்திருக்கிறார். அது நம்மை ஆராதனைக்கு வழிநடத்தும். அதன் மூலம், தேவபிரசன்னத்திற்குள் பிரவேசிக்க முடியும். இந்த மாதிரிதான் "ஆசரிப்புக் கூடாரம்" இருக்கிறது.

உங்களுடைய சரீரம் : ஜலத்தாலும், இரத்தத்தாலும் சுத்திகரிக்கப்படுதல்

மோசேயின் ஆசரிப்புக் கூடாரம், வேதாகம சம்பவங்களிலேயே மிகவும் முக்கியமான ஒன்று, அது என்னை கவர்ந்த ஒன்றாகும். முதலில், அது யாத்திராகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. (25-30 அதிகாரங்கள்) (பிறகு. 35-40 அதிகாரங்கள்). தேவன், ஆசரிப்புக் கூடாரத்துக்காக, 12 அதிகாரங்களை ஒதுக்குகிறார் என்றால், அது முக்கியமான ஒன்றாகத்தான் இருக்க வேண்டும்.

ஆசரிப்புக் கூடாரம் பற்றிப் படிக்கும் ஒவ்வொரு சமயமும், எனக்கு பரிசுத்தத்தின் மேலும், தேவனோடுள்ள ஐக்கியத்தின் மேலும் ஆவல் அதிகரிக்கிறது. இது தான் அதற்கு என் மேல் ஏற்படுத்திய விளைவு. வேதாகமத்தில் வழங்கப்பட்டுள்ள முக்கிய நோக்கங்களில் இதுவும் ஒன்று என்று நான் நம்புகிறேன்.

மகா பரிசுத்த ஸ்தலத்துக்கான வழி

பரிபூரணம், முதிர்ச்சி, முழுமை, நிறைவு, இவற்றிற்கு வழி தான் மகாபரிசுத்த ஸ்தலம். புதிய ஏற்பாட்டில், எபிரெயர் நிருபத்தில் தான் இது விவரிக்கப்படுகிறது. ஆசரிப்புக் கூடாரத்தை, தேவனைத் தேட ஒரு மாதிரியாகப் பயன்படுத்துவது, வேதாகமத்துக்கு இசைந்தது என்று சொல்லப்படுகிறது. "பரிசுத்த ஸ்தலத்திற்குப் போகிற மார்க்கம்" என்று எபிரெயர் 9:8 குறிப்பிடுகிறது.

பூமியிலே இவர் இருப்பாரானால், ஆசாரியராயிருக்க மாட்டார்; ஏனெனில், நியாயப்பிரமாணத்தின்படி, காணிக்கைகளைச் செலுத்துகிற ஆசாரியர்கள் இருக்கிறார்களே; இவர்கள் செய்யும் ஆராதனை, பரலோகத்திலுள்ளனவைகளின் சாயலுக்கும், நிழலுக்கும் ஒத்திருக்கிறது; அப்படியே, மோசே கூடாரத்தை உண்டுபண்ணப் போகையில்: மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின் படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார். (எபிரெயர் 8:4-5)

ஆசரிப்புக் கூடாரம், நம்முடைய உதாரணம். அது வெளிப்படுத்தப்படும் ஆவிக்குரிய சத்தியத்துக்கு ஒரு அத்தாட்சி.

ஐந்தாம் வசனத்தில் உள்ள வார்த்தைகள் "ஆசரிப்புக் கூடாரம்" நம்முடைய உதாரணம் அல்லது "பரலோகக் காரியங்களின் பிரதி அல்லது நிழல்" போன்றவற்றைக் குறிக்கிறது. இது வெளிப்படுத்தும் ஆவிரிக்குரிய உண்மையை பிரதிபலிக்கிறது. பின்னர், எபிரெயர் 9ம் அதிகாரத்தில் அது மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசரிப்புக் கூடாரம், நம்முடைய உதாரணம். அது வெளிப்படுத்தப்படும் ஆவிக்குரிய சத்தியத்துக்கு ஒரு அத்தாட்சி.

> *ஆதலால், பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள், இப்படிப்பட்ட பலிகளினாலே, சுத்திகரிக்கப்பட வேண்டியதாயிருந்தது. பரலோகத்திலுள்ளவைகளோ, இவைகளிலும், விசேஷித்த பலிகளாலே, சுத்திகரிக்கப்பட வேண்டியதாமே. அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால், செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே, கிறிஸ்துவானவர், பிரவேசியாமல், பரலோகத்திலே தானே இப்பொழுது நமக்காகத்*

தேவனுடைய சமுகத்தில், பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்.

எபிரெயர் 9:23-24

ஆசாரிப்புக் கூடாரம், சர்வ வல்லமையுள்ள தேவனின் பிரசன்னத்துக்குள் செல்லும் வழியை ஒரு மாதிரியாகக் காட்டுகிறது. அது தடவிக் கொண்டு செல்வது அல்ல. நாம் விரும்புவதை அல்லது நினைப்பதைச் செய்வதும் அல்ல. மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்க, அங்கீகரிக்கப்பட்ட வழி இருக்கிறது. அது பல பகுதிகளாகக் காட்டப்பட்டுள்ளன.

ஆசரிப்புக் கூடாரத்தில் மூன்று பகுதிகள் இருக்கின்றன: வெளிப்பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், (முதல் திரைச் சீலைக்குப் பின்), மற்றும் இரண்டாவது திரைக்கு பின்னால், மகா பரிசுத்த ஸ்தலம் இருக்கிறது. இந்த அமைப்பு முக்கியமானது. அது தேவனுடைய சுபாவத்தை சித்தரிக்கிறது - பிதா, குமாரன், பரிசுத்த ஆவி. அது பரலோக வாசிகளின் சுபாவத்தைக் காட்டுகிறது. பவுல் மூன்றாம் வானம் மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டார் - **(2 கொரி.12:2)**. அது மனிதனுடைய சுபாவத்தையும் காட்டுகிறது - சரீரம், ஆத்துமா, ஆவி.

இந்த இடங்களை அடையாளம் காண ஒரு வகையான வெளிச்சம் இருக்கிறது. வெளிப்பிரகாரத்தில், இயற்கை வெளிச்சம் பகலில் சூரியனும், இரவில் சந்திரனும், நட்சத்திரங்களும் ஆகும். முதல் திரைக்குப் பின்னால் பரிசுத்த ஸ்தலத்தில், செயற்கையான வெளிச்சம் இருக்கிறது. அது ஏழு பிரிவுள்ள, குத்துவிளக்கு வெளிச்சம். ஆனால், இரண்டாவது, திரைச்சீலைக்கு பின்னாலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்தில், இயற்கை வெளிச்சமும் இல்லை, செயற்கை வெளிச்சமும் இல்லை. சர்வ வல்லமையுள்ள தேவன் தான் வெளிச்சத்தைக் கொடுக்கிறார். அந்த தேவபிரசன்ன வெளிச்சம், எபிரேய மொழியில் **ஷெக்கினா** என்று அழைக்கப்படுகிறது. அதற்கு, வசித்தல் - தேவ மகிமை என்று அர்த்தம். மகா பரிசுத்த ஸ்தலத்தில் அது ஒன்றுதான்

வெளிச்சம், அங்கே சர்வ வல்லமையுள்ள தேவன் மனுஷர் மத்தியில் வாசம் செய்கிறார்.

இந்த மூன்று பகுதிகள், நம்முடைய அனுபவத்தில், பல பகுதிகளைக் காட்டுகின்றன. அவை சரீரம், ஆத்துமா, ஆவி. நாம் தேவனை, சரீரம் அல்லது ஆத்துமாவால் ஆராதிப்பதில்லை. ஆனால், ஆவியால் ஆராதிக்கிறோம். வெளிப்பிரகாரம் சரீரத்தைக் காட்டுகிறது. பரிசுத்தஸ்தலம் தான் நம்முடைய ஆத்துமா, மகாபரிசுத்த ஸ்தலம், ஆவியைக் குறிக்கிறது. அந்த ஆவியின் மூலமாகத் தான் நாம் தேவனை ஆராதிக்கிறோம். எனவே, ஆராதனை நடக்கும் இடம் மகா பரிசுத்தஸ்தலம். இது இரண்டாவது திரைச்சீலையின் பின்னால் இருக்கிறது.

ஒரு நபர் ஆராதனையில் எவ்வாறு பங்கு கொள்கிறான்? ஆசாரிப்புக் கூடாரத்தின் செயல்பாடுகளை மாதிரியாகக் கொண்டு தான் ஆராதனை செய்கிறான் - வெளிப்பிரகாரம், பரிசுத்தஸ்தலம் மற்றும் மகா பரிசுத்தஸ்தலம்.

வெளிப்பிரகாரம்

ஆசரிப்புக் கூடாரத்துக்குப் போகு முன், ஒரு நபர் முதலில் வெளிப்பிரகாரம் போகிறான். அதே போல் நாம் தேவனை அணுகுமுன், நாம் எப்போதுமே, சரீரப்பிரகாரமான உலகில் பிரவேசிக்கிறோம். இது சரீரத்தைக் காட்டுகிறது. இயேசு பூமியிலிருந்த நாட்களில், அவரது வாழ்க்கையைக் காட்டுகிறது. அவர், கலிலேயா எருசலேம் தெருக்களில் நடந்து திரிந்தார். அவருடைய சரீரத்தை பார்க்க, தொட்டு உணர, அவர் பேசுவதைக் கேட்க முடிந்தது. இப்படியாக, வெளிப்பிரகாரத்தில், நாம் இயற்கை புலன்கள் மூலம் வெளிப்பாடு பெறுகிறோம்.

ஆசரிப்புக் கூடார வெளிப்பிரகாரத்தில், ஒரு பெரிய வெண்கல பலிபீடம் இருந்தது. ஒரு போதகர் என்னிடம், அந்த பலிபீடத்தின்

பக்கங்கள் எல்லாம், மெருகேற்றப்பட்ட வெண்கலத்தால் மூடப்பட்டிருந்ததாகச் சொன்னார். அதை நீங்கள் பார்த்தவுடன் உங்கள் உருவம் அதில் தோன்றும். இந்த பலிபீடத்தில் தான் சகல விலங்குகளும் கொல்லப்பட்டு, கர்த்தருக்கு பலியிடப்பட்டன. நம்மைப் பொறுத்த வரை, பலிபீடம், நம்முடைய சார்பில் இயேசு பலியானதைக் காட்டுகிறது. அவர் சிந்திய இரத்தத்தைக் காட்டுகிறது. அதன் மூலம், நாம் இரட்சிக்கப்பட்டு, தேவனோடு ஒப்புரவாக்கப்படுகிறோம். அது தான் ஆரம்பநிலை. நாம் சிலுவையைக் கடந்து செல்ல முடியாது.

நாம் சிலுவையில் ஆரம்பித்து, நமது சார்பில் பலியான இயேசுவின் அநுகூலங்களை பெற்றபிறகு தான், சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்தின் பலன்களை அனுபவித்த பிறகு தான் ஆராதனையில் பங்கு கொள்ள முடியும்.

வெண்கல பலிபீடத்தின் நான்கு பக்கங்கள்

வெண்கல பலிபீடத்துக்கு நான்கு பக்கங்கள் உண்டு. அவைகள் கிறிஸ்து சிலுவை மரணத்தின் மூலம் உருவான நான்கு ஈவுகளை குறிக்கிறது. முதலாவதாக, பழைய பாவங்களை மன்னிப்பது. இது முக்கியமானது. உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படவில்லையென்றால், நீங்கள் மேற்கொண்டு முன்னேற முடியாது. இது குறித்து ரோமரில் கொடுக்கப்பட்டுள்ளது.

> *தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில், நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக் கொண்டதைக் குறித்துத் தம்முடைய (தேவனுடைய) நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில், விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும்.*
>
> *ரோமர் 3:25*

அடுத்த பக்கம் பாவத்தை அகற்றுவதை காட்டுகிறது.

பன்மையில் சொல்லப்பட்ட பாவங்களுக்கும், ஆவிக்குரிய சக்தியாகிய பாவத்துக்கும் இடையில் முக்கிய வித்தியாசம் உண்டு. பாவம், பாவங்களின் ஆதாரமாக இருக்கிறது. நாம் பாவங்களை கையாளும் போது, நாம் மரத்தின் கிளைகளை மட்டும் பார்க்கிறோம். இது மரத்தின், அடிமரத்தோடு ஈடுபடுவதில்லை. அடிமரம் தான் கிளைகளுக்கு உணவு கொடுக்கிறது.

நாம் அவருக்குள் (இயேசுவுக்குள்) தேவனுடைய நீதியாகும் படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.

2 கொரிந்தியர் 5:21

இங்கே, ஒரு பரிமாற்றம் நிகழ்கிறது. நம்முடைய எல்லா பாவங்களோடும், இயேசு பாவமாக்கப்பட்டார். அதனால் அவருடைய நீதியின் மூலம், நாம் நீதிமான்களாக்கப்படுவோம். அது பாவங்கள் அல்ல பாவம் ஆகும். அது அங்கே சரி செய்யப்படுகிறது. எபிரெயரில் வாசிக்கிறோம்.

அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபட வேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல அவர் தம்மைத் தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக் காலத்தில் ஒரே தரம் வெளிப்பட்டார்.

எபிரெயர் 9:26

இயேசு மரித்த போது, நம்முடைய பழைய மனுஷன் அவருடன் மரித்தான். நீங்கள் அதை அறிந்தால், அதன் மேல் நம்பிக்கை வைத்தால், அது கிரியை செய்கிறது.

கிறிஸ்து ஒரு முறை மட்டும் பாடுபட்டார், ஏனெனில், பாடுபட்டதின்

மூலம், அவர் செய்ய வேண்டியதையெல்லாம் செய்து முடித்தார்.

பலிபீடத்தின் மூன்றாவது பக்கம், நம்முடைய பழைய, அழிவுக்கேதுவான சுபாவத்தை வெளிப்படுத்துகிறது - நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் முரட்டாட்டம். நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். (ரோமர் **6:6**) இங்கே, கிரேக்க மொழியில் இறந்த காலத்தில் இருக்கிறது. இது ஒரு வரலாற்று உண்மை. அது உங்களுக்குத் தெரியாவிட்டால், அதிலிருந்து, உங்களுக்கு எந்த அனுகூலமும் கிடையாது.

> *நாம் இனிப்பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக ...நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.*
>
> *ரோமர் 6:6*

பாவம் செயலற்றதாக்கப்பட்டது. பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து தப்பிக்க ஒரேவழி, பழைய பாவ சுபாவம் மரிப்பதின் மூலம் தான். பழைய மனிதன் நம்பிக்கையற்றவன். எனவே, கர்த்தர் நிவிர்த்தி செய்ய முடியாது. கர்த்தர் அவனை மறுபடியும் சபைக்கு அனுப்பி, பத்துக்கட்டளைகளை போதிக்க முடியாது. கர்த்தர் அவனுக்கு மரணதண்டனை அளிக்கிறார். இது ஒன்று தான் பழைய மனிதனுக்கு - பழைய ஆதாமுக்கு, நிவிர்த்தியாகும்.

தேவனுடைய கிருபை என்பது இந்த மரணதண்டனையை இயேசுவின் மேல், சிலுவையில் நிறைவேற்றியது. இயேசு மரித்த போது, பழைய மனுஷனும் அவரில் மரித்தான். நீங்கள் அதை அறிந்து, அதன்மேல் நம்பிக்கை வைத்தால், அது கிரியை செய்யும். நீங்கள் அதை அறியாவிட்டால், அதன் மீது நம்பிக்கை வைக்க முடியாது, அது கிரியை செய்யாது. எனவே, அறிதல் மற்றும் நம்பிக்கை வைத்தல், இவை தான் கிரியையை செய்ய வைக்கிறது.

நான்காவது பக்கம், இங்கே தான் நாம் நம்மை கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்கிறோம். இது தான் சர்வாங்க தகன பலி. இந்த பலியில், பலிபொருள் முற்றிலுமாக எரிக்கப்படும். லேவியராகமத்தில், பலியின் ஒழுங்கை பார்க்கும் போது, அது இயேசுவுக்கு மாதிரியாக இருக்கிறது. முதல்பலி, சர்வாங்க தகன பலி. ஏனென்றால், மனிதனோ, பாவியோ, அல்ல, ஆனால், கர்த்தரே முதலில் ஆரம்பிக்கிறார். **(லேவி:1:3)** தேவ சித்தப்படி, இயேசு, சர்வாங்க தகனப் பலியாக்கப்பட்டதால், வேறொன்றும் பலியிடப்பட முடியாது. என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தம் என்று இயேசு சொல்லாதிருந்தால், **(மத்.26:39)**, மற்றெதுவும் நடைபெறாது.

ஆசரிப்புக் கூடார விஷயத்தில், வேதம் சொன்னதில், கடைசியிலிருந்து ஆராய்வோம். வேதம், உடன்படிக்கை பெட்டியிலிருந்து ஆரம்பிக்கிறது. ஏனென்றால், இரட்சிப்பு, விடுதலை இவை கர்த்தரிடமிருந்து தொடங்குகிறது. மனிதனிடமிருந்தல்ல. தேவன் விரும்பாவிட்டால், ஒன்றும் நடைபெறாது. இயேசு, சிலுவையில், ஆரம்ப தகன பலியாக இல்லாதிருந்தால், உங்களுக்கும் எனக்கும் இரட்சிப்பு கிடைத்திருக்காது. நம்மைப் பொறுத்த வரை, இந்த ஒழுங்கு திருப்பப்பட்டிருக்கிறது. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப் பட்டிருக்க வேண்டும். பாவம் அகற்றப்பட வேண்டும். பழைய சுபாவம் சிலுவையில் அறையப்பட வேண்டும். பிறகு, நாம், தேவனுக்கேற்ற சர்வாங்க தகனப் பலியாக ஒப்புக் கொடுக்க முடியும். இது ரோமர் **12:1**இல் சொல்லப்படுகிறது. அது, "அப்படியிருக்க சகோதரரே" என்று ஆரம்பிக்கிறது. இது முந்தைய பதினொரு அதிகாரங்களில் உள்ள நற்செய்தி உண்மையின் முழு வெளிப்படுத்தலைக் குறிக்கிறது.

இவை அனைத்தும் தீர்க்கப்பட்ட பிறகு, தேவன் நம்மிடமிருந்து என்ன எதிர்ப்பார்க்கிறார்**?**

> *அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான*

ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன்; இதுவே, நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.

ரோமர் 12:1

நீங்கள், பலிபீடத்தின் மூன்று பக்கங்களிலும் செல்லாவிட்டால், நீங்கள் கர்த்தருக்கு ஏற்புடையவர்களாயிருக்கமாட்டீர்கள். பிறகு கர்த்தர் சொல்கிறார். எனக்கு உங்கள் சரீரம் வேண்டும். வெகுசிலரே, இதை உணர்கிறார்கள். கர்த்தர் நம் முழு சரீரங்களையும் கேட்கிறார். பழைய உடன் படிக்கையில், கொல்லப்பட்ட விலங்குகளின் முழு சரீரங்களும் பலிபீடத்தில் வைக்கப்பட்டன. கர்த்தர் சொல்கிறார். இதே விதமாக, உங்களுடைய சரீரங்களும் பலிபீடத்தில் வைக்கப்பட வேண்டும். - ஒரு வித்தியாசம், "செத்த சரீரமாக அல்ல, ஆனால், ஜீவனுள்ள சரீரமாக!"

அடுத்த வசனம் தொடர்கிறது,

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

ரோமர் 12:2

நீங்கள் உங்கள் சரீரங்களை, பலிபீடத்தில் வைக்கும்வரை, நீங்கள் தேவசித்தத்தை அறியமாட்டீர்கள். அப்படிச் செய்யும் போது, உங்கள் மனம் புதியதாகும். தேவ சித்தம் உங்களுக்கு வெளிப்படுத்தப்படும். ஆனால், நீங்கள் பலிபீடத்தின் நான்கு பக்கங்களுக்கும் போகும் வரை, நீங்கள் மேலும் முன்னேற முடியாது. முதலாவது, கடந்த கால பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. பிறகு கர்த்தர் அவற்றை அகற்றிவிடுவார். அடுத்து, பழைய மனுஷன் மரண தண்டனை பெறுகிறான். பிறகு, முழு சரீரமும், பலிபீடத்தில்

வைக்கப்படுகிறது. அது முதல் உங்கள் சரீரம் உங்களுக்குரியது அல்ல. நீங்கள் கிரயத்துக்கு வாங்கப்பட்டீர்கள். (1 கொரிந்தியர் 6:19-20).

வெண்கலத் தொட்டி

யாத்திராகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளது போல அடுத்து வெண்கலத் தொட்டியை காணலாம்.

வெகுசிலரே, இதை உணர்கிறார்கள். கர்த்தர் நம் முழு சரீரங்களையும் கேட்கிறார்.

> *பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி; கழுவுகிறதற்கு வெண்கலத்தால் ஒரு தொட்டியையும், வெண்கலத்தால் அதின் பாதத்தையும் உண்டாக்கி, அதை ஆசரிப்புக் கூடாரத்திற்கும், பலிபீடத்திற்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்ப்பாயாக. அதனிடத்தில், ஆரோனும் அவன் குமாரரும், தங்கள் கைகளையும், தங்கள் கால்களையும் கழுவக்கடவார்கள். அவர்கள் சாகாதபடிக்குத் தங்கள் கைளையும், தங்கள் கால்களையும் கழுவக்கடவர்கள்; இது தலைமுறைதோறும் அவனுக்கும் அவன் சந்ததியாருக்கும் நித்திய கட்டளையாயிருக்கும் என்றார்.*
>
> *யாத்திராகமம் 30:17-21*

எனவே, ஆசரிப்புக் கூடாரம், பலிபீடத்தில் இருந்து, அதற்கு மத்தியில் தொட்டி இருந்தன. தொட்டிக்கு, விருப்பப்படி போக முடியாது. ஆசரிப்புக் கூடாரத்துக்குப் போகிறவர்கள், வருகிறவர்கள் ஒவ்வொருவரும் செய்ய வேண்டும். தொட்டியில் கழுவாமல், ஒருவரும் கடந்து செல்லக்கூடாது. அப்படிச் செய்தால், மரண தண்டனை. எனவே, தொட்டியின் மேல் முக்கியத்துவம் வைக்கப்பட்டது.

வெண்கலத்தொட்டி, கர்த்தருடைய வார்த்தையை குறிக்கிறது. யாத்திராகமத்தின் பிற்பகுதியில் வாசிக்கலாம்,

ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலில், கூட்டங் கூட்டமாய்க் கடின ஸ்தீரிகள் தர்பணங்களாலே, வெண்கலத் தொட்டியையும், அதன் வெண்கலப் பாதத்தையும் உண்டாக்கினான்.

யாத்திராகமம் 38:8

கர்த்தருடைய வார்த்தை, வெளியான சரீர தோற்றத்தைப் பிரதிபலிக்காது. அது உள்ளான, ஆவிக்குரிய நிலையைப் பிரதிபலிக்கிறது.

பித்தளை, இஸ்ரவேல் ஸ்திரீகளின் முகம்பார்க்கும் கண்ணாடியிலிருந்து எடுக்கப்பட்டது. அந்த காலத்தில் கண்ணாடி இல்லை. பித்தளையை நன்றாக தேய்த்து, பாலிஷ் செய்து, அது கண்ணாடியாகப் பயன்படுத்தப்பட்டது. எனவே, தொட்டியில் மூன்று பாகங்கள் இருந்தன. அது கண்ணாடியிலிருந்து வந்தது. அது பித்தளையால் செய்யப்பட்டது. அது தண்ணீரால் நிரப்பப்பட்டது. இது தேவ வார்த்தையைக் குறிக்கின்றன.

முதலாவது கர்த்தருடைய வார்த்தை ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி:-

என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும், அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே, தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்.

யாக்கோபு 1:23

கர்த்தருடைய வார்த்தை, வெளியான சரீர தோற்றத்தைப் பிரதிபலிக்காது. அது உள்ளான ஆவிக்குரிய நிலையை வெளிப்படுத்துகிறது. தேவனுடைய பார்வையில், நீங்கள் எப்படியிருக்கிறீர்கள் என்று நீங்கள் பார்க்க விரும்பினால், கண்ணாடியைப் பாருங்கள். வேதாகமத்தை எவ்வளவுக்கு அதிகமாக நான் படிக்கிறேனோ, அவ்வளவுக்கு, நான் பூரணமற்ற நிலையைப்

பார்க்கிறேன். நீங்கள், ஒரு கண்ணாடியில் பார்க்கும் போது, நீங்கள் இரண்டு காரியங்களை பார்க்கலாம். நீங்கள் அதில் தோன்றுகிறபடியல்ல, என்று சொல்லி வெளியே நடந்து விடுகிறீர்கள். அல்லது, நீங்கள் அதை வைத்து நடவடிக்கை எடுக்கிறீர்கள். தேவையான மாற்றங்களை செய்கிறீர்கள். அப்போது, நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். அப்படியானால், உங்கள் செய்கைக்குத்தக்க ஆசீர்வாதம் இருக்கும் என்று யாக்கோபு சொன்னார். நினைவுகூருங்கள் வசனத்தை கேட்கிறவர்களாக அல்ல, அதன்படி செயல்படுகிறவர்களாக இருங்கள்.

இரண்டாவதாக, தேவ வார்த்தை நம்மை நியாயந்தீர்க்கிறது. அது நமது நீதிபதி, பித்தளை தெய்வீக ஆய்வையும், நியாயத்தீர்ப்பையும் குறிக்கிறது. தேவன் உங்களைப் பார்க்கிறார், மறைவானது எதுவுமில்லை, எல்லாமே வெளியரங்கமாகவும், கர்த்தருடைய கண்களுக்குத் திறந்திருக்கிறதாகவும் இருக்கிறது. யோவான் 12இல், இயேசு சொன்னதாவது,

> *ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற் போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை. நான் உலகத்தை நியாயத்தீர்க்க வராமல், உலகத்தை இரட்சிக்க வந்தேன். என்னைத் தள்ளி, என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்.*
>
> *யோவான் 12:47-48*

முதலில், பிதாவாகிய தேவன் நீதிபதி என்று பேதுரு சொல்கிறார். (1 பேதுரு 1:17) பிதா நியாயந்தீர்க்கும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டார் (யோவான் 5:22) என்று யோவான் சொல்கிறார். ஆனால், யோவான் 12இல், இயேசு, "நான் உங்களை நியாயந்தீர்ப்பதில்லை. நியாயந்தீர்க்கும் அதிகாரம்

முழுவதையும் வார்த்தைக்கு ஒப்புக்கொடுத்துவிட்டேன்" என்று கூறுகிறார்.

மேலும், நியாயந்தீர்ப்பு வார்த்தையின் தரத்தால் செயல்படுத்தப்படும். இது தெய்வீக தீர்ப்பின் முழுமையான தரமாகும். இது நம்மை நாமே தீர்ப்பதற்கு ஆசீர்வதிக்கப்பட்ட வாய்ப்பை வழங்குகிறது. "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்" **(1 கொரிந்தியர் 11:31)** நாம் யாரால் நியாயந்தீர்க்கப்பட மாட்டோம்**?** தேவனால். தேவன் சொல்கிறார், "கண்ணாடியைப் பார்த்து உன்னை நீயே தீர்ப்பளித்தால், நான் உன்னை நியாயந்தீர்க்க வேண்டியதில்லை.

வெண்கலத் தொட்டியின் மூன்றாவது அம்சம் தண்ணீர் ஆகும், அதுதான் சுத்தம் செய்யும் தேவனுடைய வார்த்தையாகும்.

> *அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.*
>
> *எபேசியர் 5:25-27*

இந்த பகுதி, சிலுவையைப் பற்றிச் சொல்கிறது. கிறிஸ்து, தம்மைத்தாமே அதில் பலியாக்கினார். இங்கே தண்ணீரால் கழுவுதல், வார்த்தையால் நிறைவேற்றப்படுகிறது. அவர்தம் இரத்தத்தால், இரட்சித்ததை, அவர் கழுவி சுத்திகரிக்கிறார். கிறிஸ்து, சபையை தம்முடைய இரத்தத்தால் இரட்சித்தார். அதை தண்ணீராகிய அவருடைய வார்த்தையால் பரிசுத்தப்படுத்துவார். பரிசுத்தமாக்குதல், பரிசுத்தம், தேவனுடைய சித்தம் நிறைவேறுதல் இவை, சிலுவையில் இயேசுவின் இரத்தத்தை சார்ந்திருக்கிறது. தொட்டிக்கு வந்தும், அதில் சுத்திகரிக்காதவர்கள், மரண தண்டனை பெறுவார்கள். சிலுவையில் கிறிஸ்துவின் இரத்தத்தால் நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கக் கூடும். ஆனால், நீங்கள் வார்த்தையால் கழுவப்படாதிருந்தால், நீங்கள்

பரிசுத்தமாக்கப்படமாட்டீர்கள். வார்த்தையை படிக்காத விசுவாசி, அதற்கு கீழ்ப்படியாதவர்கள், கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாவதில்லை.

> *இயேசு கிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும், இரத்தத்தினாலும் வந்தவர். ஜலத்தினாலே மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர். ஆவியானவர் சத்தியமாகையால் ஆவியானவரே சாட்சி கொடுக்கிறவர்.*
>
> *1 யோவான் 5:6*

இயேசு, ஜலத்தினால், பெரிய போதகராக வந்தார். ஆனால், இரட்சகராக, இரத்தம் சிந்த வேண்டியிருந்தது. இரத்தம் சிந்துதல் இல்லாமல், பாவ மன்னிப்பு இல்லை. இரட்சிப்பு இல்லை. (எபி.9:22). அவர்தம் இரத்தம் சிந்தினபடியால், அவர் ஜலத்தினாலும், வார்த்தையாலும், உங்களை கழுவி, பரிசுத்தமாக்குவார். அவர், ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தார்.

உங்களுடைய ஆத்துமா: ஆராதனைக்கு உணர்ச்சியான ஓர் அணுகுமுறை

நாம், மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் நம்முடைய பயணத்தைத் தொடர்கிறோம். தேவன், மோசேயிடம், பரலோக சத்தியங்களையும் யதார்த்தங்களையும், பூமிக்குரிய மாதிரியாகக் கொடுத்தார். ஆனால், புதிய உடன்படிக்கையில், இயேசுவின் மூலமாகத்தான், பரலோகத்தில் பிரவேசிக்க முடியும். இது பழைய ஏற்பாட்டில் மாதிரியாகக் காட்டப்பட்டது.

இப்பொழுது, நாம், வெளிப்பிரகாரத்திலிருந்து, பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கப்போகிறோம். சரீர உலகத்திலிருந்து, ஆத்துமாவின் உலகத்திற்குள்ளே, அல்லது உணர்ச்சி உலகத்துக்குள் பிரவேசிக்கப் போகிறோம். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கைத் தொடர்பாக, அவர் பூமியில் நடந்து திரிந்த இடத்திலிருந்து மரணத்துக்குப்பின், உயிர்த்தெழுதல் மூலம், நாம் வெளியே வருகிறோம்.

> *பிழைத்திருக்கிறவர்கள், இனித் தங்களுக்கென்று, பிழைத்திராமல் தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம். ஆகையால், இது முதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி,*

அறியோம். நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்.

2 கொரிந்தியர் 5:15-16

இயேசு மரித்தது மட்டுமல்ல, ஆனால், அவர் உயிர்த்தெழவும் செய்தார். நாம் மாம்சீக அறிவிலிருந்து, வெளிப்பாடுகள் தருகிற பரிசுத்த ஆவிக்குள் செல்லப் போகிறோம்.

முதலாவது திரைச்சீலை

வெளிப்பிரகாரத்திலிருந்து, நாம் முதலாவது திரைச்சீலை வழியாக பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்க வேண்டும். இது இயேசுவின் உயிர்த்தெழுதலைக் காட்டுகிறது என்று நம்புகிறேன். நாம் திரைச்சீலை வழியாகப் பிரவேசிக்கும் போது, இயேசுவின் உயிர்த்தெழுதல் மூலமாக, திறக்கப்பட்ட ஒரு இடத்துக்குள் நாம் பிரவேசிக்கிறோம். இது நம்மை கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலோடு, ஐக்கியப்படுத்துகிறது.

நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்த துண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில், வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்.

கொலோசெயர் 3:1

நாம் கிறிஸ்துவோடு கூட மரித்தோம். ஆனால், கிறிஸ்துவோடு கூட உயிர்த்தெழுந்தோம் என்று வேதம் சொல்கிறது.

பரிசுத்த ஸ்தலம்

இந்த பரிசுத்த ஸ்தலத்தில், மூன்று முக்கிய பொருட்கள் இருந்தன. சமூகத்தப்ப மேசை, குத்துவிளக்கு, தூபவர்க்க பொன்னானலான பலிபீடம். இது நம்முடைய ஆத்துமாவின் கிரியைகளை விவரிக்கிறது என்று நம்புகிறேன்.

சமூகத்தப்பம்

சமூகத்தப்ப மேஜை மனிதனுடைய சித்தத்தைக் குறிக்கிறது. வேதத்தில், அது ஆத்துமாவின் பெலனைக் குறிக்கிறது. அறிவில் இல்லை, உணர்ச்சிகளில் இல்லை, ஆனால் அதன் சித்தத்தில் இருக்கிறது. உங்களுக்கு சிறந்த அறிவு இருக்கலாம். அல்லது மிகவும் உணர்ச்சியுடையவராய் இருக்கலாம். ஆனாலும், மிகவும் பெலவீனமாக இருக்க கூடும். நான் பிரசங்கிக்கும் போது, நான் ஜனங்களின் உணர்ச்சியை எழுப்புவதில்லை, நான் அவர்களுடைய சித்தத்தைத் தொட்டு, மாற்ற விரும்புகிறேன். ஜனங்களின் உணர்ச்சியை தட்டி எழுப்புவது இலேசானது, ஆனால், அவர்களுடைய சித்தத்தை மாற்றாவிட்டால், அதனால், பயனில்லை. அது நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும். எனவே, மேஜையின் மேலுள்ள சமூகத்தப்பம், மனித சித்தத்தைக் காட்டுகிறது.

சங்கீத புத்தகத்தை குறிப்பிடுகையில் நாம் கையாளும் இந்தப்பகுதியில் ஒரு முக்கிய வசனம் உள்ளது.

> *பூமியிலிருந்து ஆகாரம் உண்டாகும்படி அவர் மிருகங்களுக்குப் புல்லையும், மனுஷருக்கு உபயோகமான பயிர் வகைகளையும், முளைப்பிக்கிறார். மனுஷனுடைய இருதயத்தை மகிழ்ச்சியாக்கும் திராட்ச ரசத்தையும் அவனுக்கு முகக்களையை உண்டுபண்ணும் எண்ணெய்யையும் மனுஷனுடைய இருதயத்தை ஆதரிக்கும் ஆகாரத்தையும் விளைவிக்கிறார்.*
>
> *சங்கீதம் 104:14-15*

திராட்சரசம், உணர்ச்சிகளுக்காகவும், எண்ணெய் அறிவுக்காகவும், சமூகத்தப்பம் சித்தத்தைக் குறிக்கிறது.

இங்கே, கர்த்தர் மனுஷனின் ஆத்துமாவுக்கு மூன்று பொருட்களைக் கொடுக்கிறார். திராட்சரசம், உணர்ச்சிகளுக்காகவும், எண்ணெய் அறிவுக்காகவும், முகக்களை என்பது வெளிச்சத்தை குறிக்கிறது. சமூகத்தப்பம் சித்தத்தைக் குறிக்கிறது. கர்த்தரின் ஈவுகள்: தானியம், எண்ணெய், திராட்ச ரசம் போன்றவையாகும். யோவேல் - 1ல் தேவ ஜனங்கள் கர்த்தரை விட்டுவிட்டதனால், மூன்று ஈவுகளை இழக்கிறார்கள். தேவனுடைய பிரசன்னத்தை இழக்கிறார்கள். யோவேல் - 2ல், கர்த்தர் தன் ஆவியை ஊற்றுவேன் என்று கூறுகிறார். ....இதோ, நான் உங்களை இனிப் புறஜாதிகளுக்குள்ளே... உங்களுக்குத் தானியத்தையும், திராட்ச ரசத்தையும், எண்ணெய்யையும் கொடுத்தேன். நீங்கள் அதினால் திருப்தியாவீர்கள். யோவேல் 2:19 தானியம், சித்தத்தின் பெலத்தையும், தேவனுடைய வார்த்தையையும் குறிக்கிறது. எண்ணெய், பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது. திராட்சரசம், கர்த்தரின் மகிழ்ச்சியைக் குறிக்கிறது. நாம் கர்த்தரிடம் திரும்பினால், இவற்றை நமக்கு அருளுவார்.

நம்முடைய சித்தத்தை, தேவ சித்தத்துடன் இணைக்கும் போது, அது நம்முடைய ஆத்துமாவுக்கு பெலத்தையும், நோக்கத்தையும் கொடுக்கிறது.

கிறிஸ்துவே சித்தத்தின் மாதிரியை காட்டுகிறார்.

ஆகையால், அவர் உலகத்தில் பிரவேசிக்கும் போது; பலியையும், காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்; சர்வாங்க தகனபலிகளும், பாவ நிவாரண பலிகளும், உமக்குப் பிரியமான தல்ல என்றீர். அப்பொழுது, நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன். புஸ்தகச் சுருளில், என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்.

எபிரெயர் 10:5-7

கிறிஸ்துவின் சரீரமே, ஒரு நோக்கத்துக்காக, ஆயத்தப்படுத்தப்பட்டது: தேவ சித்தம் செய்வதற்காக அதேபோல், நமக்கு சரீரம் இருப்பதன் நோக்கம். தேவ சித்தம் செய்வதற்காக மற்றவையெல்லாம் இரண்டாந்தரமானவை.

> *நான் என் சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே, நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது.*
>
> *யோவான் 5:30*

இது ஒரு முக்கியமான விதி. உங்கள் சொந்த சித்தத்தை நாடாதிருந்தால் நீங்கள் நியாயமாக நியாயந்தீர்க்கலாம் - உங்கள் பகுத்தறிவு சரியானதாக இருக்கலாம். நீங்கள், பிதாவின் சித்தத்தை நாடும் போது, நீங்கள், வஞ்சிக்கப்படாமல் இருக்கலாம். உங்களுக்கு உணர்திறன் இருக்கும், உங்களுக்கு பகுத்தறிவு இருக்கும். நீங்கள் நியாயந்தீர்க்கலாம். ஆனால், உங்கள் சொந்த சித்தப்படி செய்தால், நீங்கள் வழி தவறிப்போகக்கூடும்.

மத்தேயுவில் ஒரு பகுதியில் இந்த கருத்தின் இறுதி உறுதிப்பாட்டைக் காணலாம். .....என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு, நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும், என் சித்தத்தின்படியல்ல. உம்முடைய சித்தத்தின் படியே ஆகக் கடவது, என்று ஜெபம் பண்ணினார். மத்தேயு **26:39** இங்கே, இயேசு, தம்மை பிதாவின் சித்தத்துக்கு முற்றிலும் ஒப்புக் கொடுப்பதைப் பார்க்கலாம். அது போல நாமும், நம்முடைய சித்தத்தை பிதாவின் சித்தத்துக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும்.

பிதாவின் சித்தத்துக்கு, ஒப்புக் கொடுத்தபடியால், இயேசு பெலனடைந்தார். சமாரிய ஸ்திரீயை கிணற்றின் அருகே சந்தித்தப் பிறகு அவர் தம்முடைய சீஷர்களுக்கு பேசிய உரையாடலில் இதை காணலாம்.

இப்படி நடக்கையில் சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, போஜனம்பண்ணும் என்று வேண்டிக் கொண்டார்கள். அதற்கு அவர்; நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு என்றார். அப்பொழுது சீஷர்கள், ஒருவரையொருவர் பார்த்து: யாராவது அவருக்குப் போஜனம் கொண்டு வந்திருப்பானோ என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து, அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது.

யோவான் 4:31-34

இயேசு, கிணற்றருகில், உட்கார்ந்திருந்த போது, பெலவீனமாயிருந்தார். ஆனால், அவர் சமாரிய ஸ்திரீயிடம் சாட்சி சொல்லி, தேவ சித்தம் செய்த போது, அது அவருக்கு சரீர பெலத்தைக் கொடுத்தது. அவருக்கு உடனே பசி வரவில்லை. நமக்கும் இது பொருந்தும். தேவசித்தம் செய்தால், நமக்கு பெலன் கிடைக்கும். அது நம் ஆத்துமாவுக்கும் பெலம் கொடுக்கும்.

சமூகத்தப்பம் என்பது எழுத்துப் படியான மொழிபெயர்ப்பல்ல. அது முகத்தின் அப்பம் என்று இருக்கிறது. யாருடைய முகம்? அது எப்போதும் தேவனுடைய முகத்துக்கு நேராக இருக்கும். எண்ணாகமத்தில், இது "நித்திய அப்பம்" என்று அர்த்தம். (எண்.4:7). இது தொடர்ச்சியாக, இரவு பகலாக தேவனுடைய முகத்துக்கு நேராக வாரத்துக்கு ஏழு நாட்களும் தொடர்ந்து இருந்தது. என்னுடைய சித்தம் தேவனுக்கு முன்பாக இரவும் பகலும் இருபத்தி நான்கு மணி நேரமும் மேஜையில் வைக்கப்படும் அப்பங்களைப் போன்றது என்ற புரிதலை விட என்னை ஆழமாக பாதித்த வேறு எதையும் என்னால் நினைத்து பார்க்க முடியவில்லை. கர்த்தர் என் சித்தத்தை சோதிக்க விரும்புகிறார். மேஜை மேல் 12 அப்பங்கள் இருந்தன. அதில் ஒன்று இல்லாமல் போனாலும், அது ஏன் என்று அவர் அறிய விரும்புகிறார்.

நீங்கள் இதைப் புரிந்து கொண்டால், பல அழிவுகள், இருதய வலிகளிலிருந்து தப்ப முடியும். நீங்கள் உங்கள் சித்தத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். கர்த்தருடன் நீங்கள் இடைபடுவது உங்கள் சித்தத்தில் ஆரம்பமாகிறது. சமூகத்து அப்பத்திற்கான முன்னேற்பாடு லேவியராகமத்தில் காணப்படுகிறது:

> *அன்றியும், நீ மெல்லியமாவை எடுத்து அதைப் பன்னிரண்டு அப்பங்களாகச் சுடுவாயாக; ஒவ்வொரு அப்பம் மரக்காலிலே, பத்தில் இரண்டு பங்கு மாவினால் செய்யப்பட வேண்டும். அவைகளை நீ கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தமான மேஜையின் மேல் இரண்டு அடுக்காக, ஒவ்வொரு அடுக்கில் அவ்வாறு அப்பம் இருக்கும் படியாக வைத்து, ஒவ்வொரு அடுக்கினிடத்தில் சுத்தமான தூபவர்க்கம் போடக்கடவாய்; அது அப்பத்தோடிருந்து, ஞாபகக்குறியாகக் கர்த்தருக்கேற்ற தகனபலியாயிருக்கும். அப்பத்தை நித்திய உடன்படிக்கையாக, இஸ்ரவேல் புத்திரர் கையிலே வாங்கி, ஓய்வு நாள் தோறும், கர்த்தருடைய, சந்நிதியில் அடுக்கி வைக்கக்கடவன். அது ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும்; அதைப் பரிசுத்த இடத்திலே புசிக்கக் கடவர்கள். நித்தியக் கட்டளையாகக் கர்த்தருக்கு இடப்படும் தகன பலிகளில், அது அவனுக்கு மகா பரிசுத்தமாயிருக்கும் என்றார்.*
>
> *லேவியராகமம் 24:5-9*

இங்கே, எட்டு அம்சங்களைப் பார்க்கிறேன். சமூகத்தப்பம், தேவ சித்தத்தைக் குறிக்கிறது. முதலாவது, அப்பத்தைச் செய்ய, மாவு, மெல்லியதாக அரைக்கப்பட வேண்டும். அப்பத்துக்கு தானியம் இடிக்கப்படும். (ஏசாயா 28:28). இங்கே, கர்த்தர் மனிதனின் சித்தப்படி செயல்படுகிறார். தொடர்ந்து தானியம் இடிக்கப்படவேண்டும். உங்கள் சித்தம், அந்த மாவைப் போல் மெல்லியதாக இருந்தால் ஏற்றுக் கொள்ளப்படும். அது வரை கர்த்தர் இடித்துக் கொண்டேயிருப்பார்.

இரண்டாவது, அப்பம் செய்யப்பட அதை பிசைய வேண்டும். உங்களுடைய சித்தம் வேதத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தத்திற்கு இசைவாச இருக்க வேண்டும். பிசைவதற்கு பயன்படுத்தபடும் மாதிரி இயேசுவே.

நீங்கள் உங்கள் சித்தத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். கர்த்தருடன் நீங்கள் இடைபடுவது, உங்கள் சித்தத்தில் ஆரம்பமாகிறது.

மூன்றாவது, மாவு பிசையப்பட்ட பிறகு, அது அக்கினியில் சுடப்பட வேண்டும். சூடு என்பது சோதனையைக் குறிக்கிறது. சரி, ஆண்டவரே, உம்முடைய சித்தம் செய்கிறேன், என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். பிறகு, எல்லாமே உங்களுக்கு விரோதமாக நடக்கிறது. ஒரே நாளில், ஐந்து பிரச்சனைகள் உங்களை தாக்குகின்றன. அக்கினியில் நிற்க முடியாதபடியால், உங்கள் மனதை மாற்றுகிறீர்களா? அக்கினி உங்களைச் சூழ இருப்பதால், விநோதமாக நினைக்கிறீர்களா? அது தான் அப்பம் சுடப்படுதல் ஆகும்.

நான்காவதாக, அப்பம், வரிசைப்படுத்தப்பட வேண்டியுள்ளது. ஆறு அப்பம் வீதம் இரண்டு வரிசையில் 12 அப்பங்கள் இருக்க வேண்டும். ஒருவரிசையில் 7 அப்பங்களும் இன்னொரு வரிசையில் 5 அப்பமும் என்று வைக்கக்கூடாது. இங்கே தான், அநேக, கேரிஸ்மேட்டிக் கை சேர்ந்தவர்கள் தவறி விடுகிறார்கள். ஒழுங்கு இல்லாமல், நீங்கள் சீஷர்களாக இருக்க முடியாது. உங்கள் வாழ்க்கையில் பிரச்சனைகள் துன்பம் இருந்தால், சமூகத்து அப்பத்தை சோதித்து, அது வரிசைப்படி இருக்கிறதா என்று பாருங்கள். தேவன் சொல்கிறார், ஒவ்வொரு வரிசையிலும் 6 அப்பங்களை எதிரெதிராக வைக்க வேண்டும்.

ஐந்தாவது, அப்பம், தூபவர்க்கத்தால் மூடப்பட வேண்டும். அது ஒரு வகையான ஆராதனை. நம்முடைய பதில், நல்லது ஆண்டவரே, நீர் வற்புறுத்தினால், நான் செய்கிறேன் என்று இருக்கக் கூடாது. நன்றி ஆண்டவரே, உம்முடைய சித்தம் செய்கிறேன். நான் என்

தலையை தாழ்த்தி, ஒப்புக் கொடுத்து வணங்குகிறேன். உம்முடைய சித்தம் செய்யப்படும். பூமியிலும், பரலோகத்திலும், அது தான் தர நிலையாக இருக்கிறது.

ஆறாவது, ஏற்கனவே சொன்னபடி, அப்பம் தொடர்ச்சியாக, இரவும் பகலும் கர்த்தருடைய சமூகத்தில் காட்டப்பட வேண்டும். கர்த்தர் சொல்கிறார், "அப்பம். எங்கேயிருக்கிறது என்று நான் பார்க்க வேண்டும்."

நீங்கள் ஒழுங்காக தேவசித்தத்துக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

ஏழாவது, ஒரு பாதுகாப்பு பொன் திரணையும் உண்டாக்க வேண்டும். (யாத்.37:10-12) அப்பம், விலை மதிப்புள்ளதாக இருந்த படியால், அது கீழே விழுந்து விடாதபடி, மேஜையைச் சுற்றிலும் சட்டம் அடிக்கப்பட்டது. அதே போல், உங்கள் சித்தத்தைச் சுற்றிலும் இரட்டைத் திரணைகள் இணைக்கப்பட்டன. இரட்டைத் திரண்கள் என்பது, விழித்திருந்து ஜெபிப்பது ஆகும்.

.....எப்பொழுதும் ஜெபம் பண்ணி, விழித்திருங்கள்.
லூக்கா 21:36

தேவபக்தியற்றவர்கள் மீது வரவிருக்கும் நியாயத்தீர்ப்பை உங்கள் மீது கொண்டு வருவது தேவனுடைய அநீதியாக இருக்கும் என்பது போன்ற ஒரு வாழ்க்கையை நீங்கள் வாழ வேண்டும். நீங்கள் தப்பித்துக்கொள்ள பாத்திரவான்காளக எண்ணப்படும்படி விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். *நீங்கள் சோதனைக்குட்படாத படிக்கு, விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளது தான், மாம்சமோ, பலவீனமுள்ளது என்றார். மத்தேயு 26:41* இயேசு சொன்னார், "நீ என்னை எப்பொழுதும் என்னை பின்பற்றி வருவேன் என்று சொன்னாய். ஆனால், நீ விழித்திருந்து ஜெபிக்காவிட்டால், நீ நினையாத வேளையில் பிடிபடுவாய்" நிச்சயமாகவே, சீஷர்களுக்கு இது தான் சம்பவித்தது. இது தான் சமூகத்தப்பத்தைப் பாதுகாக்கப்

பயன்படும் இரட்டைத் திரணை - விழித்திருந்து ஜெபித்தல்.

சமூத்தப்பத்தின் எட்டாவது அம்சம், அது ஒவ்வொரு நாளும் புதிதாக வைக்கப்பட வேண்டும். நீங்கள் ஒழுங்காக, உங்களை, மறுபடியும் அர்ப்பணிக்க வேண்டும். ஸ்மித் விகிள்ஸ்வர்த் சொன்னார், "ஒவ்வொரு புதிய வெளிப்பாட்டிற்கும் புதிய அர்ப்பணிப்பு தேவைப்படுகிறது". கர்த்தர் ஒவ்வொரு முறையும், ஒரு புது சத்தியத்தை காட்டும் போது, சமூகத்தப்பம், புதிதாக மேஜை மீது வைக்கப்படவேண்டும்.

வெளிப்பிரகாரத்தில், இதைத்தான் கர்த்தர் நமக்குச் செய்திருக்கிறார். ஆனால், நாம் கர்த்தருக்கு நம் சித்தத்தை அர்ப்பணிக்க வேண்டும். இது மிகவும் தெளிவானது. நான் ஏதாவது வேலை விஷயமாக, தெருவில் நடந்து செல்லும் போது, இப்படி நினைப்பதுண்டு, சமூகத்தப்பம் அங்கே இருக்கிறதா ? எல்லா அப்பமும் வரிசைப்படி இருக்கின்றனவா ? தேவனிடம் அர்ப்பணிக்கப்படாத ஏதாவதொன்று என்னிடம் உள்ளதா ? நான் அவருடைய சித்தம் செய்வதில் மகிழ்கிறேன்.

குத்துவிளக்கு

பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த அடுத்த பொருள், குத்துவிளக்கு. அதற்கு ஏழு கிளைகள் இருந்தன. அதை நான் அறிவுக்கு ஒப்பிடுகிறேன் - அது ஒளியின் ஆதாரமாகும். அந்த விளக்கு ஒலிவ எண்ணையால் வெளிச்சம் கொடுத்தது. இது மனித அறிவு. பரிசுத்த ஆவியால் ஒளி கொடுப்பதற்கு ஒப்பிடப்படுகிறது.

குத்துவிளக்கும், உடன் படிக்கை பெட்டியின் மேலுள்ள கேருபீன்களும் (மகா பரிசுத்த ஸ்தலத்திலுள்ளவை), அடிக்கப்பட்ட பொன்னால் செய்யப்பட்டவை. ஆசரிப்புக் கூடாரம் பொன்னால் செய்யப்பட்டவை. ஆசரிப்புக் கூடாரத்திலிருந்த மற்ற பொருட்களெல்லாம், சுத்த பொன்னால் ஆனவை. சுத்த பொன்,

தன்மையில் தெய்வீகமானது. அடிக்கப்பட்ட பொன் தெய்வீக வேலைப்பாடுடையது. அதே போல், கேருபீன்கள், சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டிகள் போல, மனமும், தேவனுடைய சிருஷ்டிப்பாக இக்கிறது. மேலும், வார்க்கப்பட்ட பொன், உருக்கொடுக்கும் ஒரு முறை சுத்தியலால் அடிக்கப்பட்டு, ஒருக் குறிப்பிட்ட மாதிரியை உருவாக்குதாகும். இது நம்முடைய அறிவின் இரண்டு அம்சங்களைக் காட்டுகிறது - படித்தல், ஒழுங்கு. உங்கள் அறிவாகிய குத்து விளக்கு, தேவன் விரும்பும் வகையில் இருக்க வேண்டும். அது வார்க்கப்பட வேண்டும், அல்லது உருவமைக்கப்பட வேண்டும்.

> *அவைகளால், நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயுமிருக்கிறோம்.*
>
> *2 கொரிந்தியர் 10:5*

இந்த வசனம், தெளிவாக, நம்முடைய மனதின் நிலையைக் காட்டுகிறது. நாம், நம்முடைய சொந்த சுபாவத்திற்கு விடப்படும் போது, நம்முடைய எண்ணங்கள் தேவனுக்கு விரோதமாக இருக்கின்றன. *மாம்சச்சிந்தை தேவனுக்கு விரோதமான பகை. (ரோமர் 8:7).* மாம்சீக சிந்தையின் ஒவ்வொரு எண்ணமும், கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் செய்ய வேண்டும். இந்த முறை தான், குத்துவிளக்கை சுத்தியலால் அடிக்கப்படும் விதமாகும்.

உங்கள் மனம், கிறிஸ்துவுக்குச் சிறைப்பட்டிருப்பதை எப்படிச் சொல்வது என்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் நினைப்பதெல்லாம், வேத வார்த்தைகளின்படி இருக்கும்.

நான் கிறிஸ்துவிடம் வருமுன், தத்துவத்தில் பயிற்சி பெற்ற ஒரு நபராக இருந்தேன், சாதாரண கிறிஸ்தவனைக் காட்டிலும், என்னுடைய மனதில் அநேகப் பிரச்சனைகள் இருந்தன. இது தான், என்னுடைய

பெலவீன பாகம் என்று தேவன் காட்டினார். எனது மனதுக்கு பாதுகாப்பு தேவையென்று தேவன் சொன்னார். அவர் எனக்கு ஒரு நம்பிக்கையென்னும் தலைச்சீராவை கொடுத்தார். **(1 தெச.5:8).** மனதைப் பொறுத்த வரையில் உலகம் தேவனை விட்டு விலகியிருப்பதாகச் சொன்னார். சுவிசேஷத்தின் ஒரு பெரிய ஊழியம், ஜனங்களின் மனதை, கிறிஸ்துவுக்குச் சிறைப்படுத்துவது தான். ஆனால், என்னுடைய சொந்தமனதிலிருந்து தொடங்கும் படி தேவன் சொன்னார். நான் ஒரு வாலிபனாக இருந்த போது இருந்ததை விட, ஒரு வித்தியாச மனம் இப்போது எனக்கு இருக்கிறது. என்னுடைய எண்ணங்களை கிறிஸ்துவுக்குச் சிறைப்படுத்தியுள்ளேள். ஒவ்வொரு விசுவாசியும் இந்த முறையில் தான் போய்க் கொண்டிருக்கின்றார்கள்.

உங்களுடைய மனம், கிறிஸ்துவுக்குச் சிறைப்படிருக்கும் போது, எப்படிச் சொல்வது என்று தெரியுமா ? நீங்கள் நினைப்பதெல்லாம், வேத வார்த்தைகளின் படி இசைந்திருக்கும்.

சங்கீதப் புத்தகத்தில், வெளிச்சம் புரிதலுடன் தொடர்புடையதாக இருப்பதைக் காண்கிறோம்:

உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளசவர்களாக்கும்.

சங்கீதம் 119:130

எபேசியரில், இது ஒரு ஆவிக்குரிய முறை என்று புரிந்து கொள்கிறோம். *உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி... எபேசியர் 4:23* புதிதான என்ற வார்த்தை நிகழ்காலத் தொடர்ச்சியாக உள்ளது. அதாவது, நம் மனம் தொடர்ந்து புதிதாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

உங்கள் மனதை, பரிசுத்த ஆவிக்கு ஒப்புக் கொடுப்பதின் மூலம், புரிந்து கொள்ளுதல் வருகிறது. பரிசுத்த ஆவியானவர், உங்கள் மனதை

கைப்பற்றும் போது, அவர், வேதாகமத்துக்கு இசைவாகக் கொண்டு வருவார். பரிசுத்த ஆவியானவர் உங்கள் மனதை சிறைபிடிக்கும் போது, உங்கள் மனம் வேதத்துக்கு ஒத்துப்போகிறது. ஆனால், இது ஒரு செயல்முறையாகும்.

இயேசு சித்தத்துக்கு ஒரு மாதிரியை வைத்தது போல, அவர் மனதுக்கும் ஒரு மாதிரியை வைத்தார்.

> *கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்க கடவது.*
>
> *பிலிப்பியர் 2:5*

இயேசு சிந்தித்த பிரகாரம், நீங்களும் சிந்திக்கப் பழகிக் கொள்ளுங்கள். இங்கே முக்கிய வார்த்தை தாழ்மை ஆகும்.

> *அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்.*
>
> *பிலிப்பியர் 2:6*

இயேசு சிலுவையின் மரண பரியந்தம் தம்மை தாழ்த்தினார். அது தான் இயேசுவின் சிந்தை. சிலுவை மரணத்தை ஏற்கும் சிந்தை. அது தான், உங்களுடைய பெருமை, கடின மனம், இவற்றை கீழ்ப்படிதலுக்கும், தாழ்மைக்கும், சிலுவை மரணத்துக்கும், சிறைப்படுத்தும் முறை, சிலுவையிலறையப்பட்ட மனம், தேவனோடு வாக்குவாதம் செய்யாது. அது எதுவும் சொல்லாது. ஆனால் "ஆமென்" என்றுதான் சொல்லும்.

தூபவர்க்க பலிபீடம் விசுவாசியின் வாழ்க்கையில், ஆராதனை ஸ்தலத்தை குறிக்கிறது.

அறிவின் வெளிச்சம், சித்தத்துக்கு ஒப்புக்கொடுப்பதில் இருக்கிறது. நீங்கள் உங்கள் சித்தத்தை கர்த்தருக்கு ஒப்புக் கொடாத வரை,

உங்கள் அறிவு ஒளி பெறாது. ஒளி பெற்ற சித்தம், சித்தத்தின் நிலைமையை வெளிப்படுத்துகிறது. குத்துவிளக்கு, ஆசரிப்புக் கூடாரத்தில், சமூகத்து அப்பத்து மேஜை மீது இருந்தது.

உங்களுடைய சித்தம், கட்டுப்பாட்டை மீறி விட்டால், உங்களுடைய ஒளி பெற்ற அறிவு அதை வெளிப்படுத்துகிறது. ஆனால், அதை வெறுக்கிறது. அப்போது, நீங்கள் இருளுக்குள்ளாவீர்கள். உண்மையான வெளிப்பாடு பெறுவதற்குப் பதில், நீங்கள் பொய்யான வெளிப்பாடு பெறுவீர்கள். *...உன்னிலுள்ள வெளிச்சம், இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்! (மத்தேயு 6:23).*

மகாபரிசுத்த ஸ்தலத்தில் தான் வெளிப்பாடுகள் கிடைக்கும். வெளிப்பாடு கிடைக்க, நீங்கள், மகா பரிசுத்தருடன் ஐக்கியப்பட வேண்டும். நீங்கள் வெளிப்பாட்டின் ஆதாரத்துடன் சரியான ஐக்கியத்தில் இல்லையென்றால், நீங்கள் பொய்யான வெளிப்பாட்டைப் பெறுவீர்கள். இது தான் விசுவாசிக்கு, தெய்வீக வெளிப்பாட்டின் ஒழுங்கு மற்றும் தேவனிடமிருந்து கிடைக்கும் வழி காட்டுதல். தேவனுடைய ஆவியானவர், விசுவாசியினுடைய ஆவியை கட்டுபாடு செய்து கிரியை செய்கிறார். அது தான் விசுவாசியினுடைய ஆத்துமாவையும், சரீரத்தையும் கட்டுப்படுத்துகிறார். எனவே, ஆரம்பத்தின் ஆதாரம் தேவனுடன் இருக்கிறது. நம்முடைய சித்தம் தேவனுக்கு முற்றிலும் ஒப்புக் கொடுப்பதை சார்ந்திருக்கிறது.

தூபவர்க்கத்தின் பொன் பலிபீடம்

பரிசுத்தஸ்தலத்தின், கடைசி பொருள் தூப வர்க்க பொன் பலிபிடம், இது அந்த அறையிலுள்ள பொருட்களிலேயே உயரமானது. அது இரண்டு முழம் நீளம். அதன் மேல், ஒவ்வொரு மூலையிலும் கொம்புகள் இருந்தன. கொம்புகளுக்கு இடையில், அக்கினி எரிந்தது. ஆனால், இந்த பலிபீடத்தில் விலங்குகள் எரிக்கப்படுவதில்லை. இதில், ஒரு

விஷேசமாக தயாரிக்கப்பட்ட தூபவர்க்கம் எரிக்கப்பட்டது. இந்த தூபவர்க்கம் வேறெந்த இடத்திலும் எரிக்கப்படக் கூடாது. துப வர்க்க பலிபீடம், விசுவாசியின் வாழ்க்கையில் ஆராதனை ஸ்தலமாகக் காட்டப்படுகிறது.

நாம் கர்த்தருக்கு ஒரு பலி கொடுக்கிறோம். அதை நாம் வேறொருவருக்கும் கொடுக்கக் கூடாது. பிரசங்கிமாரை, ஆராதிக்கிறவர்களாக ஆக்கிவிடக்கூடாது. ஏனென்றால், அது தூபவர்க்கத்தை தவறாகப் பயன்படுத்துவதாகும். அது தேவ சந்நிதிக்கு வழி நடத்தும் பலிபீடத்துக்குச் சொந்தமானது.

தூபவர்க்க பொன் பலிபீடத்துக்கு எட்டு அம்சங்கள் உண்டு. நாம் இன்றும், மனுஷனின் ஆத்துமா சம்பந்தப்பட்ட இடத்திலேயே இருக்கிறோம். கர்த்தர் முதலில், சித்தத்தோடு (சமூகத்தப்பம்) இடைப்படுகிறார். பிறகு அறிவு (குத்துவிளக்கு), சிலர், மதவிஷயத்தில், உணர்ச்சிகளுக்குப் பயப்படுகிறார்கள். ஆனால், அது அறிவு பூர்வமானது அல்ல. ஏனென்றால், உணர்ச்சிகள், மனிதனின் முக்கிய பாகம். நிச்சயமாகவே, உணர்ச்சிகள் கட்டுக்கடங்காமல் போகக்கூடும். ஆனால், நாம் பின்பற்றுகிற இந்த மாதிரி, உணர்ச்சிகளை எப்படி கட்டுப்படுத்துவது என்று காட்டுகிறது.

நாம் உணர்ச்சிகளை கட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமென்று விரும்புகிறார். உணர்ச்சிகள் நம்மை கட்டுபடுத்தி விடக்கூடாது. சித்தம், கட்டுப்பாட்டை தீர்மானிக்கிறது. நான், மற்றவர்களைப் போல, நடனமாடி, அநேகரையும் கட்டுக் கடங்காமல் போகச் செய்ய முடியும். ஆனால், அதைச் செய்ய வைக்கிறது என்னுடைய உணர்ச்சிகளல்ல. அது என்னுடைய சித்தம். என்னுடைய உணர்ச்சிகள் என்னைக் கட்டுப்படுத்த விடக் கூடாது. நான் உணர்ச்சியற்றவன் என்பது இதற்கு அர்த்தமல்ல. எனக்கு உணர்ச்சிகள் உண்டு. ஆனால், அவைகள் தங்களுடைய சரியான இடத்தில் வர வேண்டும்.

உங்களுடைய சித்தத்தையும், அறிவையும் சரி செய்த பிறகு, உங்களுக்கு, உணர்ச்சிகள் மேல் முழு கட்டுப்பாடு இருக்கும். நீங்கள் இதை, மாற்று வழியில் செய்தால், நீங்கள் உணர்ச்சிகளுக்கு அடிமையாகி விடுவீர்கள்.

இப்படியாக முதல் அம்சமான, பலிபீடம் நான்கு பக்கமுடையது, சதுர வடிவானது. அது சம அளவுடையது. இது உங்கள் உணர்ச்சிகளை சமநிலைப்படுத்துவதைக் காட்டுகிறது.

இரண்டாவது, சமூகத்தப்ப மேஜை, இரண்டு திரணைகளால் பாதுகாக்கப்படுவது போல, தூபவர்க்க பொன் பலிபீடம் ஒரு திரணையால் பாதுகாப்பப்படுகிறது. உணர்ச்சிகளை பாதுகாக்கிற திரணை எது? அது வேறொன்றுமில்லை. உங்களுடைய சுய-கட்டுபாடுதான். நீங்கள், உங்கள் உணர்ச்சிகளை உங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறீர்கள். அவைகள், உங்களை மேற்கொள்ள அனுமதிக்காதீர்கள்.

மூன்றாவது, அக்கினி, புனிதம், ஆத்துமாவின் வாஞ்சையைக் குறிப்பிடுகிறது. நாம் வாஞ்சையைக் குறிப்பிடுகிறது. நாம் வாஞ்சையுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். ஆனால், அது கட்டுப்படுத்தப்பட்ட, புனிதமாக்கப்பட்ட வழிநடத்தப்பட்ட சரியான விதத்தில் இருக்க வேண்டும்.

கேட் பூத் க்ளிப்போன், வில்லியம் பூத்தின் மகள். அவர் ஒரு முறை சொன்னதாவது, "இயேசு நம்மை வாஞ்சையோடு நேசிக்கிறார். அதே போல், அவரும் நேசிக்கப்பட விரும்புகிறார்". வாஞ்சை என்பது, பரிசுத்தத்தின் ஒரு பகுதி, ஆனால், அது சரியான உறவில் இருக்க வேண்டும். சரியான கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும்.

தூபவர்க்க பொன் பலிபீடத்தில், நான்காவது அம்சம் தூபவர்க்கம் ஆகும். அது அக்கினி பரீட்சையால், பக்தியை நறுமணம் வீசச் செய்கிறது. தூபவர்க்கம் என்பது, கறுப்பு நிறமான கவர்ச்சியற்ற, ஒரு

கட்டியான பொருள், ஆனால், அது அக்கினியில் போட்டவுடன், நறுமன புகையை உண்டாக்குகிறது. தேன், இனிப்பானது. ஆனால், அதை அக்கினியில் போட்டால், ஒரு கறுப்பான, கையில் ஒட்டக் கூடிய பொருளாக மாறுகிறது. ஆனால், கர்த்தர், அக்கினியில் போடப்பட்ட தேனை, காணிக்கையாகச் செலுத்தப் படுவதை விரும்பவில்லை. (லேவி.2:11). இனிமையான வார்த்தைகளோ, சொற்றொடர்களோ, அக்கினி சோதனைக்கு ஏற்றதல்ல.

நாம் உணர்ச்சிகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள, கர்த்தர் விரும்புகிறார். உணர்ச்சிகள் நம்மை கட்டுப்படுத்த அனுமதிக்கக் கூடாது.

ஐந்தாவது, பலிபீடத்திலிருந்து எழும்பும் புகை. அழகான, நறுமணமுள்ள வெள்ளைப் புகை, துதியையும் ஆராதனையையும் காட்டுகிறது.

ஆறாவது, பலிபீடத்திலுள்ள கொம்புகள், பாவநிவிர்த்தி நாளில், பாவ நிவாரணப் பலியாக சிந்தப்படும் இரத்தத்தினால் கழுவப்பட வேண்டும். அதாவது, இயேசுவின் இரத்தத்தின் மூலமாகத்தான், நாம் தேவனை அணுக முடியும் என்று ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் இயேசுவின் இரத்தத்தின் மூலமல்லாமல், ஆராதனையை மேற்கொண்டால், அது தேவனால், முற்றிலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பலிபீடம், இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட வேண்டும். பலிபீடம் மிகவும் உயரமாணது. பலிபீடக் கொம்புகள், கிருபாசனத்தின் கேருபீன்களின் உயரத்துக்கு இணையாக இருந்தன. இப்படியாக, நாம் துதி, ஆராதனை ஏறெடுக்கும் போது, தூபவர்க்கத்தின் புகை போல, அவை எழும்புகின்றன.

கடைசியாக, பலிபீடம், ஆத்துமாவிலிருந்து, ஆவிக்கு ஒரு பாலமாக அமைகிறது. பரிசுத்தத்திலிருந்து, மகா பரிசுத்தத்துக்குப் போகிறது. துதி, நன்றியறிவித்தல், ஆராதனை, தவிற, வேறு வழியில்லை.

இப்படியாக நாம், அந்த பரிசுத்தத்தின் உட்புறத்துக்குள் நம்முடைய சித்தம், அறிவு, உணர்ச்சிகள் இவற்றின் மூலம் பிரவேசிக்கலாம். ஆனால், இவைகள் தேவனின் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும். இப்பொழுது, நாம், தேவனுடைய பிரசன்னத்துக்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கிறோம். உண்மையான ஆராதனை என்னவென்று பார்க்கப்போகிறோம்.

உங்கள் ஆவி : மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் வழி

நாம் ஆசரிப்புக் கூடாரம் வழியாக யாத்திரை செய்கிறோம். இந்த திரித்துவ கட்டடம், மனிதனுடைய திரித்துவ தன்மையை காட்டுகிறது. நாம், ஆசரிப்புக் கூடாரத்தின் மூன்று பகுதிகளை, மனிதனுடைய ஆளாண்மையின் மூன்று பகுதிகளுக்கு ஒப்பிடலாம். வெளிப்பிரகாரம் - சரீரம், பரிசுத்த ஸ்தலம் - ஆத்மா மகா பரிசுத்த ஸ்தலம் - மனிதனுடைய ஆவி.

இரண்டாவது திரைச்சீலை

நாம், பரிசுத்த ஸ்தலத்தை விட்டு, இரண்டாவது, திரைச்சீலை வழியாக, மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கலாம். பாவநிவிர்த்தி நாளில்தான், வருஷத்தில் ஒரேயொரு நாள், ஆசாரியன், இந்த இரண்டாவது திரைச்சீலையைக் கடந்து உட்புக அனுமதிக்கப்படுகிறான். அவன், வெண்கலப் பலிபீடத்திலிருந்து இரத்தத்துடனும், ஒரு தீக்கரண்டியில் எரிகிற அக்கினி தழலோடும், பொன் பலிபீடத்திலிருந்து, தூபவர்க்கத்துடனும் போகிறான். இதற்கு காரணம், மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள், நித்திய பலியின் இரத்தத்துடனும், ஆராதனை, துதி ஸ்தோத்திர தூபவர்க்கத்துடனும் பிரவேசிக்க வேண்டும்.

ஆராதனை இல்லாமல், பரிசுத்த ஸ்தலத்துக்கு அப்பால் போக முடியாது. உண்மையான ஆராதனையில்லாமல், நம் ஆத்துமாவின் ஒரே வழி, இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்பட்ட, ஆராதனை தான். இந்த திரைச்சீலை, கிறிஸ்துவின் பரமேறுதலைக் காட்டுகிறது.

> *தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக.*
>
> *எபேசியர் 2:4-6*

நாம் அவரோடு கூட உயிரோடு எழுப்பட்டது மட்டுமல்ல, பரலோகத்தில், அவரோடு கூட உட்கார வைக்கப்படுகிறோம். முதல் திரைச்சீலை, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததைக் குறிக்கிறது. இரண்டாவது, திரைச்சீலை, பரமேறிச் சென்றதையும், கிறிஸ்துவுடனே நம்மை அமரச் செய்வதையும் குறிக்கிறது.

மகா பரிசுத்த ஸ்தலம்

மகா பரிசுத்த ஸ்தலத்தில், தேவனுடைய, பிரசன்னத்தின், ஒளி தவிர வேறு ஒளி இல்லை. அது தான் ஷெக்கினா மகிமை. அங்கே தான் ஆராதனை நடைபெறுகிறது. தேவ பிரசன்னத்தைத் தவிர நமக்கு வேறே வெளிச்சம் தேவையில்லை. இங்கே, நாம், தேவனோடு நேரடி உறவை அனுபவிக்கிறோம் - நேருக்கு நேர், ஆவியுடன் ஆவி என்ற உறவாகும்.

மகா பரிசுத்த ஸ்தலத்திக்குள், இரண்டு பொருட்கள் இருந்தன. முதலாவதாக, உடன்படிக்கை பெட்டி இருந்தது, அதன் மேல்

கிருபாசனம் இருந்தது. அதன் இருபுறமும், இரண்டு கேருபீன்கள் இருந்தது.

ஆவியின் மூன்று கிரியைகள் - ஆராதனை ஐக்கியம், வெளிப்பாடு - தேவனுடைய ஆவியோடு ஐக்கியப் படாவிட்டால், மனிதனின் ஆவி செத்தது. உங்களுடைய சரீரமும், ஆத்துமாவும், தேவனுடன் நேரடித் தொடர்பு இல்லாமல் செயல்படலாம். ஆனால், ஆவி சிருஷ்டிகருடன் தொடர்பிருந்தால் மட்டுமே ஜீவன் பெற முடியும். உங்களுடைய ஆவி, தேவனிடமிருந்து பிரிக்கப்படும் போது, அது மரிக்கிறது. இருளடைகிறது, குரடாகிறது. எனவே, அனைத்து ஆவியின் கிரியைகளும், தேவனோடுள்ள உறவில் தான் அர்த்தம் இருக்கிறது.

உடன்படிக்கைப் பெட்டி

உடன்படிக்கைப் பெட்டி இயேசுவை ஆவிக்கு வெளிப்படுத்துகிறது. அல்லது, இயேசு உங்கள் ஆவியில் வெளிப்படுத்தப்படுகிறார். மகா பரிசுத்த ஸ்தலம், மனுஷருடைய ஆவியைக் குறிக்கிறது. ஒரு பேழை என்று வேதாகமத்தில் சொல்லப்படுவது, இயேசுவின் மாதிரியாகும். உதாரணமாக, நோவாவின் பேழை உங்களை கிறிஸ்துவில் காட்டுகிறது. மோசேயின் உடன்படிக்கைப் பெட்டி உங்களுக்குள் கிறிஸ்துவைக் காட்டுகிறது. ஆனால், இரண்டுமே, புதிய ஏற்பாட்டு உறவைக் குறிப்பிடுகின்றன.

மரம், இயேசுவின் மனிதத்தன்மையைக் காட்டுகிறது. பொன் அவருடைய தெய்வீகத் தன்மையைக் காட்டுகிறது.

உடன்படிக்கை பெட்டி, சீத்திம் மரத்தினால் செய்யப்பட்டது. அதே போல், ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள எல்லா மரப்பொருள்களும் - உட்பக்கமும், வெளிப்பக்கமும் பொன் தகட்டால் மூடப்பட்டது. மரம், இயேசுவின் மனிதத் தன்மையைக் காட்டுகிறது. பொன் அவருடைய தெய்வீகத் தன்மையைக் காட்டுகிறது. உடன்படிக்கைப் பெட்டிக்குள்

மூன்று பொருட்கள் இருந்தன: பத்துக் கட்டளைகள் அடங்கிய இரண்டு கற்பல கைகள், பொன் ஜாடியில் மன்னா, ஆரோனின் துளிர்ந்த கோல். ஆசரிப்புக் கூடாரம் இன்னொரு கூடாரத்தால் மாற்றப்பட்டது - ஆலயம் இது சாலமோனால் கட்டப்பட்டது. உடன் படிக்கைப் பெட்டி, சாலமொனின் ஆலயத்துக்குக் கொண்டு வரப்பட்ட போது, அதிலுள்ள பொருட்கள் அகற்றப்பட்டன.

> *அப்படியே, ஆசாரியர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை, ஆலயத்தின் சந்நிதியாகிய மகா பரிசுத்தமான ஸ்தலத்திலே கேருபின்களுடைய செட்டைகளுக்குக் கீழாகக் கொண்டுவந்து வைத்தார்கள். கேருபீன்கள், பெட்டியிலிருக்கும் ஸ்தானத்தின் மேல், தங்கள் இரண்டிரண்டு செட்டைகளை விரித்து, உயர இருந்து பெட்டியையும் அதின் தண்டுகளையும் மூடிக்கொண்டிருந்தன. பெட்டியிலிருக்கிற தண்டுகளின் முனைகள் சந்நிதி ஸ்தலத்திற்கு முன்னே காணப்படத்தக்கதாய் அந்தத் தண்டுகளை இழுத்தார்கள்; புறம்பே அவைகள் காணப்படவில்லை; அது இந்நாள் வரைக்கும் அங்கே இருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்டபின், கர்த்தர் ஓரேபிலே அவர்களோடு உடன்படிக்கை பண்ணினபோது, மோசே அந்தப் பெட்டியிலே வைத்த இரண்டு கற்பலகைகளே அல்லாமல் அதிலே வேறொன்றும் இருந்ததில்லை.*
>
> *2 நாளாகமம் 5:7-10*

ஆசாரிப்புக் கூடாரம், இன்றைய சபைக்கு ஒரு மாதிரி என்று நான் நம்புகிறேன்.

ஆசரிப்புக் கூடாரம், தற்காலத்தில், சபையின் ஒரு மாதிரி. உடன்படிக்கை பெட்டியிலிருந்தது மன்னா அடங்கிய பொற்சாடியும், ஆரோனுடைய துளிர்ந்த கோலும் எடுக்கப்பட்டு ஆலயத்தில் வைக்கப்பட்டன. ஆசாரிப்புக் கூடாரம்,

இன்றைய சபைக்கு ஒரு மாதிரி என்று நான் நம்புகிறேன். அது இலேசாகவும் சுமந்து செல்லக் கூடியாதாகவும் இருந்தது அதற்கு கம்புகள் இருந்தன. அவற்றை, தூக்கிச் சென்று வேறொரு இடத்தில் போடப்படும். அங்கே, ஒரு ஆசரிப்புக் கூடாரம் அமைக்கப்படும்.

சாலமொனின் ஆலயம், வரப்போகிற சபைக்கு ஒரு மாதிரி. நிரந்தரமாகக் கட்டப்பட்டு மகிமைப்பட்டு, பார்க்கக் கூடியதாக இருக்கும். இப்பொழுது அது கண்ணுக்குத் தெரியாமல், ஆவிக்குரியதாக இருக்கிறது.

பெட்டியிலிருந்து இரண்டு பொருட்கள் எடுக்கப்பட்டன. மன்னா அடங்கிய பொற்சாடி, மற்றும் ஆரோனின் துளிர்ந்த கோல். அடுத்த யுகத்தில் அது மறைத்து வைக்கப்பட மாட்டாது. ஆரோனின் துளிர்ந்த கோல், கர்த்தரின் வல்லமையையும், அதிகாரத்தையும் காட்டுகிறது - அடுத்த யுகத்தில் அது திறந்த இடத்தில் வைக்கப்படும். ஆனால், கற்பலகைகள் எப்போதுமே உடன்படிக்கை பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கும்.

கற்பலகைகள்

இரண்டு கற்பலகைகள், தேவனுடைய நித்திய கட்டளைகளைக் காட்டுகிறது. அவை, தேவனுடைய நீதியின் வெளிப்பாடு. அது தேவனைப் போலவே மாறாதது, நித்தியமானது. சங்கீதம் 40 கிறிஸ்துவைப் பற்றிய இந்த சட்டத்தைக் குறித்து நமக்குச் சொல்கிறது:

> *அப்பொழுது நான், இதோ, வருகிறேன். புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது; என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன். உமது நியாயப்பிரமாணம், என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்.*
>
> *சங்கீதம் 40:7-8*

உடன்படிக்கை பெட்டியில் உள்ள கற்பலகைகள் கிறிஸ்துவைக் குறிக்கின்றன. கர்த்தருடைய கட்டளை அவருடைய இருதயத்தில் எழுதப்பட்டிருக்கிறது. தேவ நீதியாகிய, நித்திய கட்டளைகள் அதில் சிறிதளவும் மாறவில்லை.

தேவன் இஸ்ரவேலருக்கு முதல் முறையாக, அந்த கற்பலகைகளைக் கொடுத்தார். ஆனால், மோசே அவற்றுடன் மலையிலிருந்து இறங்கி வந்தபோது, ஜனங்களை அந்தக் கட்டளைகளின் முதலாவது கட்டளையாகிய விக்கிரக ஆராதனையின் மூலம் மீறினார்கள். கோபத்தில் மோசே, கற்பலகைகளை தரையில் எறிந்தார், அவைப் பலத்துண்டுகளாக உடைந்தன. மறுதடவை அவன் மலைமீது ஏறிய போது, கர்த்தர் சொன்னார், "புதிதாக இரண்டு கற்பலகைகளை உண்டாக்கு, நான் என் விரலால் அவற்றில் மறுபடியும் எழுதுவேன்". என்றார். ஆனால், இரண்டாவது முறை, மோசே அந்த கற்பலகைகளை இஸ்ரவேலருக்குக் காட்ட அனுமதிக்கப்பட வில்லை. அவற்றை, உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்க கட்டளையிடப்பட்டான். பிறகு அது, கிருபாசனத்தால் மூடப்பட்டது.அது முதற்கொண்டு உடன்படிக்கைப் பொட்டியின் மூடியைத்திறப்பது மரணதண்டனைக்கு ஏதுவான குற்றமான செயலாகக் கருதப்பட்டது. மனிதன் கட்டளைகளை வைத்துக் கொள்வது அது தான் கடைசி. அவன் ஒரு முறை முயன்று தோற்றான். கர்த்தர் வேறொரு வழியை ஏற்படுத்தினார். இப்பொழுது மனிதன் கட்டளைகளை வைத்திருப்பதில்லை, இப்போது கிறிஸ்து தன் இருதயத்திற்குள் வைத்திருக்கிறார் - தேவ நீதிக்கு ஒரே வழியாகும்.

உடன்படிக்கைப் பெட்டி உங்களுக்குள்ளேயும் கட்டளைகள் உடன் படிக்கைப் பெட்டியிலேயும் இருக்கிறது. கிறிஸ்து உடன்படிக்கைப்பெட்டியாய் இருக்கிறார். எபிரெயர், நமக்குள்ளே கிறிஸ்து இருக்கிறார் அவருக்குள் கட்டளைகள் இருக்கிறது என்ற உண்மையை வெளிப்படுத்துகிறார்.

அவர்களைக் குற்றப்படுத்தி, அவர்களை நோக்கி: இதோ, கர்த்தர், சொல்லுகிறதென்னவெனில்: இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங் காலம் வருகிறது. அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வரும்படிக்கு, நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே, அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப் போல இது இருப்பதில்லை: அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே, நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எபிரெயர் 8:8-9

அந்த உடன்படிக்கை இறுதி செய்யப்படுவதற்கு முன்பே இஸ்ரவேலர் அதை உடைத்ததால் அது மாற்றிவைக்கப்பட்டது.

அந்த நாட்களுக்குப் பின்பு, நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே, பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை, அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்.

எபிரெயர் 8:10

தேவனுடைய ஜனங்களாயிருப்பதற்கு இது தான் நிபந்தனை: உங்களிடம் தேவக்கட்டளை இருக்கிறது. ஆனால், இரண்டு கற்பலகைகள் சுவரில் தொங்கிக் கொண்டிருக்கவில்லை. ஆனால், உங்கள் இருதயத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அது உங்களை தேவ ஜனங்கள் ஆக்குகிறது. பவுல் இப்படியாக எழுதினார்,

யூதரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, யூதருக்கு யூதனைப்போலவும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு

> *நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப் போலவுமானேன். நியாயப்பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப் போலவுமானேன். அப்படியிருந்தும், நான் தேவனுக்கு முன்பாக நியாயப்பிரமாணமில்லாதவனாயிராமல், கிறிஸ்துவின் பிரமாணம் இல்லாதவனாயிராமல், கிறிஸ்துவின் பிரமாணத்துக்குள்ளானவனாயிருக்கிறேன்.*
>
> *1 கொரிந்தியர் 9:20-21*

பவுல் என்ன அர்த்தப்படுத்துகிறார் என்றால், "நான் கிறிஸ்துவிலுள்ள நியாயப்பிரமாணத்தில் இருக்கிறேன். ஏனென்றால், இயேசு எனக்கு நியாயப்பிரமாணம் வைத்திருக்கிறார். இயேசு, என்னுடைய இருதயத்தை ஆளும் போது, கர்த்தருடைய நியாயப்பிரமாணம் என்னுடைய இருதயத்தை ஆளுகிறது. ஆனால், நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பது அல்ல, கிறிஸ்து எனக்குள் ஆளுகை செய்வதே முக்கியம். நான் முற்றிலும், இயேசுவை சாா்ந்திருக்கிறேன்." *...கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.* கொலோசெயர் **1:27**

பொற்சாடியில் மன்னா

அடுத்தது, நாம், பொற்சாடியிலுள்ள மன்னாவைப் பார்ப்போம். இஸ்ரவேல் புத்திரர் வனாந்திரத்தில் அலைந்து திரிந்து கொண்டிருந்த போது, தேவன் மன்னாவால் அவர்களை போஷித்தார். இயேசுவை மேற்கோள்காட்டி யோவான் மன்னாவைப் பற்றி நமக்குச் சொல்கிறார்:

> *....ஜீவ அப்பம் நானே. உங்கள் பிதாக்கள் வனாந்தரந்திலே, மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின இறங்கின அப்பம் இதுவே.*
>
> *யோவான் 6:48-50*

மிகத் தெளிவாகச் சொன்னார், நான் தான் ஜீவ மன்னா. இது வானத்திலிருந்து இறங்கி வந்த மன்னா. பின்னர் அவர் ஒரு மகத்தான விஷயத்தைச் சொன்னார்.

> *ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினது போலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறது போலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்.*
>
> *யோவான் 6:57*

இயேசு சொல்கிறார், "பிதாவுடன் நான் ஐக்கியம் வைத்திருப்பதால், நான் ஜீவனோடிருக்கிறேன். என்னில் விசுவாசிக்கிறவன் என்னுடன் ஐக்கியம் வைத்து, ஜீவனை பெறுவான். என்னுடன் உள்ள அந்த ஐக்கியத்தில், அவன் என்னில் புசிப்பான். நான் அவனுடைய இருதயத்தில் மறைவாக இருப்பேன். அந்த மன்னாவை, அவன் ஒவ்வொரு நாளும் புசிப்பான்.

வெளிப்படுத்தின விசேஷத்தில், இயேசு சபையிலுள்ள அனைத்து விசுவாசிகளுக்கும் சொன்னார் மேலும், அவர் நமக்கு மறைக்கப்பட்ட மன்னாவைக் குறித்த வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார்.

அவர் மறைந்த மன்னாவாக நம்முடைய இருதயங்களில் இருக்கிறார்.

> *ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல், எழுதப்பட்டதும், அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக் கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்போன்.*
>
> *வெளிப்படுத்தின விசேஷம் 2:17*

இது தான் பொற்சாடியிலுள்ள மன்னா. நாம் இயேசுவாகிய மன்னாவில் புசிக்கிறோம். அவரோடுள்ள ஐக்கியத்தினால் நாம் அப்படிச் செய்கிறோம். அவரில் புசிப்பதால், அவர் பிதாவோடுள்ள உறவில் ஜீவிப்பது போல நாமும் ஜீவிப்போம். இதுதான், கிறிஸ்துவோடுள்ள ஆவிக்குரிய ஐக்கியம். இதன் மூலம், அவர் நம்முடைய இருதயங்களில் மறைந்த மன்னாவாக இருக்கிறார்.

துளிர்ந்த ஆரோனின் கோல்

மூன்றாவது பொருள், ஆரோனுடைய துளிர்ந்த கோல், இந்த கோலைத்தான் மோசே, பார்வோனுக்கும், அவனுடைய மந்திரவாதிகளுக்கும் முன்னால் போட்டு அற்புதங்கள் செய்தான். பின்னால், இஸ்ரவேலரின் மற்ற கோத்திர தலைவர்கள் ஆரோனுடைய அதிகாரத்துக்கு சவால் விட்டார்கள். கர்த்தர் சொன்னார், நாம் இதற்கு முடிவு கட்டுவோம். கோத்திரத் தலைவர்கள் ஒவ்வொருவரும், தங்கள், தங்கள் கோலைக் கொண்டு வாருங்கள் என்றார். அந்த கோல், ஒவ்வொரு கோத்திரத்துக்கும் அடையாளம். ஒவ்வொரு தலைவனும், தன் பெயரை கோலில் எழுதினான். அவர்கள் கோல்களை ஆசரிப்புக் கூடாரத்தில், வரிசையாக வைத்தார்கள். 24 மணி நேரம் கழிந்து திரும்பி வந்தார்கள். அப்போது 11 கோல்கள் அப்படியே இருந்தன. ஆனால், ஒரு கோல் மட்டும், பூத்து, காய்த்து வாதுமைப் பழங்கள் தொங்கின. அந்த கோலில் ஆரோனின் பெயர் எழுதப்பட்டிருந்தது. கர்த்தர் ஆரோனின், அதிகாரத்தை உறுதிப்படுத்தினார். (எண்.17:1-10)

இன்று, கோலின் மேல் உள்ள பெயர் ஆரோனல்ல, ஆனால் இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தபடியால், கர்த்தர், இயேசுவின் கோரிக்கையை உறுதிப்படுத்தினார். எனவே, கோல் என்பது தெய்வீக அதிகாரம், உங்களுக்கு தெய்வீக வெளிப்பாடும், உறுதிப்பாடும் இருக்கும் போது, அதிகாரம் தரப்படும்.

இப்போது, மகா பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள பொருட்களை பார்த்தோம். உடன்படிக்கைப் பெட்டியில் உள்ளப் பொருட்கள் ஆராதனை, ஐக்கியம், வெளிப்பாடு என்ற மூன்று காரியங்களைக் காட்டுகின்றன. ஆராதனையிலிருந்து ஐக்கியம் வருகிறது. ஆராதனை இல்லாமல், ஐக்கியம் இல்லை. பக்தியின்றி, அவசர அவசரமாக இருப்பவர்களிடம், தேவன் ஐக்கியம் வைப்பதில்லை. ஆனால், நீங்கள் ஆராதனை மூலம் அணுகும் போது, ஐக்கியத்திற்குள் பிரவேசிக்கிறீர்கள். நீங்கள் பொற்சாடியில் உள்ள மறைக்கப்பட்ட மன்னாவைப் புசிக்கிறீர்கள். ஆராதனை, ஐக்கியம் மூலமாக, வெளிப்பாடு வருகிறது. ஷெகினா மகிமை இந்த இடத்தை நிரப்புகிறது.

கிருபாசனம்

நாம், உடன்படிக்கை பெட்டியைப் பற்றிப் படித்தோம். இப்போது, கிருபாசனத்தைப் பார்ப்போம். அது உடன்படிக்கைப் பெட்டியை மூடியிருக்கிறது. நான் முன்பு பார்த்தது போல், கிறிஸ்து தான் உடன்படிக்கை பெட்டி. கிறிஸ்து இல்லாமல், கிருபை இல்லை. அங்கீகாரம் இல்லை, ஜீவன் இல்லை. நீங்கள் உடன்படிக்கைப் பெட்டியில் இருந்தால், நீங்கள், கிருபையின் கீழ் இருக்கிறீர்கள்.

ரோமர் நிரூபத்தில் கிருபாசனம் என்பதற்கான கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. இருப்பினும், அந்த வகையில் இங்கே மொழிப்பெயர்க்கப்படவில்லை.

> *இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்; தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக் கொண்டதைக் குறித்துத், தம்முடைய நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில்*

விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும்.

ரோமர் 3:24-25

கிறிஸ்துவின் பாவநிவிர்த்தி மரணம், அவருடைய பலிதான் கிருபாசனம் ஆகும். அது உடைக்கப்பட்ட சட்டத்தை உள்ளடக்கிய இடமாகும், நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளவோ அல்லது சைத்திருக்கவோ முடியாத கற்பலகைகள் ஆகும். இப்போது அது, சிங்காசனம் ஆயிற்று.

ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம்.

எபிரெயர் 4:16

நாம் தைரியமாக, கிருபையின் சிங்காசனத் தண்டையில் போக முடியும், ஏனேன்றால், கர்த்தர் கிருபாசனத்தில் அமர்ந்திருக்கிறார். அவர் உடைந்த சட்டத்தை உள்ளடக்கிய கிறிஸ்துவின் பாவநிவிர்த்தி வேலையில் அமர்ந்திருக்கிறார்.

உடன்படிக்கை பெட்டியின் மேல், இரண்டு கேரூபீன்கள், இரண்டு பரலோகவாசிகள், வார்க்கப்பட்ட பொன்னில் இரண்டு பக்கங்களிலும் முழங்கால்படியிட்டு, அவர்கள் முகங்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு, அவர்களுடைய சிறகுகள் விரிக்கப்பட்டு, இருக்கின்றன. இங்கேயும், இவைகள் ஆராதனை, ஐக்கியம், வெளிப்பாடு, மூன்றையும் வெளிப்படுத்துகின்றன. விரிக்கப்பட்ட சிறகுகள், ஆராதனையைப் பற்றி குறிப்பிடுகின்றன. அவர்களுடைய முகங்கள் ஒன்றையொன்று பார்ப்பது, ஐக்கியத்தைக் காட்டுகிறது. எங்கே, சிறகுகளும், முகங்களும் சந்திக்கின்றனவோ, அங்கே தம்முடைய மகிமையை வெளிப்படுத்துவேன் என்றார் :

அந்த கேருபீன்கள் தங்கள் செட்டைகளை உயர விரித்து, தங்கள் செட்டைகளால் கிருபாசனத்தை மூடுகிறவைகளும், ஒன்றுக்கொன்று எதிர்முகமுள்ளவைகளுமாய் இருக்கக்கடவது; கேருபீன்களின் முகங்கள் கிருபாசனத்தை நோக்குகிறவைகளாயிருப்பதாக. கிருபாசனத்தைப் பெட்டியின்மீதில் வைத்து, பெட்டிக்குள்ளே நான் உனக்குக் கொடுக்கும் சாட்சிப்பிரமாணத்தை வைப்பாயாக. அங்கே நான் உன்னைச் சந்திப்பேன்; கிருபாசனத்தின்மீதிலும் சாட்சிப் பெட்டியின் மேல் நிற்கும் இரண்டு கேருபீன்களின் நடுவிலும் இருந்து, நான் இஸ்ரவேல் புத்திரருக்காக, உனக்குக் கற்பிக்கப் போகிறவைகளையெல்லாம், உன்னோடே சொல்லுவேன்.

யாத்திராகமம் 25:20-22

உங்களுடைய மனம் இயேசுவின் சிறையிருப்பில் இருக்கும் போது, எப்படி சொல்வது என்று உங்களுக்குத் தெரியுமா ? நீங்கள் நினைப்பதெல்லாம் தேவ வசனத்தின்படி இருக்கிறது.

இங்கு, கிறிஸ்து ஒரு ராஜாவாகவும், ஒரு ஆசாரியனாகவும், சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறார். உடன் படிக்கைப் பெட்டியிலுள்ள வாழ்க்கை, சிங்காசத்தின் மேலுள்ள வாழ்க்கைக்கு முந்தி வர வேண்டும். உடன் படிக்கைப் பெட்டியின் மறைவான வாழ்க்கை, சிங்காசனத்தை அணுக உதவுகிறது. ஆராதனைக்கு உள்ளான வாழ்க்கை வேண்டும் அல்லது நித்திய நியாயப்பிரமாணத்துக்கு முன் பணிந்து வணங்க வேண்டும். நீங்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கு முன்பாக, ஒப்புக் கொடாவிட்டால், உங்களுக்கு அணுக முடியாது. மறைக்கப்பட்ட மன்னாவை புசிக்க நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். தெய்வீக வெளிப்பாட்டுடன், துளிர்க்கும் கோல் உங்களுக்கு வேண்டும்.

நாம், உடன்படிக்கைப் பெட்டிக்கு வரும் போது, நாம் கிருபாசனத்தில் படியெடுத்துவைத்து, சிங்காசனத்தின் மேல் உட்காரலாம். இயேசு அவருடைய சிங்காசனத்தில் நீங்கள் பங்குகொள்ள விரும்புகிறார். படிப்படியாக, நியமிக்கப்பட்ட வழி உண்டு. நீங்கள் இந்த நிலைகளை கடந்து செல்ல முடியாது. மகாபரிசுத்த ஸ்தலத்துக்கு ஒரே ஒரு வழியுண்டு. அது ஒரு வரைபடம் போன்றது. கர்த்தர் வெளிப்படுத்தினால், ஒரு பத்து வயது குழந்தை கூடப் புரிந்துகொள்ள முடியும்.

இங்கே, மகா பரிசுத்த ஸ்தலத்தின் "இறுதி பெலனை", பார்க்கலாம். அங்கே ஆராதனை, நெருங்கிய ஐக்கியம், முதலியவை உண்டு. அங்கே, வெளிப்பாடு, கர்த்தருடைய அதிகாரத்தைக் கொடுத்தல் உண்டு. அங்கே, தேவனுடைய நித்திய கட்டளையின் நீதி, நம் மனசாட்சியில் குத்தப்படும். இது தான் ஆராதனையின் முன்னேற்றம். வெளிப்பிரகாரத்தில், வெண்கல பலிபீடத்திலிருந்து ஆரம்பிக்கிறோம். (இது கிறிஸ்துவின் மரணத்தைக் காட்டுகிறது). நாம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக்குறிக்கும், முதலாவது திரைச்சீலை வழியாக, மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கிறோம். அங்கே, நாம், நம்முடைய சித்தம், அறிவு, உணர்ச்சிகளை தேவனுக்குக் கொடுக்கிறோம். பிறகு நாம் இரண்டாவது திரைச்சீலை வழியாக கொண்டு செல்லப்படுகிறோம். (இது கிறிஸ்துவின் பரமேறுதலைக் காட்டுகிறது). அங்கிருந்து தேவனுடைய பிரசன்னத்துக்குள் நுழைகிறோம்.

> ஆராதனை என்பது அடிப்படையில் பேச்சில் இல்லை, அது ஒரு மனநிலையாகும்.

பிறகு, நாம் ஆராதனைக்குள் பிரவேசிக்கிறோம். ஆராதனை என்பது, துதி மட்டுமல்ல. ஆராதனை என்பது ஒரு மனநிலையுடன் நீங்கள் பிரவேசிக்கலாம். ஆராதனை, ஆசரிப்புக் கூடாரத்தின்

கற்பலகைகளோடு சம்பந்தப்பட்டவை. அது தேவனுடைய நீதியுள்ள கட்டளைக்கு முற்றிலும் ஒப்புக் கொடுப்பது. அது மாறாதது, வளையாதது, விலகாதது. அது கர்த்தரை அணுகுவதில் முற்றிலும் பக்தி, மரியாதையுடன் இருப்பதாகும்.

நீங்கள் ஆசரிப்புக் கூடாரத்துக்குள்ளாக கடந்து செல்லும் போது, ஒவ்வொரு பகுதியும் குறுகிக் கொண்டே வரும். கடைசியாக, மகா பரிசுத்த ஸ்தலத்தில், நீங்கள், 10 முழம் நீளம், 10 முழம் அகலம், 10முழம் உயரமுமான ஒரு அறையில் இருக்கிறீர்கள். அங்கு தேவனைத் தவிர, உங்களை கவரக் கூடியது ஒன்றுமில்லை. நாம் நெருங்கிப் போகப் போக, நமக்குள் ஒரு திகில் ஏற்படும். நம்மில் பலர் பொருட்களுக்காக தேவனிடம் வருகிறோம். நாம் ஆசீர்வாதங்களை நாடுகிறோம், வல்லமையைத் தேடுகிறோம், அல்லது குணமாக விரும்புகிறோம். கர்த்தர், அவரை மட்டும் நாடி நாம் செல்ல வேண்டுமென்று விரும்புகிறார். நாம் கர்த்தரை, கர்த்தரென்று அணுக வேண்டும். நாம் ஆராதிக்கிறோம். நாம் அவர் முன்னால் பணிந்து வணங்குகிறோம். நாம் அவரில் போஜனம் கொள்கிறோம். அவரை அனுபவிக்கிறோம். அதன் பிறகு வெளிப்பாடு கிடைக்கும்.

புதிய உடன்படிக்கையின் நான்கு ஆசீர்வாதங்கள்

எபிரெயர் நிரூபம், ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றி நன்கு அறிந்திராவிட்டால், ஒன்றும் புரியாது. ஏனெனில், முழு நிருபமுமே ஆசரிப்பு கூடாரதத்தையும், ஆசாரியத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. லேவியராகமம், பழைய ஏற்பாட்டின் எபிரெயர் நிரூபம் என்று சொல்வதுண்டு அல்லது எபிரெயர் நிரூபம் புதிய ஏற்பாட்டின் லேவியராகமம் என்று சொல்வதுண்டு. நாம் கற்றுக்கொள்ளுகிறதை எபிரெயர் 10ஆம் அதிகாரத்தில் தெளிவாக காணலாம்.

> *ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில், பிரவேசிப்பதற்கு இயேசுவானவர், தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணின படியால், அந்த மார்க்கத்தின் வழியாய் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின் மேல், அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனசாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும் உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.*
>
> *எபிரெயர் 10: 19-22*

இந்த வசனங்கள், புதிய ஏற்பாட்டின் நான்கு பெரிய ஆசீர்வாதங்களைக் குறிப்பிடுகின்றன. மேலும், ஒரு உண்மையான ஆராதனை செய்யும் நபரின் நான்கு முக்கிய தேவைகளையும் குறிப்பிடுகின்றன. இந்த பகுதியில் பட்டியலிடப்பட்டுள்ள நான்கு ஆசீர்வாதங்களையும் விரிவாக சொல்லுகிறேன்.

மகா பரிசுத்த ஸ்தலம் திறக்கப்படுகிறது

எவ்வளவு பெரிய சிலாக்கியம்! சர்வ வல்லமையுள்ள தேவனுடைய நேரடி பிரசன்னத்தை நாம் நேரடியாக பெற முடியும் என்பது என்னுடைய வெளிப்பாட்டு வல்லமைகளையே திகைக்க வைக்கிறது. அதற்குத் தடையாயிருப்பது, மனுஷருடைய பாவகரமான, மாம்சீக சுபாவம். ஆனால், இது சிலுவையில் சரி செய்யப்பட்டது. இது ரோமரில் இப்படியாக கூறுகிறது:

> *அதேப்படியெனில், மாம்சத்தினாலே, பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக் கூடாததைத் தேவனே செய்யும் படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.*
>
> *ரோமர் 8:3*

நியாயப்பிரமாணம், என்னுடைய சுபாவத்தை மாற்ற முடியவில்லை. என்ன செய்ய வேண்டும் என்று சொன்னது. ஆனால், அதைச் செய்ய எனக்கு வல்லமையைக் கொடுக்கவில்லை.

நியாயப்பிரமாணம், அதைச்செய்ய முடியவில்லை. ஏனென்றால், அதில் எந்தத் தவறும் இல்லை. நியாயப்பிரமாணம் பரிசுத்தமானது என்று பவுல் சொல்கிறார். மேலும், அத நீதியும், நியாயமுமானது. (ரோமர் 7:12). அதனுடைய ஒவ்வொரு பிரமாணமும் சரியானதே.

ஆயினும், நான் அந்த கற்பலகைகளையும், நியாயப்பிரமாணத்தின் எழுத்துக்களையும் பார்த்து, நான் அதை செய்வேன் என்று சொல்வேன். ஆனால், எனக்குள்ளே ஏதோவொன்று இல்லை. "உன்னால் முடியாது. நீ எவ்வளவு கடினமாக முயலுவாயோ, நீ அவ்வளவுக்கு தோ்ச்சியடையமாட்டாய்" என்று சொல்கிறது. பவுல் இப்படியாக சொன்னார்:

எப்படியெனில், நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை; நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன்.

இப்படி நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க, நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக் கொள்ளுகிறேனே. ஆதலால், நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது.

ஆனபடியால், நன்மை செய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமையுண்டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன்.
ரோமர் 7:15-17,21

நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிக்க முயல்கிற அதே விநாடி, என்னுடைய, மாம்சீக முரட்டாட்டமான சுபாவம், வெளிப்படுகிறது. நான் எவ்வளவு நல்லவனாக விரும்புகிறேனோ, அவ்வளவு கெட்டவனாகி விடுகிறேன். என்னுடைய 15.வது வயதில் இதைக் கண்டுபிடித்தேன். அப்போது நான் ஆங்கிலிக்கள் சபையில் உறுதி பூசப்பட்டிருந்தேன். நான் சொன்னேன், நான் உறுதிப்பூசுதல் பெறுவேன். என்னுடைய பல்லை துலக்கி விட்டு, நற்கருணை பெறுவேன். நான் நல்லவனாக இருப்பேன். ஆனால், அந்த உறுதி பூசுதல் பெற்ற பிறகு, நான் மிகவும் கெட்டவனாகிவிட்டேன்.

பிரச்சனை தன்னம்பிக்கை தான். மனுஷன் மேல் நம்பிக்கை வைத்து மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று

கர்த்தர் சொல்லுகிறார். (எரேமியர் 17:5). "நியாயப்பிரமாணம் இருக்கிறது; நான் அதன்படி செய்கிறேன்" என்று நீங்கள் சொல்லும் போது, நீங்கள் உங்கள் மீது நம்பிக்கை வைக்கிறீர்கள். எனவே, நீங்கள் சாபத்தின் கீழ்வருகிறீர்கள். இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளையெல்லாம் கைக்கொண்டு நடவாதவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக் கடவர்கள். உபாகமம் 27:26. நீங்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தால். நீங்கள் சகல பிரமாணங்களையும், எல்லா சமயத்திலும் செய்யவேண்டும். உங்களால் செய்ய முடியாவிட்டால், அதனால் ஒரு பயனுமில்லை. நீங்கள் ஒரு பிரமாணத்தை நிறைவேற்றாவிட்டால், நீங்கள் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாதவராகக் கருதப்படுவீர்கள். முழுவதும் கடைப்பிடிக்க வேண்டும் அல்லது ஒன்றும் கடைப்பிடிக்கக் கூடாது.

நியாயப்பிரமாணம் நல்லதுதான். அது சரிதான். அதை, அப்படித்தான் நான் செய்யவேண்டுமென்று எனக்குள் ஏதோ சொல்கிறது. "உள்ளான மனுஷனுக்கேற்றபடி. தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் மேல் பிரியமாயிருக்கிறேன்" ரோமர் 7:22. ஆனால் எனக்கு வேறு ஏதோவென்று இருக்கிறது - அதுதான் கலகம்.

> *ஆகிலும், என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது.*
>
> *ரோமர் 7:23*

"சிறையாக்கி" என்ற வார்த்தைக்கு, "போரின் சிறைக்கைதி" என்று அர்த்தம். பவுல் சொல்கிறார். நான் தேவனுக்காகப் போராடப்போகிறேன். ஆனால் அவருக்கு விரோதமாய்ப் போர் செய்கிறேன். நான் ஒரு போர்க்கைதி. நான் வேண்டுமென்றே இதைச்

செய்யவில்லை. ஏதோ ஒன்று என்னை சிறைப்பிடிக்கிறது. என்னால், அதை தவிர்க்க முடியவில்லை.

நிர்ப்பந்தமான மனுஷன் நான். இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன்.

ரோமர் 7:24-25

இந்த மொழிபெயர்ப்பு சரியல்ல. நான் என் மனதால், கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை சேவிப்பேன், ஆனால் என்னுடைய மாம்சீக சுபாவத்தின் காரணமாக, நான் பாவ பிரமாணத்துக்கு அடிமையாகி விட்டேன். அதை என்னால் மாற்ற முடியவில்லை. எனவே, இதற்கு தீர்வு என்ன ?

...நியாயப்பிரமாணம் செய்யக் கூடாததை,

ரோமர் 8:3

நியாயப்பிரமாணத்தால் என்னுடைய இயல்பை மாற்ற முடியவில்லை. அது என்ன செய்ய வேண்டும் என்று எனக்கு சொன்னது. ஆனால் அதைச் செய்வதற்கான பெலனை எனக்குக் கொடுக்கவில்லை.

அதெப்படியெனில், மாம்சத்தினாலே, பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக் கூடாததை, தேவனே செய்யும் படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக் குள்ளாகத் தீர்த்தார்.

ரோமர் 8:3

யாருடைய மாம்சீகப் பாவத்தை அவர் ஆக்கினைத் தீர்ப்பாக்கினார் ? இயேசுவின் மாம்சத்தை. தேவன் பாவத்தை,

இயேசுவின் சரீரத்தில் ஈடுகட்டினார். அவருடைய சரீரம், பாவ நிலையில் நிவிர்த்தி பலியாயிற்று. அங்கே தான் பாவம் நிவிர்த்தி செய்யப்பட்டது, எப்போதுமாக இதை நாம் உணரும் போது, பாவக்கட்டிலிருந்து விடுதலை ஆகிறோம்.

எனவே, எபிரெயரில் உள்ள பகுதிக்கு திரும்புவோம். நாம் இப்படியாக வாசிக்கிறோம்.

> *அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு, அவருடைய இரத்தத்தினாலே, நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்.*
>
> *எபிரெயர் 10:20*

நம்முடைய மாம்சீக சரீரம் தான் திரைச்சீலையாக இருக்கிறது. அது இயேசுவின் சரீரத்தில் சிலுவையிலறையப்பட்டது. தேவனிடம் அணுக, நாம் அந்த திரைச்சீலை வழியாகப்போக முடியாது. திரைச்சீலை அகற்றப்பட வேண்டும். மாம்சீக சுபாவம் சரிகட்டப்பட வேண்டும். அது, இயேசுவின் சரீரத்தில் பரிகாரம் செய்யப்பட்டது. நம்முடைய பாவங்களுக்காக, அவருடைய மாம்சம் கிழிக்கப்பட்ட போது, திரைச்சீலையும் கிழிக்கப்பட்டது.

திரைச்சீலை, மேலிருந்து கீழாகக் கிழிக்கப்பட்டது. இயேசுவின் மரணத்தால், மகா பரிசுத்த ஸ்தலத்துக்கான வழி திறக்கப்பட்டது.

ஆலயம், இதே மாதிரிக் கட்டப்பட்டது. ஆசரிப்புக் கூடாரத்தின் மாதிரியில் கட்டப்பட்டது: வெளிப்பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் ஆகும். ஆலயம் கூடுதல் ஸ்திரமாய் இருந்தது. நிரந்தரமானது, தெய்வீக கட்டளைப்படி, மகா பரிசுத்த ஸ்தலம், மகிமையான திரையால் பிரிக்கப்பட்டது. ஆனால், இயேசு சிலுவையில் மரித்தபடியால், எருசலேமுக்கு வெளியே, அதே நேரத்தில், மகா பரிசுத்த ஸ்தலத்தில் ஏதோ சம்பவித்தது.

இயேசு, மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார். அப்பொழுது, தேவாலத்தின் திரைச்சீலை, மேல் தொடங்கி, கீழ் வரைக்கும், கிழிந்தது. பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது.

மத்தேயு 27:50-51

தேவனிடமிருந்து இது வந்தது என்பதில் சந்தேகமில்லை, மனிதனிடமிருந்தல்ல. திரைச்சீலை மேல் தொடங்கி, கீழ் வரைக்கும் கிழிந்தது. இயேசுவின் மரணத்தால், மகா பரிசுத்த ஸ்தலத்துக்கான வழி திறந்தது, தேவன் சிலுவையில் தம்முடைய சரீரத்திலே பாவத்தை அகற்றினார். இப்போது, அந்த மகா பரிசுத்த ஸ்தலம் திறக்கப்பட்டிருக்கிறது.

இயேசுவின் இரத்தத்தில் தைரியம்

புதிய உடன்படிக்கையின் இரண்டாவது ஆசீர்வாதத்திற்கு, எபிரெயர் **10**ஐ மீண்டும் பார்க்கலாம்.

ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில், பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும், ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணின படியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்.

எபிரெயர் 10:19-20

எனக்கு உணர்ச்சி பூர்வமான தைரியம் இருக்கிறது என்பதல்ல. ஆனால், எனக்கு சட்டப்பூர்வமான உரிமை இருக்கிறது என்பது தான். எனக்கு தைரியம் உண்டோ இல்லையோ என்பது இரண்டாந்தரமானது. இதைப்புரிந்து கொள்வது முக்கியம். இங்கே, தைரியம் என்பது தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இயேசுவின் இரத்தத்தினால், அணுகுவது நம்முடைய உரிமையாகும்.

லேவியராகமத்தில், பழைய ஏற்பாட்டில் பாவ நிவிர்த்தி நாளில், வருடம் ஒருமுறை பிரதான ஆசாரியன், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் நாளில், பல சடங்குகள் கொண்டாடப்படும். இன்று யூதர்கள் அதை யாம் கிப்பூர் என்று அழைக்கிறார்கள். பழைமையான யூதர்கள், இன்று, உபவாசம் இருந்து புலம்பலோடு அநுசரிக்கிறார்கள். முழு அதிகாரமுமே, மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பது பற்றியது தான். ஆனால், பாவ நிவாரணப் பலியாக, இரத்தத்தைப் பற்றி ஆராய விரும்புகிறேன்.

> *பின்பு ஆரோன் தனக்காகவும், தன் வீட்டாருக்காகவும், பாவநிவிர்த்தி செய்யும்படி, தன்னுடைய பாவ நிவாரணத்துக்கான காளையைக் கொண்டு வந்து, அதைக் கொன்று, கர்த்தருடைய சந்நிதியிலிருக்கும் பலிபீடத்தின்மேலுள்ள நெருப்புத்தணலினால், தூபக் கலசத்தை நிரப்பி, பொடியாக்கப்பட்ட சுகந்த தூபவர்க்கதிலே, தன்கைப்பிடிகள் நிறைய எடுத்து, திரைக்கு உட்புறமாகக் கொண்டுவந்து.*
>
> *லேவியராகமம் 16:11-12*

பலிபீடத்திலிருந்து இரத்தம், பொன் பலிபீடத்திலிருந்து தூபவர்க்கம் இவை இணைக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் திரைச்சீலை வழியாக போக முடியும்.

> *தான் சாகாதபடிக்குத் தூபமேகமானது சாட்சிப்பெட்டியின்மேல், இருக்கும் கிருபாசனத்தை மூடத்தக்கதாக, கர்த்தருடைய சந்நிதியில் அக்கினியின்மேல், தூபவர்க்கத்தைப் போடக்கடவன்.*
>
> *லேவியராகமம் 16:13*

இது ஒரு பயனற்ற மதச்சடங்கு அல்ல. இது ஒரு ஜீவன் அல்லது மரணம் பற்றியதாகும். ஆசாரியனுக்கும் முழு தேசத்துக்குமானது. பிரதான ஆசாரியன் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால், முழு தேசமுமே,

தேவ சந்நிதியிலிருந்து தேவ பிரசன்னத்தை இழந்துவிடும். அவன் ஜனங்களின் பிரதிநிதியாக இருந்தான்.

பின்பு காளையின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, கீழ்ப்புறமாக நின்று தன் விரலினால், கிருபாசனத்தின் மேல் தெளித்து, அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்துக் கிருபாசனத்துக்கு முன்பாக, ஏழுதரம் தன் விரலினால் தெளிக்கக்க கடவன்.

லேவியலாகமம் 16:14

ஏழாவது என்றால், அது பரிசுத்த ஆவியில் வருகிறது என்று அர்த்தம். நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார். (எபிரெயர் **9:14**). அந்த இரத்தம், கிருபாசனத்தின் மீதும், முன்னாகவும் தெளிக்கப்பட்டது. உண்மையில், ஆசரிப்புக் கூடாரம் முழுவதிலும் அந்த இரத்தம் காணப்பட்டது. இரத்தம் இல்லாமல், மீட்பு இல்லை.

புதிய ஏற்பாட்டில், இதற்கு இணையான வார்த்தையைக் காணலாம். இயேசுவின் பாவ நிவிர்த்தி உலகத்தில் முடிவு பெறவில்லை. அது பரலோகத்தில் பரிபூரணமாக்கப்பட்டது.

அந்த நம்பிக்கை, நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது. நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசிரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்.

எபிரெயர் 6:19-20

இங்கே, நாம் பூமிக்குரிய ஆசரிப்புக் கூடாரம் பற்றிப்பேசவில்லை, நாம் பரலோக ஆசரிப்புக் கூடாரம் பற்றிப் பேசுகிறோம். இயேசு, திரைச்சீலைக்குள் நுழைந்தார். ஒரு முன்னோடி என்பவர், பிரதிநிதியாவார். "என்பின்னே மற்றவர்களும் வருகிறார்கள்" என்று

சொல்பவர்கள் ஆவார்கள். இதுமுதல், அவர்கள் என்னைப் பின் தொடர்ந்து வர வழி திறந்திருக்கிறது என்று சொல்லுகிறவர்கள். இயேசு நம்முடைய முன்னோடி, அவர் திரைச்சீலைக்குள் நுழைந்திருக்கிறார்.

பின்னர், எபிரெயரில் மேலும் வேதவசனம் சொல்கிறது:

> *கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு....*
>
> *எபிரெயர் 9:11*

ஒரு நல்ல மொழிப்பெயர்ப்பு "நன்மையான காரியங்கள் உண்மையிலேயே நிறைவேறிவிட்டன" என்று கூறுகிறது. அதாவது, நியாயப்பிரமாணத்துக்கு, மாறாக அதற்கு நிழல்களும் வாக்குறுதிகளும் மட்டுமே உண்டு. இதற்கு நிஜமானது உண்டு.

> *கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல. தம்முடைய சொந்த இரத்தத்தினாலும், ஒரேதரம் மகாபரிசுத்த ஸ்தலத்திலே, பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார்.*
>
> *எபிரெயர் 9:11-12*

இயேசு, தம்முடைய இரத்தத்தை. எடுத்துக் கொண்டு, மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்திருக்கிறார்.

> *ஆதலால், பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே, சுத்திகரிக்கப்பட வேண்டியதாயிருந்தது; பரலோகத்திலுள்ளவைகளோ இவைகளிலும் விசேஷித்த பலிகளாலே சுத்திகரிக்கப்பட வேண்டியதாமே.*
>
> *எபிரெயர் 9:23*

பரலோகத்திலுள்ளவைகள் சுத்திகரிக்கப்பட வேண்டியிருந்தன. ஆனால் இளங்காளை, ஆட்டுக்கடாகளின் இரத்தத்தினாலே அல்ல.

> *அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காக தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்.*
>
> *எபிரெயர் 9:24*

இயேசு கிறிஸ்து, மகாபரிசுத்த ஸ்தலத்துக்குள் எப்படிப் பிரவேசித்தார்? அவருடைய சொந்த இரத்தத்தினாலே! நாம் எபிரெயர் 12-வது அதிகாரத்திற்குச் செல்லும் போது, இது இன்னும் தெளிவாகும்.

> *நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமிடத்திற்கும் ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும்... வந்து சேர்ந்தீர்கள்.*
>
> *எபிரெயர் 12:22*

இது பூமிக்குரிய எருசலேம் அல்ல. நாம் மாம்சப் பிரகாரமாக அல்ல ஆனால் ஆவிக்குரிய பிரகாரமாக வருகிறோம்.

> *பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற் பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும்*
>
> *எபிரெயர் 12:23*

இது நீங்களும் நானும் தான். நம்முடைய தலைமை அலுவலகம், பரலோகத்தில் இருக்கிறது. நீங்கள் பரலோகத்தில், ஆட்டுக்குட்டியின் ஜீவ புஸ்தகத்தில் பெயரெழுதப்பட்டிருக்கிறீர்களா? அல்லது நீங்கள்

சபைப் புத்தகத்தில் மட்டும் பெயரெழுத்தப்பட்டிருக்கிறீர்களா? சபைப் புத்தகத்தில் இருப்பது நல்லது தான், ஆனால் அது போதாது.

> *புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும் ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும், நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்.*
>
> *எபிரெயர் 12:24*

அது சுயத்துக்கு இல்லை, முடியாது என்று சொல்வதாகும். சுயம், எனக்கு அது வேண்டும் என்று சொல்லும் போது, இல்லை என்று சொல்வது தான் சுயத்தை - வெறுப்பதாகும்.

ஆபேலுடைய இரத்தம், பூமியில் தெளிக்கப்பட்டது அது என்ன செய்யக்கேட்டது? பழி வாங்குதல். இயேசுவின் இரத்தம் பரலோகத்தில் தெளிக்கப்பட்டது அது என்ன கேட்டது? கிருபை! இயேசுவின் இரத்தம் எப்பொழுதும், உங்கள் சார்பில் பரலோகத்தில் பேசுகிறது என்று நீங்கள் விசுவாசித்தால், இது ஒரு மகாப் பெரிய சத்தியம் இல்லையென்றால், நீங்கள் ஒரு போதும் பரலோகத்துக்குச் செல்ல முடியாது. நியாயாதிபதியாகிய தேவன், உங்களை ஒரு போதும் பரலோகத்துக்கு எடுத்துச் செல்லமாட்டார். இயேசு கூட அவருடைய இரத்தம் இல்லாமல், அங்கே போக முடியவில்லை அது ஒன்று தான் அணுகும் முறையாகும். இயேசுவின் இரத்தம் பரலோகத்தில் தெளிக்கப்படுவதன் மூலமாக நடக்கும்.

புதிதும், ஜீவனுள்ளதுமான வழி

புதிதும் ஜீவனுள்ளதுமான வழி இயேசுவே. புதிய ஏற்பாட்டிலுள்ள மூன்றாவது பெரிய ஆசீர்வாதமாகும். அங்கு தான் இயேசு

வழியாகிறார். அவர் சத்தியமாகிறார், அவர் ஜீவனுமாகிறார். இயேசு சென்ற வழியில் நாமும் செல்லவேண்டும் வேறு வழியே இல்லை. அது சுயத்தை வெறுக்கும் கீழ்ப்படிதலுள்ள, தியாகமுள்ள, மரணத்திற்குள்ள வழி. அதுதான் புதிதும் ஜீவனுள்ளதுமான வழியாக இருக்கிறது.

> *இதற்காக, நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப்பின் வைத்துப் போனார்.*
>
> *1 பேதுரு 2:21*

இயேசு வைத்துப் போன மாதிரி, புதிதும் ஜீவனுள்ளதுமான வழியாகும். நீங்கள் அந்த வழியில் செல்ல, முதல்படி எது ?

> *அப்பொழுது, இயேசு, தம்முடைய சீஷர்களை நோக்கி; ஒருவன் என்னைப் பின் பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.*
>
> *மத்தேயு 16:24*

சுயத்தை-வெறுத்தல். இது பணத்தை, கடனுக்கு வட்டிக்கு கொடுப்பது அல்ல. வீட்டை வாடகைக்கு கொடுப்பது அல்ல. அது நல்லது தான், ஆனால், அது சுயத்தை-வெறுப்பது அல்ல. அது சுயத்துக்கு இல்லை, முடியாது என்று சொல்வதாகும். சுயம், எனக்கு அது வேண்டும் என்று சொல்லும் போது, இல்லை என்று சொல்வது தான் சுயத்தை - வெறுப்பதாகும். சுயம் "நான் நினைக்கிறேன்" என்று "நீங்கள் நினைப்பது முக்கியமல்ல" என்று சொல்கிறது. நீங்கள் நினைத்ததையே செய்ய விரும்பினால், நீங்கள் இன்னும் சுயத்தை வெறுக்கவில்லை. உங்களையே வெறுப்பது என்பது உங்களுக்குள் இருக்கும் அந்த பழைய மனுஷனுக்கு இல்லை என்று பதில் அளிப்பது ஆகும்.

அதேபோல, சுயத்தை-வெறுத்தல் என்பது, பாவத்தை விட்டு விடுவது என்பதாகும். அது தேவைப்படலாம், ஆனால் சுயத்தை - வெறுப்பது, நான் என்ன விரும்புகிறேன், நான் என்ன நினைக்கிறேன், நான் என்ன உணர்கிறேன், இவையெல்லாம் கர்த்தரைப் பொறுத்த மட்டிலும் ஒன்றுமில்லை.

இயேசுவை பின் தொடர, இவற்றிற்கெல்லாம், இல்லை என்று சொல்ல வேண்டும் அது தான் முடிதல்படியாகும். ஒருவன் தன் சிலுவையை எடுத்துக்கொள்ள விரும்பினால், அவன் தன்னைத்தானே வெறுக்கக்கடவன். மத்தேயு **26**இல் சுயத்தை-வெறுத்தல் என்பதற்கான உச்சக்கட்டம் இருக்கிறது.

> *சற்று அப்புறம் போய், முகங்குப்பற விழுந்து; என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும் படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்.*
>
> *அவர் மறுபடியும், இரண்டாந்தரம் போய், என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம் பண்ணினாலொழிய இது என்னை விட்டு, நீங்கக் கூடாதில், உம்முடைய சித்தத்தின் படியாகக் கடவது என்று ஜெபம் பண்ணினார்.*
>
> *மத்தேயு 26:39,42*

கர்த்தரின் ஒவ்வொரு அசைவும், என் சித்தமல்ல, உம் சித்தம் என்று ஆரம்பிக்கிறது. இயேசு, தம் சித்தத்தை, ஒரு முறையல்ல, பல முறை சொன்னார். அவருடைய சித்தத்துக்கும் பிதாவின் சித்தத்துக்கும் முரண்பாடு வரும் போதெல்லாம், அவர் தன்னலமறுப்பை திரும்ப கூறினார். "என் சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே" இது தான் புதிதும் ஜீவனுமான வழியாகும்.

நீங்கள் உங்கள் இருதயத்தை தேவசித்தத்துக்கு நாட முயலும் போது, நீங்கள் களி கூறுகிறீர்கள். அது கடினமாக இருந்தாலும், அது

உங்களை சந்தோஷத்தால் நிரப்பும். ஆனால் உங்கள் இருதயம் தேவனைப் பின்பற்றுவதல் உறுதியாக இல்லாவிட்டால், நீங்கள் காண்பது அதன் விரும்பத்தகாத தன்மையை மட்டும்தான்.

ஏனென்றால் தமக்காவும், தம்மாலே சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே, பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது.

எபிரெயர் 2:10

பாடுகளின் வழியாக, இயேசு பூரணராக்கப்பட்டார். அவரே நம் தலைவர். அவர் பூரணராக்கப்பட்ட, அதே வழியில் நாமும் பூரணராவோம். பாடுகளிலிருந்தும், கீழ்ப்படியாமையால் வரும் பாடுகள் அல்ல. என் சித்தத்தின படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே **(மத்தேயு 26:39)** என்ற கூற்றிலிருந்து கீழ்ப்படியாமையினால் வரும் பாடுகளில் அல்ல. அப்படிப்பட்ட பாடுகள் உங்களை புனிதப்படுத்துவதில்லை, பூரணராக்குவதில்லை.

எப்படியெனில், பரிசுத்தஞ் செய்கிற வரும் பரிசுத்தம் செய்யப்படுகிறவர்களாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்..

எபிரெயர் 2:11

பரிசுத்தப்படுத்துகிறவர் இயேசு. "பரிசுத்தமாக்கப்படுகிறவர்கள்" நீங்களும் நானும். நாம் அனைவரும் - இயேசு, நீங்கள், நான்-வந்தது பிதாவால். எனவே, நாம் பிதாவால் பரிசுத்தமாக்கப்படுகிறோம் - இயேசு பூரணராக்கப்பட்டது போல, இயேசுவின் வழி நம்மை பரிசுத்தம், சுத்திகரித்தல், பூரணம் இவைகளுக்கு நேராக வழிநடத்துகிறது. அது தான் வழியாகும்.

அவர் (இயேசு) மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி,

பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம், கேட்கப்பட்டு.

எபிரெயர் 5:7

புதிய ஆங்கில வேதாகமம் சொல்கிறது. "அவருடைய தாழ்மையினிமித்தம் கேட்கப்பட்டார்". அவருடைய ஜெபம் கேட்கப்பட்டது. அதாவது, தேவனை அணுகும் ஆவி அதுதான். இயேசு தான் ஒரு பூரண மாதிரி. அவர் பயபக்தியோடு இருந்ததால் கேட்கப்பட்டார். ஜெபங்கள் கேட்கப்படாமல் இருப்பதற்கான அடிப்படை காரணம் இது தான். இன்னும் அரை டசன் உதாரணங்கள் தர முடியும். ஆனால் இது தான் மூலக்காரணம் என்று தேவன் எனக்கு காண்பித்தார். கீழ்ப்படிதலின் விளைவாக பாடுவடுவதன் மூலமாக கீழ்ப்படிதல் என்றால் என்ன என்பதை அவர் கண்டறிந்தார். எனவே, மனநிலை முதலில் வருகிறது. அவருடைய தாழ்மையினால் கேட்கப்பட்டார்.

அவர் குமாரனாயிருந்தும், பட்டபாடுகளினாலே, கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு.

எபிரெயர் 5:8

கீழ்ப்படிதலின் விளைவாக பாடுபடுவதன் மூலமாக கீழ்ப்படிதல் என்றால் என்ன என்பதை அவர் கண்டறிந்தார்.

தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி.

எபிரெயர் 5:9

ஜெபங்கள் கேட்கப்படுவதற்கான எல்லா விதிகளையும் நீங்கள் போதிக்கலாம். ஆனால், அவர்களின் மனநிலை தவறாக இருந்தால், அந்த விதிகள் கிரியை செய்வதில்லை.

அவர் புதிதும், ஜீவனுமான அதே வழியில் அதே சென்றார்.

இயேசுவே கர்த்தராக இருந்தார், இருக்கிறார், எப்போதும் கர்த்தராயிருப்பார். அவர் மனுஷனானார், எப்பொழுதுமாக இருப்பார். அவர் இப்போதும் மனுஷனாயிருக்கிறார் என்பதை மறக்க வேண்டாம். "தேவன் ஒருவரே, தேவனுக்கும், மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே."

1 தீமோத்தேயு 2:5

அவர் தம்மை வெறுமையாக்கிய பின் அவர் அதை நிபந்தனையின் பேரில் செய்யவில்லை. அவர் தம்மை வெறுமையாக்கினார். அவர் மரண பரியந்தம் தாழ்த்தினார். "*ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி...*" *பிலிப்பியர்* **2:9** தன்னையே வெறுமையாக்கிக் கொண்டு, அந்த உயர்ந்த இடத்திற்கு திரும்புவதற்கான வழியை அவர் சம்பாதிக்க வேண்டியிருந்தது. ஆதலால் என்பது அவருடைய தாழ்மையின் காரணமாக, உயர்த்தப்பட்டார் என்பதை குறிக்கிறது. அவர் கீழ்ப்படியாமல் போயிருந்தால், அவர் ஒருபோதும் திரும்பி வந்திருக்கமாட்டார். எனவே, அவர், முதிர்ச்சி, முன்னேற்றம் பூரணம் இவையெல்லாவற்றுக்கும் மாதிரியாக இருக்கிறார். அவர் கீழ்ப்படிதலின் மூலமாக பூரண மனுஷராக்கப்பட்டார். பிறகு அவர் எப்படி நம்மை பூரணமாக்க முடியும்? கீழ்ப்படிதல் மூலம் - எனவே, இறையியலை ஒரு பக்கம் வைத்துவிட்டு, கீழ்ப்படியுங்கள்.

நமக்கு ஒரு பிரதான ஆசாரியர் இருக்கிறார்

நமக்கு இதுவரை என்ன இருக்கிறது? மகா பரிசுத்த ஸ்தலம் நமக்காக திறக்கப்பட்டுள்ளது. நமக்கு, இரத்தத்தின் மூலம் அதற்குள் போக உரிமை இருக்கிறது. அந்த இடத்தை அணுக, நமக்கு, புதிதும், ஜீவனுமுள்ள வழி இருக்கிறது. இப்போது ஒரு மகா பிரதான ஆசாரியன்

அங்கே நமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார். அவர் யார்? இயேசு. அவர் இரண்டு வகையில் பிரதான ஆசாரியர்.

மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில்; பரலோகத்திலுள்ள, மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய் பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால், ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு.

எபிரெயர் 8:1.2

முதலாவதாக, அவர்தான் பிரகாரத்தின் ஊழியர். இஸ்ரவேலில் இருக்கும் பிரதான ஆசாரியன் நிறைய விஷயங்களை அறிந்திருக்க வேண்டும் என்று உங்களுக்கு எப்போதாவது தோன்றியிருக்கிறதா? அவருக்கு நிறைய விதிகளைப் படிக்க வேண்டியதாயிருந்தது. ஒரு விலங்கை எப்படிக் கொல்வது என்று அவர் அறிந்திருக்க வேண்டும். கல்லீரல், கால்கள், இருதயம், தலை, தோல் முதலிய பாகங்களை என்ன செய்ய வேண்டும் என்று அறிந்திருக்க வேண்டும். இரத்தத்தை பலிபீடத்தின் எந்த பக்கம் தெளிக்க வேண்டும் என்று தெரிய வேண்டும். இப்படி, நிறைய விதி முறைகளை அறிந்திருக்க வேண்டும். இயேசுதான் உண்மையான பிரகாரத்தின் ஊழியர். அவர் உள்ளே சென்ற போது, எல்லாம் சரியாகச் செய்தார். ஒரு ஆசாரியனாக அவர் தேவனின் தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்தார். அவர் எல்லாவற்றையும் சரியாக செய்ததால் இப்போது நாம் உரிமையோடு அணுக முடியும்.

இரண்டாவது, அவரே புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர்:

....புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.

(எபிரெயர் 9:15)

அவர் பரிசுத்த ஆவி மூலமாய், பலியின் அனுகூலங்களை உங்களுக்கும், எனக்கும் பகிர்ந்தளிக்கிறார். அவர் நமக்கு கற்பிக்கிறார், இந்த வழியில் நாம் பேசும்போது, அவர் நமக்குள் கிரியை செய்கிறார். ஆரம்ப வேலைகளை செய்து முடித்த பிறகு, அவர் திரும்பி, அவருக்குக் கிழ்ப்படிந்தவர்களின் தேவைகளை நிறைவேற்றுகிறார். புது உடன்படிக்கையை அவர் மத்தியஸ்தம் செய்கிறார்.

இப்படியாக, நமக்கு புதிய ஏற்பாட்டின் நான்கு ஆசீர்வாதங்களும் கிடைத்தன. முதலாவது, திரைச்சீலை கிழிந்தது வழி திறக்கப்பட்டது. இரண்டாவது, நமக்கு இரத்தத்தின் மூலம், சட்டபூர்வமான, அணுகும் உரிமை கிடைந்தது. மூன்றாவது நமக்கு ஒரு புதிய ஜீவனுள்ள வழி கிடைத்தது. இயேசு, கீழ்ப்படிதல், சுயத்தை-வெறுத்தல், பலி, பழைய மனுஷனின் மரணம், மூலமாக, ஒரு புதிதும் ஜீவனுமான பாதையைத் தந்தார். இயேசு சொன்னார், "என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன், அதைக் காப்பான்". (மத்.10:39). ஜீவனுக்கு கிரேக்க வார்த்தை "ஆத்துமா" என்னப்படும். நீங்கள் உங்கள் சுயத்தை கீழே போட்டு விட்டு, இல்லை என்று சொல்ல வேண்டும். பிறகு, நீங்கள் உள்ளே போக முடியும். நான்காவது, நமக்கு ஒரு மகா பிரதான ஆசாரியர் இருக்கிறார், எதை செய்யவேண்டும் என்பதை சரியாக அறிந்து, அதை பூரணமாய்ச் செய்வார்.

உண்மையாக ஆராதிப்பவர்களின் நான்கு தேவைகள்

எபிரெயரில் உண்மையாக ஆராதிப்பவர்களின் முக்கிய நான்கு தேவைகளையும் காணலாம். கர்த்தர் தம்மை ஆராதிப்பவர்களுக்காக வைத்திருக்கிறதை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், கர்த்தர் அவர்களிடம் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை காணலாம்.

> *துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.*
>
> *எபிரெயர் 10:22*

1. ஒரு உண்மையான இருதயம்

உண்மையான இருதயம் என்றால் என்ன ? நான் எனது கருத்தை முன்வைக்கிறேன். உண்மை, நேர்மை, முழு அர்ப்பணிப்பு எந்தவித மறைவு இல்லாமை - இது தான் உண்மையான இருதயம்.

நான் என் மனைவியை உண்மையாய் நேசித்தால், அவளை முற்றிலுமாக நேசிக்கிறேன். எந்த சூழ்நிலையிலும், அவளுக்கு உண்மையற்றவனாய் இருக்க மாட்டேன். நம்முடைய அகராதியில் இருக்க வேண்டிய முக்கிய வார்த்தை உண்மை ஆகும். இன்றைய

ஜனங்கள் மத்தியில் உண்மை இல்லாமல் காணப்படுகிறது. உங்கள் குடும்பத்தில் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். தேசத்தில் உண்மையுள்ள பிரஜையாக இருக்க வேண்டும்.

எல்லா சீஷர்களும் இயேசுவை விட்டு ஓடிப்போன போது, சிலுவைக்கு முன்னால் மரியாளின் அருகில் யோவானை நிற்க வைத்தது என்ன ? அது இறையியலா ? அது தான் உண்மைத்தன்மை. மகதலேனா மரியாளை, அதிகாலையில், இயேசு வைக்கப்பட்டிருந்த கல்லறைக்கு ஓட வைத்தது எது ? அது உபதேசமா ? இல்லை, அதுதான் உண்மைத்தன்மை. அவர் கெடூரமாக சிதைக்கப்பட்ட ஒரு சடலமாக இருந்தாலும் கூட, அவள் அவருக்கு உண்மையாக இருந்தாள். இன்றைய விசுவாசிகள் மத்தியில் அந்த உண்மையைக் காணமுடிவதில்லை. நாம் இயேசுவுக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். பிறரிடமும் உண்மையாயிருக்க வேண்டும். இது தான் உண்மையான இருதயம்.

> *இதோ உள்ளத்தில் உண்மையாயிருக்க விரும்புகிறீர். அந்தக்கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர். நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும் அப்பொழுது நான் சுத்தமாவேன். என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன். நான் சந்தோசமும் மகிழ்ச்சியும் கேட்கும் படி செய்யும். அப்பொழுது, நீர் நொறுக்கின எலும்புகள் களி கூரும். என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும். தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்.நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.*
>
> *சங்கீதம் 51:6-10*

இதோ என்ற வார்த்தையைக் கவனியுங்கள். தாவீது, நெடுங்காலமாக பக்தியுள்ளவனாக இருந்தான். இப்போது அவன்

ஒன்றைக் கண்டு பிடித்தான். "உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர். அந்தக்கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்". ஞானமும், உண்மையும் ஒன்றாகப் போகின்றன, உள்ளான உறுப்புகளில் உண்மையிருந்தால் தான், மறைந்திருக்கும் ஞானத்தைக் கண்டுபிடிக்க முடியும். இந்த வெளிப்பாடு, மனதின் மூலமாக அல்ல, ஆனால், உண்மையுள்ள, நேர்மையுள்ள இருதயத்தின் மூலமாகத்தான்.

பாவம், உங்கள் இருதயத்துக்குள் வந்து விட்டால், அதை ஒட்டுப்போட முடியாது. பழுது பார்க்க முடியாது. உங்களுக்கு சுத்தமான இருதயத்தைக் கொடுக்க, கர்த்தரின் கிரியையால் தான் முடியும்.

> *கர்த்தாவே, உம்மைப் பகைக்கிறவர்களை நான் பகையாமலும், உமக்கு விரோதமாய் எழும்புகிறவர்களை அருவருக்காமலும் இருப்பேனோ? முழுப் பகையாய் அவர்களைப் பகைக்கிறேன். அவர்களை எனக்குப் பகைஞராக எண்ணுகிறேன்.*
>
> *சங்கீதம் 139:21-22*

ஒரு கிறிஸ்தவன் இப்படிப்பட்ட வார்த்தைளை பேசலாமா? சிலர் ஆம் என்று சொல்லக்கூடும், சிலர் கூடாது என்று சொல்லக் கூடும். தாவீது வேறு ஒரு ஆகாரத்திற்கு சென்றார்.

> *தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை, அறிந்து கொள்ளும் என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும்.*
>
> *சங்கீதம் 139:23*

நினைவிருக்கட்டும், நீங்கள் கர்த்தரிடம் அறிக்கையிடும் போது, அவருக்கு ஏற்கனவே தெரியாத காரியத்தை அறிக்கையிடமாட்டீர்கள்

தாவீது, கர்த்தரிடம் கேட்கிறான், என் இருதயத்தில், கர்த்தருக்கு விரோதமாக ஏதாவது இருக்கிறதா? எனக்குள் உங்களுக்கு எதிரான

ஏதாவது இருக்கிறதா என்று பாருங்கள். நீங்களும் இப்படி கர்த்தரிடம் கேட்பீர்களா ? பயப்படாதீர்கள். நினைவிருக்கட்டும், நீங்கள் கர்த்தரிடம் அறிக்கையிடும் போது, அவருக்கு ஏற்கனவே தெரியாத காரியத்தை அறிக்கையிடமாட்டீர்கள் என்று மக்களிடம் நான் சொல்வதுண்டு. அறிக்கையிடுதல் உங்களுக்காக கர்த்தருக்காக அல்ல.

> *வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.*
> *சங்கீதம் 139:24*

கர்த்தர் நம்மை இந்த, நித்திய வழியிலே நடத்தும் முன், நம்முடைய இருதயங்களை ஆராய்ந்து பார்க்கும்படி, அவரிடம் கேட்க வேண்டும் - கர்த்தரின் எதிரிகள் அங்கே மறைந்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கும்படி - கர்த்தர் உங்கள் உள்ளத்தை ஆராய்ந்து பார்த்து, அதில் என்ன இருக்கிறது என்று பார்த்து. அதை சரிசெய்ய கேளுங்கள். அவருக்கு அதை வெளிப்படுத்துங்கள்.

கர்த்தர் சொல்வதெல்லாம் சரி. அவருக்கு பொய்யான வழிகள் ஒத்துப்போகாது. அது ஒரு உணர்ச்சியல்ல. அது ஒரு தீர்மானம்.

> *இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது.*
> *ஏசாயா 29:13*

அது இருதயமில்லாத பக்தி. அது தேவனை உதடுகளால், கனம்பண்ணுகிறது. ஆனால், இருதயமோ விலகியிருக்கிறது. மதபக்தியுள்ளவர்களைப்பற்றி இயேசு கிறிஸ்து, வேத பாரகரிடம் மாய்மாலக்காரர்கள் என்று கடிந்து கொண்டார். மாய்மாலம் என்றால் என்னவென்று தெரியுமா ? இந்த வார்த்தை, நடிகருக்கான கிரேக்க

வார்த்தையிலிருந்து வருகிறது. மதம் என்பது, வேஷம் போட்டு நடிப்பது போன்றது. பழைய நாடகத்தில் பல வகையான முகமூடிகளைப் பயன்படுத்தினார்கள். ஒரு நடிகன், பாத்திரங்களுக்கேற்றபடி முகமூடிகளை மாற்றிக் கொள்வான். வெத்து மதங்கள் வெவ்வேறு வேஷங்களைப் போட்டு கொள்கின்றன - சபையிலும் இப்படி மாய்மாலம் காணப்படுகிறது. பல மதத்தலைவர்கள் சபையில், வித்தியாசமான குரலை பயன்படுத்துகிறார்கள். அவர்கள் ஜெபம் செய்யும்போது, அவர்கள் ஒரு செயற்கையான, பொய்யான குரலைப் பயன்படுத்துகிறார்கள்,

மேலும் தேவன் மாய்மாலக்காரனிடம் இருந்து சத்தியத்தை பார்ப்பதை விலக்கிவிட்டதாக சொல்கிறார்.

> *ஆதலால், இதோ, நான் அற்புதமும், ஆச்சரியமுமான, பிரகாரமாக இந்த ஜனங்களுக்குள்ளே, ஒரு அதிசயத்தைச் செய்வேன்; அவர்களுடைய ஞானிகளின் ஞானம் கெட்டு, அவர்களுடைய விவேகிகளின் விவேகம் மறைந்துபோகும் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.*
>
> *ஏசாயா 29:14*

கர்த்தர், உண்மையான இருதயத்துடன், ஆராதிக்கிறவர்களை, விரும்புகிறார். மத சம்பந்தமான நடிப்பு அல்ல. அவர் உண்மையுள்ள இருதயங்களை விரும்புகிறார். விசுவாசம், கீழ்ப்படிதல் என்று மொழிபெயர்க்கப்படுவதை நான் பார்க்கிறேன். அதை எந்த சூழலிலும் கிறிஸ்துவின் பேரிலுள்ள உண்மைத்தன்மை என்று சொன்னால் பொருந்தும் என்று பரிந்துரைக்கிறேன். அவை ஒரே நோக்கத்திற்காக கிரியை செய்வதை நீங்கள் காணலாம் என்று நினைக்கிறேன்.

2. விசுவாசத்தின் நிறைவு

எனவே, ஒரு உண்மையாக ஆராதிப்பவரின் இருதயம் உண்மையாக இருக்க வேண்டும் என்பது முதல் தேவை. இரண்டாவது தேவை,

விசுவாசத்தின் நிறைவு. உங்களுக்கு விசுவாசத்தின் நிறைவு இருக்கிறதா? அது ஒரு முயற்சியா, அல்லது போராட்டமா? நான் விசுவாசத்தின் நிறைவுள்ளவனாக இருக்கிறேனா என்று கேட்டுப் பாருங்கள். விசுவாசம் ஒரு தீர்மானம். அதனால் தான், அவிசுவாசம் ஒரு ஆரம்ப பாவமாகும். விசுவாசத்தின் நிறைவு பெற என்ன செய்ய வேண்டும்? சங்கீத புத்தகத்தை பார்ப்போம்:

> *எல்லாவற்றைப்பற்றியும், நீர் அருளின எல்லாக் கட்டளைகளும், செம்மையென்று எண்ணி, சகல பொய் வழிகளையும் வெறுக்கிறேன்.*
>
> *சங்கீதம் 119:128*

கர்த்தர் சொல்வதெல்லாம் சரி. அவருக்கு பொய்யான வழிகள் ஒத்துப்போகாது. அது ஒரு உணர்ச்சியல்ல. அது ஒரு தீர்மானம். நான் கர்த்தர் சொல்வதை ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன். நான் இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பெற்ற போது, நான், இராணுவ முகாமில் இருந்தேன். எனக்கு, புதிய ஏற்பாட்டு உபதேசங்கள் ஒன்றும் தெரியாது. ஆனால், ஒன்றை மட்டும் கண்டுபிடித்தேன்: வேதாகமத்தில் எல்லாவற்றுக்கு பதில் உண்டு என்பது. அது எனக்கு என்ன நேர்ந்தது என்பதைச் சொன்னது.

அறிவு பூர்வமான வாக்கு வாதங்கள், அடிப்படையாக, ஒரு தீர்மானத்தை எடுக்கவிடாமல் தடை செய்கின்றன. நீங்கள் விசுவாசம் பெற, முழு வேதாகமத்தையும் வாசித்து, புரிந்து கொள்ளும் வரை காத்திருப்பீர்கள் என்றால், வெகு காலம் காத்திருக்க வேண்டி வரும். விசுவாசம் என்பது கிறிஸ்துவையும் வேதவசனங்களையும் ஏற்றுக்கொள்ளும் ஒரு தீர்மானமாகும். நான் அந்த தீர்மானத்தை எடுத்தேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! என்னுடைய மனம் இப்போது இளைப்பாறுதல் பெற்றிருக்கிறது. எனக்கு பூரணமான சமாதானம் இருக்கிறது.

அவைகளால், நாங்கள் தர்க்கங்களையும் தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.

2 கொரிந்தியர் 10:5

இந்த வசனம் சொல்வதை நீங்கள் செய்யலாம். உங்களுக்குள்ளே, தேவனோடு வாக்குவாதம் செய்ய பயிற்சி பெற்ற ஒரு மனம் இருக்கிறது. இயல்பாகவே, அது தேவனுக்கு எதிராக உள்ளது. "எப்படியென்றால், மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை; (ரோமர் 8:7) உங்களுடைய எதிரியை அடக்குவது, உங்கள் கடமை. அவனுக்கு பேச உரிமை கொடாதீர்கள்.

ஆனாலும், அவன் எவ்வளவாகிலும், சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே, கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன், காற்றினால் அடிபட்டு, அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. இரு மனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்.

யாக்கோபு 1:6-8

இருமனமுள்ளவன், நிலையற்றவன், தீர்மானம் எடுக்க முடியாதவன், தேவனை அணுக முடியாது. கர்த்தர் சொல்வது சரிதான் என்று முதலில் முடிவெடுங்கள். அது தான் விசுவாசத்தின் நிறைவாகும். கர்த்தர் எனக்கு கொடுத்த கூடுதல் எச்சரிக்கையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.

ஆகையால், சத்தியத்தை விசுவாசியாமல், அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும் படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக்

கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார். உங்களுக்கு பொருந்தும்வரை விசுவாசித்து விட்டு, மீதியை விட்டு விடாதீர்கள் முழுமை பெறாத கீழ்ப்படிதல் கீழ்ப்படியாமையாகும்.

2 தெசலோனிக்கேயர் 2:11-12

வேதாகமத்தோடு நீங்கள் அறிமுகமில்லாதிருந்தால், அது உங்கள் மூச்சை நிறுத்திவிடும். அது மிக எளிது. சத்தியத்தை நீங்கள் விசுவாசிக்கவில்லை என்றால், நீங்கள் பொய்யை நம்புகிறீர்கள். அது ஏவாளின் தேர்ந்தெடுப்பு ஆகும். தேவன் சத்தியத்தை அவளிடம் சொன்னார்; சாத்தான் பொய்யை அவளிடம் சொன்னான். இவள் இரு மனதுள்ளவளாக இருந்தாள். அவள் பொய்யை தெரிந்து கொண்டாள். அதுதான் விசுவாசம். அவிசுவாசம் என்றால் என்ன ? அது பொய்யை விசுவாசிப்பது. ஒன்றையும் விசுவாசியாமல் இருப்பதல்ல. ஒவ்வொருவரும், ஏதாவதொன்றை விசுவாசிக்கிறாா்கள். தீா்மானம் எப்பொழுதுமே ஒன்று தான் - நான் தேவனை விசுவாசிப்பதோ அல்லது சாத்தானை விசுவாசிப்பதா ? நீ சத்தியத்தை விசுவாசிக்காவிட்டால், உங்களை பொய்யை விசுவாசிக்க விட்டுவிடுவாா்.

இதை குறித்து ஏமாறாதீர்கள். உங்களுக்கு பொருந்தும் வரை விசுவாசித்துவிட்டு, மீதியைவிட்டு விடாதீர்கள். முழுமை பெறாத கீழ்ப்படிதல் கீழ்ப்படியாமையாகும்.

ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்.

1 தெசலோனிக்கேயர் 2:11-12

இதை குறித்து ஏமாறாதீர்கள். உங்களுக்கு பொருந்தும் வரை விசுவாசித்துவிட்டு, மீதியைவிட்டு விடாதீர்கள். முழுமை பெறாத கீழ்ப்படிதல் கீழ்ப்படியாமையாகும். முழுமையற்ற விசுவாசம், அவிசுவாசம். நீங்கள் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளலாம். அல்லது நீங்கள் குழப்பத்துக்குள் வரலாம். இந்த யுகம் முடிவடைவதற்குள் - இந்த இரண்டு அபிப்பிராயங்கள் தான் தேவ பிள்ளைகளுக்கு உண்டு.

3) ஒரு தீய மனசாட்சியிலிருந்து தெளிக்கப்பட்ட இருதயங்கள்

உண்மையான ஆராதனை வீரருக்கான அடுத்த தேவை ஒரு தீய மனசாட்சியிலிருந்து தெளிக்கப்பட்ட இருதயம்.

> *இப்படி நாம், அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.*
>
> *ரோமர் 5:9*

நாம் இயேசுவின் இரத்தத்தினாலே, நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறோம் என்று ரோமர் நிருபம் கூறுகிறது. என்னுடைய போதனையை நீங்கள் அறிந்திருந்தால், நீதிமானாக்கப்படுதல் குறித்த எனது விளக்கத்தை நீங்கள் அறிவீர்கள். அது "நான் ஒருபோதும் பாவம் செய்யாதது போல நீதிமான்" என்பதாகும். அப்படித்தான் இயேசுவின் இரத்தம் நம்மை நீதிமான்களாக்கும். இனி எந்த பாவ உணர்வும் இருக்காது.

> *ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின் படி நடவாமல் ஆவியின் படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.*
>
> *ரோமர் 8:1*

நான் நீதிமானாக்கப்பட்டேன் - நான் "ஒரு போதும் பாவம் செய்யாதவனைப்போல்"

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும், நீக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்கு, அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

1 யோவான் 1:9

பிரியமானவர்களே, நம்முடைய இருதயம், நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில், தைரியங்கொண்டிருந்து.

1 யோவான் 3:21

மறுபுறம், என் இருதயத்தில் எந்த வகையிலும் நான் கண்டிக்கப்படாவிட்டால், நான் தேவனை அணுக முடியாது.

என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்.

சங்கீதம் 66:18

நீங்கள் ஒரு விசுவாச நிலைப்பாடு எடுக்க வேண்டும், "என்னுடைய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டன. நான் அவற்றையெல்லாம் அறிக்கையிட்டுவிட்டேன். கர்த்தர் அவற்றையெல்லாம் மன்னித்துவிட்டார். இயேசு கிறிஸ்துவின் இரத்தம், என்னுடைய எல்லா அநீதிகளிலிருந்து கழுவிவிட்டாது. நான் நீதிமானாக்கப்பட்டேன் - நான் ஒரு போதும் பாவம் செய்யாதவனைப்போல்" - நீங்கள் இதை விசுவாசிக்கிறீர்களா ? நான் விசுவாசிக்கிறேன். எந்த மத சம்பந்தமான சந்தேகத்தையும், என்னுடைய மனம் ஏற்றுக் கொள்ளாது. கர்த்தர் உண்மையுள்ளவர், நீதியுள்ளவர் என்பதை நான் விசுவாசிக்கிறேன். கர்த்தர் என்னை எல்லா பாவத்திலிருந்தும் விடுவித்தார். எல்லா

அநீதியிலிருந்தும் என்னை விடுவித்தார். நான் தேவ பிரசன்னத்துக்காக கெஞ்ச வேண்டியதில்லை. நான் இப்போது நிமிர்ந்து நடப்பேன், "உங்களை நிமிர்ந்து நடக்கப்பண்ணின...". (லேவி:26:13) எபிரெயர் நிரூபம் இதைவிட சிறந்த ஒன்றைச் சொல்கிறது:

> *அவர்களுடைய பாவங்களையும், அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார்.*
>
> *எபிரெயர் 10:17*

கர்த்தருக்கு ஞாபக சக்தி குறைவுபடவில்லை. அவர் ஒரு பெரிய மறதிக்காரர்! ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. தேவன் மறக்க முடிவுசெய்யாத யாவையும் நினைவில் வைக்கிறார். கர்த்தர், மறக்க தீர்மானித்தால், அதை ஒருபோதும் நினைவு கூறமாட்டார்.

4) சுத்த தண்ணீரால், சரீரங்கள் கழுவப்படுதல்

உங்கள் சரீரம் சுத்தமாக இல்லாவிட்டால், தேவ சந்நிதிக்குள் பிரவேசிக்க முடியாது என்பது உங்களுக்குத் தெரியுமா?

> *துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால், கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.*
>
> *எபிரெயர் 10:22*

உங்கள் சரீரம் சுத்த ஜலத்தால் கழுவப்பட வேண்டும் என்பதன் அர்த்தம் என்ன? சுத்த ஜலம் என்பது என்ன? சுத்த ஜலம் என்பது, தேவனுடைய வார்த்தையாகும். தேவனுடைய வார்த்தை எப்படி சுத்திகரிக்கும்?

ஆவியினாலே, சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால்,

1 பேதுரு 1:22

கர்த்தருடைய வார்த்தை, ஆவியின் மூலம் நம்மை சுத்திகரிக்கிறது. ஆவியில் ஊழியஞ்செய்யப்பட்டு, வார்த்தைக் கீழ்ப்படிந்தால், அது உங்களைச் சுத்திகரிக்கிறது.

அவர்மேல் (இயேசு கிறிஸ்து) இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்.

1 யோவான் 3:3

ஆவியின் மூலம், உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வார்த்தைக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்கள் உங்களையே, சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள். நாம் எவ்வளவு சுத்திகரிக்க வேண்டும்? அவர் சுத்தராய் இருக்கிறார். தேவன் ஒரே தகுதியை வைத்திருக்கிறார் - அவர்தான் இயேசு.

நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசி மார்க்கத்துக்கு விலகியிருந்து, தேவனை அறியாத அஞ்ஞானிகளைப் போல மோக இச்சைக்குட்படாமல்.

1 தெசலோனிக்கேயர் 4:3-4

உங்கள் சரீரம் பாத்திரமாயிருக்கிறது, வேதம் சொல்கிறது, அந்த பாத்திரத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாக இருக்கிறது.

சமாதானத்தின் தேவன் தாமே, உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்

போது, குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.
1 தெசலோனிக்கேயர் 5:23

ஆண்டவருடைய வருகை மட்டும் நீங்கள் உங்கள் சரீரங்களை குற்றமற்றவைகளாக பாதகாத்துக் கொள்ள வேண்டுமென்று வேதம் சொல்கிறது. அது முழு பரிசுத்தமாகும். என்னுடைய சரீரம் குற்றமற்றதாகக் காக்கப்படாவிட்டால், அது முழு பரிசுத்தமில்லை. பரிசுத்தத்தோடும், கனத்தோடும் உங்கள் பாத்திரத்தை எப்படி பாதுகாக்க வேண்டும் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பது தேவ சித்தமாகும்.

1 கொரிந்தியர் 6-ம் அதிகாரத்தில், முக்கியக் கருத்து, சரீரம் பற்றியது தான். அநேக கிறிஸ்தவர்கள், சரீரம் அவ்வளவு முக்கியமல்ல என்ற கருத்தோடு, வளர்கிறார்கள். வேதம் அப்படி சொல்லவில்லை. கவனியுங்கள், உங்கள் சரீரத்தின் மதிப்பைக் குறைப்பது வேதபூர்வமானதல்ல.

எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு. ஆகிலும், நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்.
1 கொரிந்தியர் 6:12

கவனியுங்கள், உங்கள் சரீரத்தின் மதிப்பைக் குறைப்பது வேதபூர்வமானதல்ல.

மூன்று ஐஸ்-கிரீம் (ஒரு நாளைக்கு) சாப்பிடுவது, என்னைப் பொறுத்தவரை நல்லது தான். ஆனால், அது எனக்கு எந்த நன்மையும் செய்யாது. ஐஸ்கிரீம், சிகரெட், காபி, அவைகள் என்னை அடிமைப்படுத்தக் கூடாது. லெஸ்டர் ஸம்ரால் ஒரு முறை சொன்னார், "காலையில் எழுந்தவுடன் ஒரு கோப்பை காபிக் குடித்தால் நலமாய் இருக்குமே என்று நான் நினைப்பேன். ஆனால், குடிக்கமாட்டேன்". அது நல்ல தீர்மானம்.

நீங்கள் எதையாவது சார்ந்து நின்றால், அதற்கு அடிமையாகி விடுகிறீர்கள்.

வயிற்றுக்குப் போஜனமும், போஜனத்துக்கு வயிறும்; ஏற்கும். ஆனாலும், தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார். சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது. கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்.

1 கொரிந்தியர் 6:13

வயிற்றுக்கு உணவு, உணவுக்கு வயிறு. இவை இரண்டுமே, நிரந்தரமல்ல. அவைகள் கிடைக்கும் போது சாப்பிடுங்கள்; அது, நெடு நாளைக்கானது அல்ல.

சரீரமோ வேசித்தனத்திற்கல்ல. கர்த்தருக்கே உரியது. கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்.

1 கொரிந்தியர் 6:13

அநேகக் கிறிஸ்தவர்கள், முதற்பகுதிக்கு ஆமென் சொல்லுவார்கள். உங்கள் சரீரம் தேவனுக்குரியது என்றால் அர்த்தம் என்ன ? கர்த்தர் சரீரத்துக்குரியவர் என்றால் அர்த்தம் என்ன ?

தேவன் கர்த்தரை எழுப்பினாரே, நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்புவார். உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே.

1 கொரிந்தியர் 6:14-15

பூமியில், கிறிஸ்துவின் உறுப்பினர்கள், நம்முடைய சரீர உறுப்புகளாவார்கள். அவற்றால், அவர் கிரியை செய்கிறார்.

வேசியோடு இசைந்திருக்கிறவன், அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா? இருவரும் ஒரே

மாம்சமாயிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறதே. அப்படியே, கர்த்தரோடு இசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்.
1 கொரிந்தியர் 16-17

இரட்சிக்கப்பட்ட விசுவாசியின் சரீரம் தான் அவர் வாசஞ் செய்யும் இடம்.

முன்பு, மனிதனுடைய ஆவி, ஆராதனையில் தேவனுடைய ஆவியோடு இசைந்திருக்கிறதென்று பார்த்தோம். மறுபடியும் இங்கே, வேசியோடுள்ள உறவையும், கர்த்தருடைய ஆவிக்குரிய உறவையும் பார்க்கிறோம். கர்த்தரோடு, அன்பு உறவில் இசைந்திருக்கும் நாம், ஆவியோடும் இசைந்திருக்கிறோம்.

வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள் மனுஷன் செய்கிற எந்தப் பாவமும், சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும். வேசித்தனஞ் செய்கிறவனோ, தன் சுய சரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான். உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால், தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும், உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.
1 கொரிந்தியர் 6:18-20

வேசித்தன பாவங்கள் சரீரத்தை அசுத்தப்படுத்துகிறது. நீங்கள், உங்களுக்குச் சொந்தமானவர்கள் அல்ல. அது உங்கள் சரீரத்தையும் உள்ளடக்கியது. நீங்கள் தேவனுடைய ஆஸ்தி. உங்கள் சரீரத்தின் மேலான நோக்கம், பரிசுத்த ஆவிக்கு ஒரு ஆலயமாக சேவை செய்வதாகும். ஆகிலும், உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார். (அப்.7:48). நீங்கள் அவருக்கு அழகான

ஆலயம் கட்டலாம் அல்லது உச்சிகோபுர ஆலயம் கட்டலாம். அவருடைய பிள்ளைகள் அங்கே கூடியிருப்பதால், அவர் அங்கே வரலாம். ஆனால், இரட்சிக்கப்பட்ட விசுவாசியின் சரீரம் தான் அவர் வாசஞ் செய்யும் இடம்.

> *ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும், சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து.*
>
> *மத்தேயு 28:19*

நீங்கள் உங்கள் சரீரங்களை கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்த பிறகு, நீங்கள் ஞானஸ்நானம் எடுக்கிறீர்கள். முழுக்கு ஞானஸ்நானம் - ஜலத்தினால் பரிசுத்தப்படுத்தும் முறை. இரத்தத்தை பலியாக, பலிபீடத்தில் செலுத்தியபின் ஒவ்வொரு பொருளும், ஜலத்தில் கழுவப்பட வேண்டும். அது சரீர பிரகாரமாக உங்களை சுத்திகரிப்பதற்காக அல்ல, ஆனால், உங்கள் சரீரத்தை பரிசுத்தப்படுத்துவதற்காக, ஏனெனில், நீங்கள் கர்த்தருக்காக பிரித்து வைக்கப்பட்டு இருக்கிறீர்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும், பாவ மன்னிப்புக்கென்று, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது, பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். (அப்போ.2:38). எத்தனை பேர் ? நீங்கள் எல்லோருமே. நீங்கள் அப்படிச் செய்துவிட்டால், நீங்கள் உங்கள் சரீரத்தை, ஜீவ பலியாக செலுத்த வேண்டும். பவுல் எழுதுகிறார்,

> *அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று.......*
>
> *ரோமர் 12:1*

உங்கள் சரீரமானது தேவனுடைய பலிபீடத்தில் வைக்கப்படும் போது,

பரிசுத்தப்படுகிறது. இவ்வகையாகத்தான், உங்கள் சரீரம் பரிசுத்தத்திலும், கனத்திலும் பாதுகாக்கப்படுகிறது. அதை பலிபீடத்தில் வையுங்கள். இயேசு பரிசேயரிடம் சொன்னார், "மதிகேடரே, குருடரே! எது முக்கியம்? காணிக்கையோ, காணிக்கையைப் பரிசுத்தமாக்குகிற பலி பீடமோ?... (மத்.23:18-19)யைப் பார்க்கவும். நீங்கள் சரீரத்தை, தேவனுடைய பலிபீடத்தின் மேல் வைப்பீர்களானால், அது பலிபீடத்தோடு இணைந்திருக்கும் காலம் வரைக்கும், அது பரிசுத்தப்படுத்தப்படும். ஆனால், தொடர்பை துண்டித்தால், பரிசுத்தம் இழக்கப்படும்.

உங்கள் சரீரம் உங்களுக்கு சொந்தமானதல்ல; அது தேவனுக்குச் சொந்தமானது.

> *ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள்.*
>
> *ரோமர் 6:12-13*

சுருக்கமாக, நீங்கள், உங்கள் இருதயங்களில் தீய-மனசாட்சியால் தெளித்திருக்கிறீர்கள், உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று உங்களுக்கு தெரியும், உங்களுடைய சரீரம், சுத்த ஜலத்தால் கழுவப்பட்டது, - தேவனுடைய வார்த்தையாகிய சுத்த ஜலம். பரிசுத்த ஆவியால் உங்களுக்கு அருளப்பட்ட சத்தியத்துக்கு கீழ்ப்படிந்ததின் மூலம், உங்களை சுத்தமாக்கியிருக்கிறீர்கள். விசுவாசித்த பிறகு, முதல் சுத்திகரிக்கும் செயல், ஜலத்தில் முங்கி ஞானஸ்நானம் எடுப்பது. அதன் பிறகு, உங்கள் சரீரம் ஜலத்தாலும், இரத்தத்தாலும் பரிசுத்தம்

படுத்தப்பட்டதாகத் தேவனின் பலிபீடத்தில் வைக்கப்படுகிறது. நீங்கள் உங்களுடைய ஒவ்வொரு அவயவங்களையும், கருவியாகப் படைக்கிறீர்கள். அதன் பிறகு, உங்கள் சரீரம் கர்த்தருக்கு, ஒரு பாத்திரமாகிறது. இயேசு கிறிஸ்துவுக்கு இந்த ஒரு கருவி தான், அவருடைய சித்தம் செய்ய பூமியில் இருந்தது. நம்முடைய அவயவங்கள், கிறிஸ்துவின் அவயவங்கள் ஆகும்.

ஆராதனையில் நம்முடைய சரீர சுபாவம்

அசைவில்லாத ஆராதனையென்று ஒன்று இல்லை. நம்முடைய சரீரம் பிரதிவினை செய்யாத ஒரு ஆராதனை இல்லை. ஆராதனை, சுறு சுறுப்பானது. வேதாகமத்தை வாசிக்கும் சிலாக்கியம் எனக்கு கிடைத்தது. அதில் பழைய ஏற்பாட்டை எபிரேய மொழியிலும் புதிய ஏற்பாட்டை கிரேக்க மொழியிலும் படித்திருக்கிறேன். சில காலத்துக்கு முன், இரண்டு மொழிகளிலும், ஆராதனைப் பற்றிய வார்த்தைகளை குறிப்பெடுக்க நான் முடிவு செய்தேன். அப்படிச் செய்த போது, நான் ஒன்றைக் கண்டு பிடித்தேன். அது ஆராதனை பற்றிய என் முழு கருத்தையும் மாற்றியது. ஆராதனை குறித்த ஒவ்வொரு வார்த்தையும், உடலின் ஒவ்வொரு நிலையைக் காண்பித்தது. தலையில் ஆரம்பித்து, கால்வரையுள்ள நிலைகளைக் குறிக்கும் உதாரணங்களை விவரிக்கிறேன்.

தலை

ஆதியாகமம் 24-ல் ஆபிரகாமின் வேலைக்காரன், ஆபிரகாமின் குமாரன், ஈசாக்குக்கு ஒரு மணப்பெண்ணைப் பார்க்க மெசப்பட்டோமியாவுக்கு அனுப்பப்பட்டான். வேலைக்காரனுக்கு எங்கே யாரை சந்திக்க வேண்டும் என்று தெரியாது. அந்த வேலைக்காரன் உணராமலேயே, தேவன் அவனை ஆபிரகாமின் சகோதரனிடம்

அனுப்பினார். அக்காலத்தில், பெண் பார்ப்பது இப்படித்தான் வழக்கம். அதனால், வேலைக்காரன் அவன் சந்தித்த ஸ்திரீயாகிய ரெபெக்காள், ஆபிரகாமின் உறவினர் என்பதை உணர்ந்தான். ஆதியாகமம் 24:26 சொல்கிறது, *வேலைக்காரன் தலை குனிந்து, கர்த்தரை பணிந்து கொண்டான்* என்று பார்க்கிறோம்.

பின்னர், யாத்திராகமத்தில் மோசேயும், ஆரோனும் அடிமைப்படுத்தப்பட்ட இஸ்ரவேல் தேசத்திற்கு செய்தி சொல்ல வனாந்தரத்திலிருந்து திரும்பி வருவதைக் காண்கிறோம். தேவன் இறங்கிவந்து அவர்களை எகிப்தியர்களிடமிருந்து விடுவிக்க உறுதியளித்தார் என்று சொன்னார்கள். அவர்கள் இஸ்ரவேல் தலைவர்களுக்கு தேவனின் செய்தியைச் சொன்ன பிறகு *ஜனங்கள் விசுவாசித்தார்கள்; கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைச் சந்தித்தார் என்றும், அவர்கள் படும் உபத்திரவங்களை கண்ணோக்கிப் பார்த்தார் என்றும், அவர்கள் கேட்ட போது, தலைகுனிந்து தொழுது கொண்டார்கள்*. (யாத்திராகமம் 4:31) என்று வாசிக்கிறோம்.

அடுத்தமுறை, நீங்கள் உணவுக்கு முன்பதாக கிருபை என்று சொல்லும்போது, உங்கள் தலையை நிமிர்த்தாதீர்கள், தலை வணங்குங்கள். இது தேவனுடனான உங்கள் முழு உறவுக்கும் முழுமையான வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது.

வேறு சூழ்நிலையில், வேறுவிதமான நிலைகள் சிரமமாக இருக்கலாம். ஆனால், உங்கள் தலைகளை தாழ்த்தலாம். உதாரணமாக, என் மனைவி ரூத்தும், நானும், ஒரு உணவு விடுதியில் உணவு சாப்பிட்டோம். சாதாரணமாக, உணவுக்கு முன் நாங்கள் ஒரு நீண்ட ஜெபம் செய்வோம். அந்த சமயம், முட்டுப்போடவோ, முகங்குப்புரவோ முடியாது. ஆனால், தலைகுனிந்து ஜெபிப்பது வசதியாக இருந்தது.

நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன், அடுத்தமுறை நீங்கள் உணவுக்கு முன்பதாக கிருபை என்று சொல்லும்போது, உங்கள் தலையை நிமிர்த்தாதீர்கள், தலை வணங்குங்கள். இது தேவனுடனான உங்கள் முழு உறவுக்கும் முழுமையான வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. இது எளிய முறைதான். ஆனால், மிக முக்கியமான செயலாகும்.

கைகள்

உலகிலேயே மிக சிறந்த ஆராதனை வீரர்களில் ஒருவராக தாவீது இருந்தார். அவர், கைகளினால் தேவனை ஆராதிப்பதை குறித்து இரண்டு முறைகளை நமக்கு கொடுத்திருக்கிறார். சங்கீதம் **63**ல் இந்த அழகான வார்த்தைகளுடன் தொடங்குகிறது:

> *தேவனே, நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே, உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும், தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது.*
>
> *சங்கீதம் 63:1*

யூதாவின் வனாந்திரத்தில் தாவீது இருந்தபோது, இந்த ஜெபத்தை தேவனிடம் ஏறெடுத்தார். அவர் தொடர்ந்து சொல்லுகிறார்:

> *ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது; என் உதடுகள் உம்மைத் துதிக்கும். என் ஜீவனுள்ள மட்டும் நான் உம்மைத் துதித்து, உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன்....*
>
> *சங்கீதம் 63:3-4*

கைகளை, தேவனுக்கு நேராக உயர்த்தி ஜெபிப்பது வேதாகமத்தில் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. சங்கீதம் **141**இல், தாவீது

கைகளின் இதே முறையை விவரிக்கிறார், *என் விண்ணப்பம், உமக்கு முன்பாகத் தூபமாகவும், என் கையெடுப்பு, அந்திப்பலியாகவும் இருக்கக்கடவது. (சங்கீதம் 141:2)* தூபமாகவும் என்ற இந்த வார்த்தை, நமக்கு ஆராதனையைக் குறிக்கிறது. ஆலயத்தில் காலையிலும், மாலையிலும் பலிகள் செலுத்தப்பட்டன. ஒரு நாளின் இறுதியில் மாலை பலியாக தன் கையெடுப்பை ஏற்றுக்கொள்ளும்படி தாவீது தேவனிடம் கேட்டுக்கொண்டிருந்தார்.

பின்னர், சங்கீதம் **143**இல் தாவீது கைகளின் மற்றொரு முறையை விவரிக்கிறார். *என் கைகளை உமக்கு நேராக, விரிக்கிறேன். ஆத்துமா, உம்மேல் தாகமாயிருக்கிறது (சங்கீதம் 143:6).* மீண்டும், தேவனுக்காக வாஞ்சிக்கும் மொழியை கவனியுங்கள்.

கைகளின் இந்த இரண்டு மனோநிலைகளின் முக்கியத்துவத்திலும் வேறுபாடு இருப்பதாக நான் நினைக்கிறேன். நீங்கள் உங்கள் கைகளை உயர்த்தும்போது, தேவனுடைய ராஜரீகத்தையும், மேன்மையையும் ஒப்புக்கொள்கிறீர்கள். நீங்கள் உங்கள் கைகளை விரிக்கும்போது, நீங்கள் பெறுவதற்கு ஆயத்தமாகிறீர்கள்.

ஒரு முறை நானும், ரூத்தும், ஹாலந்துக்கு சென்றிருந்தோம். அங்கே, ஒரு கூட்டம் நடத்தினோம். ரூத், கூட்டத்தில், தன் கைகளை விரித்து ஜெபித்தாள் அந்நேரத்தில் நாங்கள் ஒரு அருமையான ஆராதனையை அனுபவித்து கொண்டிருந்தோம். பிறகு சொன்னாள், "என் கைகள் கனமாக இருக்கிறது. அதிக நேரம் இதே நிலையில் இருந்து விட்டேன்" என்றாள். மகிமை (க்ளோரி) என்பதற்கு எபிரெய வார்த்தை எடையைக் குறிக்கும் வார்த்தையான செவ்ட் மற்றும் செவ்ரான் என்ற அதே வார்த்தையாகும். "கர்த்தர் உன் கைகளில் மகிமையை வைக்கிறார்" என்றேன்.

தேவன் நம் உடல்களைக் கையாள்வதில் எவ்வளவு உண்மையானவர் என்பதை நீங்கள் காண வேண்டும் என்பதற்காக

இதைச் சொல்கிறேன். நாம் காற்றில் மிதக்கும் உடலற்ற ஆவிகள் அல்ல; நாம் மிகவும் உண்மையான உடல்களில் வாழும் மக்கள் ஆராதனையில் நாம் உடலை முழுமையாகக் கட்டுப்படுத்த தேவன் விரும்புகிறார்.

எனக்குப் பிடித்த ஒரு ஆராதனை, கைக்கொட்டி ஆராதிப்பது. *சகல ஜனங்களே, கைக்கொட்டி, தேவனுக்கு முன்பாகக் கெம்பீரசத்தமாய் ஆர்ப்பரியுங்கள் (சங்கீதம்47:1)*. நாம் ஆராதனையில் அனைவரும் கைக்கொட்டும் போது, நாம் தேவனை ஆராதிக்கிறோம். ஆராதனை என்பது நீங்கள் உட்கார்ந்திருக்கும் இறுக்கமான நிலையல்ல, அது முழு உடலின் செயல்பாடாகும்.

முழங்கால்கள்

தன் கைகளை தேவனுக்கு நேராக விரித்த இன்னொரு நபர் சாலொமோன் ராஜா. இது ஆலயம், தேவனுக்குப் பிரதிஷ்டை செய்யப்பட்ட போது நடந்தது. ஆனால், சாலொமோன் சற்று அதிகமாய் செய்தான். அவன் கைகளை விரித்தது மட்மல்ல, அவன் அடுத்த ஆராதனை மனநிலைக்குள்ளும் பிரவேசித்தான்.

> *கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்னே இஸ்ரவேல் சபையார் எல்லாருக்கும் எதிராக நின்று தன் கைகளை விரித்தான். சாலொமோன் ஐந்து முழ நீளமும், ஐந்து முழ அகலமும், மூன்று முழ உயரமுமான, ஒரு வெண்கலப் பிரசங்க பீடத்தை உண்டாக்கி, அதை நடுப்பிரகாரத்திலே வைத்திருந்தான்; அதின்மேல் அவன் நின்று, இஸ்ரவேலின் சபையார் எல்லாருக்கும், எதிராக முழங்காற்படியிட்டு, தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து.*
>
> *2 நாளாகமம் 6:12-13*

தானியேல் புத்தகத்தில், தரியு அரசன் ஒரு கட்டளை பிறப்பிக்கிறான். மக்கள் யாவரும், ராஜாவைத் தவிர வேறு எந்த

தேவனையும் வணங்கக் கூடாது. அப்படி வணங்கினால், அவர்கள் சிங்கக்கெபியிலே எறியப்படுவார்கள் என்று கட்டளையிட்டான். ராஜாவின் எழுதப்பட்ட கட்டளைக்கு, இதுவே தானியேலின் பதில்:

நீங்கள் உங்கள் கைகளை விரிக்கும்போது, நீங்கள் பெறுவதற்கு ஆயத்தமாகிறீர்கள்.

> *தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும் தன் வீட்டுக்குள்ளே போய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்து வந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக, முழங்காற்படியிட்டு, ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்.*
>
> *தானியேல் 6:10*

தானியேல், வழக்கமாக, முழங்கால் படியிட்டு, எருசலேமுக்கு நேராக தினம் மூன்று வேளை ஜெபித்தான். (இப்பொழுதும், யூதர்கள் எங்கேயிருந்தாலும், எருசலேமுக்கு நேராக, முழங்கால் படியிட்டு ஜெபிக்கிறார்கள்.) சாலொமோனும், தானியேலும், முழங்காற் படியிட்டு ஜெபித்தார்கள். பின்னர், எபேசியரில் பவுல் சொல்கிறார்:

> *நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு.*
>
> *எபேசியர் 3:15*

பவுல் அப்போஸ்தலன், ஜெபித்து, ஆராதிக்கும் போது, அவர் வழக்கமாக, முழங்காற்படியிட்டு ஜெபித்தார். முழங்காற்படியிடுவது, முழுவதும் ஒப்புக் கொடுப்பதைக் காட்டுகிறது. இது மிக முக்கியமானது. அநேக கிறிஸ்தவர்கள் கர்த்தருக்கு முன் முழங்காற் படியிட்டு, தங்களை ஒப்புக் கொடுப்பதில்லை. தேவன் அவர்கள் விரும்புவதைச் செய்யும்போது அவர்கள் ஒப்புக்கொடுக்கிறார்கள். ஆனால் தேவன்

அவர்கள் விரும்புவதை விட வித்தியாசமாகச் செய்யும்போது அவர்கள் குறைச்சொல்லிக்கொண்டு வாதம் செய்து வருத்தப்படுகிறார்கள்.

நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான காரியம் ராஜரீகம். இன்றும் நாம் இந்த வார்த்தையை அதிகம் கேட்பதில்லை. ஆனால், அது கர்த்தரைக் குறித்த ஒரு வார்த்தையாகும். கர்த்தர் ராஜரீகமானவர். நான் அதை இவ்வாறு கூறுவேன். அவர், தமக்கு சித்தமானதைச் செய்கிறார். அவர் விரும்பும் போது, விரும்பும் விதமாக செய்கிறார். அவருக்கு வேறு யாருடைய அனுமதியும் தேவையில்லை. இதை அறியும் போது, தானாகவே முழங்கால் படியிடுவீர்கள். அது உங்களுக்கு ஒரு வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கையைத் தரும். தேவன் நம்முடைய வாழ்க்கையில் அவர் செய்யக்கூடாது என்று நாம் நினைக்கிற காரியங்களை செய்கிறார். உங்களில் பலர் ஏதோ ஒன்றைக் குறித்து தேவனிடத்தில் குறைச்சொல்லிக் கொண்டிருக்கலாம். தேவனுக்கு எதிராக முறுமுறுப்பதில் மிகவும் ஜாக்கிரதையாக இருங்கள்.

முழங்காற்படியிடுதல், என்பது நம்மை கர்த்தருக்கு முன் முழுவதும் ஒப்புக்கொடுப்பதாகும். இது மிகவும் முக்கியமானது.

முழங்கால் படியிட்டு ஜெபிப்பது ஒரு கலை, வரப்போகும் நாட்களில் எல்லாருமே முழங்கால்கள் படியிட்டு ஜெபிப்பார்கள். எனவே நீங்கள் கூட்டத்தை முந்திக்கொண்டு இப்போதே செய்யலாம்.

முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் என்னை முன்னிட்டு ஆணையிடும்.....

ஏசாயா 45:23

ஒரு குறிப்பிட்ட நாளில், உலகத்திலுள்ள எல்லா மனுஷருடைய முழங்கால் யாவும், எனக்கு முன்பாக, முடங்கும் என்று கர்த்தர் சொல்கிறார். "முழங்கால் யாவும் முடங்கும்" பிலிப்பியரில், பவுல் உலகம்

முழுவதும் யாருக்கு முன்பாக முடங்கும் என்பதை குறிப்பிடுகிறார்.

> *ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும் படிக்கும்.*
>
> *பிலிப்பியர் 2:9,10*

சாஷ்டாங்கமாக விழுதல்

இப்பொழுது, வேதாகமத்திலுள்ள, அதிகம் பயன்படுத்தப்பட்ட ஆராதனை முறையை பார்க்கப் போகிறோம். கர்த்தருக்கு முன்பாக முகம் குப்புற சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குதல். இதற்கு ஒரு விசேஷ அர்த்தம் உண்டு. அது முற்றிலும் கர்த்தரை சார்ந்திருப்பது என்று அதற்கு அர்த்தம். ஆண்டவரே, நீரில்லாமல் நான் ஒன்றுமில்லை. என்னால் எதுவும் செய்ய முடியாது? ஜான் பன்யன் சொன்னார்:

> *கீழே விழுந்து கிடப்பவன் வீழ்ச்சிக்கு பயப்பட*
> *வேண்டாம்.*
> *கீழேயிருக்கிறவனுக்கு பெருமையில்லை.*
> *தாழ்மையானவனை எப்போதும் கர்த்தர் வழி*
> *நடத்துவார்.*

நீங்கள் முகம் குப்புற தரையில் விழும் போது, உங்களால் முடிந்த மட்டும் உங்களைத் தாழ்த்துகிறீர்கள், அதற்கு தாழ்வாக போக முடியாது. அங்கிருந்து செல்ல ஒரே ஒரு வழிதான் இருக்கிறது, அது மேலே செல்வது தான்.

ஆதியாகமம் 17-ல் தேவன் ஆபிரகாமுக்கு இரண்டு முறைத் தோன்றினார். இது ஒரு முக்கியமான அதிகாரம். ஏனென்றால், தேவன் ஆபிரகாமோடு, ஒரு நித்திய உடன்படிக்கை செய்தார். அவனுடைய சந்ததியாருக்கு, மத்திய தரைக் கடலுக்குக் கிழக்காக, ஒரு நித்திய

ஆஸ்தியாக, ஒரு தேசத்தைக் கொடுப்பேன் என்று வாக்களித்தார். எனவே கர்த்தர் முதல்முறையாக ஆபிரகாமுக்கு (அல்லது அப்போது அவர் அழைக்கப்பட்ட ஆபிரகாமுக்கு) தோன்றியபோது, அவர் கூறினார்:

ஆபிரகாம் தொண்ணூற்றொன்பது வயதானபோது, கர்த்தர் ஆபிராமுக்கு தரிசனமாகி; நான் சர்வ வல்லமையுள்ள தேவன். நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு. நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன் என்றார். அப்பொழுது ஆபிராம் முகங்குப்புற விழுந்து வணங்கினான்.

ஆதியாகமம் 17:1-3

அதே அதிகாரத்தில் பின்னர், நாம் வாசிக்கிறோம்,

பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி: உன் மனைவி சாராயை இனிசாராய் என்று அழையாதிருப்பாயாக; சாராள் என்பது, அவளுக்குப் பேராயிருக்கும். நான் அவளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தருவேன்; அவள் ஜாதிகளுக்குத் தாயாகவும், அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகவும், அவளை ஆசீர்வதிப்பேன் என்றார். அப்பொழுது ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து நகைத்து: நூறுவயதானவனுக்குப் பிள்ளை பிறக்குமோ? தொண்ணூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ? என்று தன் இருதயத்திலே சொல்லிக் கொண்டு.

ஆதியாகமம் 17:15-17

நம்ப முடியாதது! தேவன், குழந்தை பெறும் வயதைக் கடந்த சாராய் அல்லது சாராளைப் பார்த்துச் சொல்லக்கூடிய வார்த்தையா இது? ஆனால், சரியான நேரத்தில் அது சம்பவித்தது. ஆதியாகமம் 17இல்

அவன் கர்த்தருக்கு முன் இரண்டுமுறை முகங்குப்புற விழுந்தான்.

லேவியராகமத்தில், தேவனுக்கு முன்பாக சாஷ்டாங்கமாக விழுந்த மக்களின் இன்னொரு உதாரணம் இருக்கிறது.

அன்றியும், கர்த்தருடைய சந்நிதியிலிருந்து, அக்கினி புறப்பட்டு, பலி பீடத்தின் மேல், இருந்த சர்வாங்க தகன பலியையும், கொழுப்பையும் எரித்து விட்டது. ஜனங்களெல்லாரும் அதைக் கண்ட போது, ஆரவாரித்து முகங்குபுற விழுந்தார்கள்.

லேவியராகமம் 9:24

உண்மையில், அவர்கள் முயற்சி செய்தால்கூட நிற்க முடிந்திருக்காது. ஜனங்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியானவருடைய பிரசன்னத்தில் இருந்தார்கள். பின்னர், எண்ணாகமம் புத்தகத்திலிருந்து நாம் வாசிக்கலாம்.

அப்பொழுது, மோசேயும் ஆரோனும் சபையாரைவிட்டு, ஆசரிப்புக் கூடார வாசலில் போய், முகங்குப்புற விழுந்தார்கள்; கர்த்தருடைய மகிமை அவர்களுக்குக் காணப்பட்டது.

எண்ணாகமம் 20:6

அதுதான் மகத்துவத்திற்கான வழி - தேவனுக்கு முன்பாக முகங்குப்புற நில்லுங்கள்.

நாம் தொடர்ந்து, வேதாகமம் முழுவதிலுமிருந்து, உதாரணங்களைக் காணலாம். தேவனுடைய சேனையின் தலைவன் தோன்றிய போது, யோசுவா முகங்குப்புற விழுந்தான். (யோசுவா 5:14). எலியா, கர்மேல் பர்வதத்தின்மேல் அக்கினியை கட்டளையிட்ட போது, ஜனங்களெல்லாரும் இதைக் கண்ட போது, முகங்குப்புற விழுந்து "கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம்" என்றார்கள் (1 இராஜாக்கள் 18:39). ஒரு மனிதன் கூட நிற்கவில்லை.

அதுதான் தேவனுடைய பிரசன்னத்திற்கான பதில் எசேக்கியேலில், நாம் வாசிக்கிறோம்.

> *மழை பெய்யும் நாளில், மேகத்தில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே சுற்றிலுமுள்ள அந்தப் பிரகாசம் காணப்பட்டது; இதுவே, கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனமாயிருந்தது; அதை நான் கண்ட போது, முகங்குப்புற விழுந்தேன்.*
>
> *எசேக்கியேல் 1:28*

எந்த மனுஷனாவது, மனுஷியாவது, கர்த்தருக்கு முன் முகங்குப்புற விழாதவர் எப்போதாவது, கர்த்தரோடு நெருங்கிச் சேர்ந்திருக்கிறார்களா என்று கேள்வி கேட்கிறேன். நீங்கள் வேதத்தைத்தேடி பார்க்க வேண்டும். நான் ஆராதனையின் இந்த நிலையை பயிற்சி செய்கிறேன். இது ஒரு சடங்காச்சாரம் அல்ல, இது தான் மிகவும் பாதுகாப்பான நிலை என்று கண்டுபிடித்துள்ளேன். அதுதான் மகத்துவத்திற்கான வழி - தேவனுக்கு முன்பாக முகங்குப்புற நில்லுங்கள்.

கர்த்தருக்கு முன் நடனமாடுதல்

கர்த்தரை, முழு சரீரத்தோடு ஆராதிப்பது முக்கியமானது.

வேதாகமத்தில், இன்னும் ஓர் ஆராதனை முறை இருக்கிறது. 2 சாமுவேலில், தாவீது பெலிஸ்தர்களால் பிடித்துக்கொண்டு போகப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியை திரும்பக் கொண்டு வந்தான். வழியில் பல பிரச்சனைகள் ஏற்பட்டன. தேவன், முதலில் சென்றவர்களில் ஒருவனைக் கொன்றார், ஏனெனில், லேவியர்கள் தவிர வேறுயாரும் உடன்படிக்கை பெட்டியைத் தொடக்கூடாது என்ற பாடத்தைப் படித்தார்கள். கடைசியாக, இசை முழக்கத்தோடு உடன்படிக்கைப் பெட்டி எருசலேமுக்குக் கொண்டுவரப்பட்டது, வேதம் பதிவு செய்கிறது.

தாவீது, சணல் நூல் ஏபோத்தைத் தரித்துக் கொண்டு, தன் முழுப் பலத்தோடும், கர்த்தருக்கு முன்பாக, நடனம் பண்ணினான்.

2 சாமுவேல் 6:14

பொதுவாக, ஏபோத்து என்னும் சணல் நூல் வஸ்திரம், ஆசாரியர்களால் அணியப்படக் கூடியது. "தாவீது, தன் முழுப் பெலத்தோடு கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணினான்". தாவீது, ஒரு பராக்கிரமசாலி. எனவே, அவன் நடனமாடிய போது, அவனது ஒவ்வொரு தசையும் ஆடியிருக்க வேண்டும். அவர் மேலும், கீழும் துள்ளிக் குதித்து தனது முழு பலத்தையும் கொடுத்திருப்பதை நான் கற்பனை செய்து பார்க்கிறேன். அது தான் ஆராதனை. உங்கள் முழு உடலும் விடுதலை பெறும் வரை, நீங்கள் உண்மையில் விடுதலை பெறமாட்டீர்கள்.

ஆனால் இந்த சம்பவத்துக்கு மற்றொரு பக்கம் இருக்கிறது:

தாவீது தன் வீட்டாரை ஆசீர்வதிக்கிறதற்குத் திரும்பும் போது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் தாவீதுக்கு எதிர் கொண்டுவந்து அற்பமனுஷரில் ஒருவன் தன் வஸ்திரங்களைக் கழற்றிப்போடுகிறதுபோல, இன்று தம்முடைய ஊழியக்காரருடைய பெண்களின் கண்களுக்கு முன்பாகத் தம்முடைய வஸ்திரங்களை உரிந்துபோட்டிருந்த இஸ்ரவேலின் ராஜா இன்று எத்தனை மகிமைப்பட்டிருந்தார் என்றாள். அதற்குத் தாவீது, மீகாளைப் பார்த்து, உன் தகப்பனைப்பார்க்கிலும் அவருடைய எல்லா வீட்டாரைப் பார்க்கிலும், என்னை இஸ்ரவேலாகிய கர்த்தருடைய ஜனத்தின்மேல், தலைவனாகக் கட்டளையிடும்படிக்குத் தெரிந்து கொண்ட கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக ஆடிப்பாடினேன். இதைப் பார்க்கிலும் இன்னும் நான் நீசனும், என் பார்வைக்கு அற்பனுமாவேன். அப்படியே, நீ சொன்ன

பெண்களுக்குங்கூட மகிமையாய் விளங்குவேன் என்றான்.
2 சாமுவேல் 6:20-22

இந்த தொகுப்பின் கடைசி வசனம் இப்படியாக சொல்கிறது,

அதினால், சவுலின் குமாரத்தியாகிய மீகாளுக்கு மரணமடையும் நாள்மட்டும் பிள்ளை இல்லாதிருந்தது.
2 சாமுவேல் 6:23

இதற்குக் காரணம், மீகாள், தாவீது, கர்த்தருக்கு முன் நடனமாடியதை இழிவாகப் பேசியது தான். கர்த்தரை அனுபவித்து மகிழ்பவர்களை விமர்சிப்பது வருத்தகரமானது, ஆனால் மிகவும் ஆபத்தானது. அவர்கள் திறமையுள்ளவர்களாயிருக்க மாட்டார்கள். அவர்கள் நன்கு கல்வி பயின்றவர்களாகவும் இருக்க மாட்டார்கள். ஆனால், கர்த்தர் அதை விரும்புகிறார். அதனால், நாம் நியாயந்தீர்க்காமலிருப்போமாக!

கர்த்தரை, முழு சரீரத்தோடு ஆராதிப்பது முக்கியமானது. நாம் ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்க வேண்டுமென்று இயேசு சொன்னார். பவுல் சொல்கிறார், *...உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது, குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. (1 தெசலோனிக்கேயர் 5:23)* நாம், முன்பு படித்தது போல, முழு ஆளுமை என்பது ஆவி, ஆத்துமா, சரீரம் எல்லாம் சேர்ந்தது தான். உங்கள் முழு ஆளுமையும், தேவனோடு இசைந்திருக்கவும், தேவன் விரும்பியபடி அவருக்கு பதிலளிக்கவும் வேண்டும்.

உலகப் பொருட்களால் ஆராதிப்பது

இந்த இயல்பான தளத்தில் தேவனை ஆராதிக்க கையாளும் இன்னொரு முறை, பொருட்களை காணிக்கையாகக் கொடுப்பதாகும். தேவன், நம்முடைய பணத்தை பரிசுத்தமாக நாம் பார்க்க

வேண்டுமென்று விரும்புகிறார், அதை ஆராதனையில் செலுத்த வேண்டுமென்று விரும்புகிறார். அப்படி செய்யாவிட்டால், நம்முடைய ஆராதனை முழுமையடையாது.

யாத்திராகமத்தில், இஸ்ரவேல் ஆண்கள் எருசலேமுக்கு ஒரு வருடத்தில் மூன்று முறை சென்று, எப்படி ஆராதனை செலுத்த வேண்டும் என்ற முறைமையை தேவன் கொடுக்கிறார்.

> *வருஷத்தில் மூன்றுதரம் எனக்குப் பண்டிகை ஆசரிப்பாயாக. புளிப்பில்லா அப்பப் பண்டிகையைக் கொண்டாடி, நான் உனக்குக் கட்டளையிட்டபடியே. ஆபிப் மாதத்தின் குறித்த காலத்தில் ஏழு நாள் —புளிப்பில்லா அப்பம் புசிப்பாயாக; அந்த மாதத்தில் எகிப்திலிருந்து புறப்பட்டாயே. என் சந்நிதியில் வெறுங்கையாய் வரவேண்டாம்.*
>
> *யாத்திராகமம் 23:14-15*

இது ஆலயத்தில், ஆராதனை மற்றும் பண்டிகை சம்பந்தமான கட்டளைகளில் ஒரு பகுதியாகும். தேவ ஜனங்கள், நியமிக்கப்பட்ட காலத்தில் நியமிக்கப்பட்ட முறையில் ஆலயத்துக்கு காணிக்கைகளோடு செல்ல வேண்டும். வெறுங்கையாகப் போகக் கூடாது. ஆராதனையின் மற்றும் பண்டிகை கொண்டாட்டத்தின் ஒரு பாகமாக, காணிக்கை கொண்டு செல்லவேண்டும்.

சங்கீதம் **96**இல், சங்கீதகாரன் சொல்கிறார்,

> *கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைக் கொண்டுவந்து, அவருடைய பிரகாரங்களில், பிரவேசியுங்கள். பரிசுத்த அலங்காரத்துடனே, கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள், பூலோகத்தாரே, நீங்கள் யாவரும், அவருக்கு முன்பாக நடுங்குங்கள்.*
>
> *சங்கீதம் 96:8-9*

அதாவது, "அவரது சந்நிதிக்கு வெறுங்கையோடு வராதீர்கள்". இந்த பகுதியில் தேவனுக்கு செலுத்தும் காணிக்கையில் (அது நிதி சம்பந்தமாக அல்லது எதுவாக இருந்தாலும் சரி) மூன்று முக்கிய உண்மைகளைப் பார்க்கிறோம். முதலாவது, அது தேவனை மகிமைப்படுத்துகிறது. "கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்துங்கள்" என்று சங்கீதக்காரன் சொல்கிறார். நாம் கர்த்தருக்கு மகிமையை எவ்வாறு செலுத்தலாம்? காணிக்கை கொண்டு வருவதால்.

பிறகு, காணிக்கைகளைச் செலுத்தி அவருடைய பிரகாரங்களில் பிரவேசியுங்கள் என்று கூறுகிறார். காணிக்கையை கொண்டுவருவது தேவனுடைய பிரகாரங்களுக்குள் நுழைய நமக்கு வாய்ப்பளிக்கிறது. நாம் காணிக்கையுடன் வரவில்லை என்றால், தேவனை அணுக நமக்கு எந்த உரிமையும் இல்லை. யாத்திராகமத்தின் பகுதியை நினைவில் கொள்ளுங்கள். "என் சந்நிதியில் வெறுங்கையோடு வரவேண்டாம்". (யாத்திராகமம் 23:15) நீங்கள் தேவனுக்கு முன்பாக வரவிரும்பினால், அவருடைய பிரகாரங்களுக்குள் வர விரும்பினால், நீங்கள் ஒரு காணிக்கையைக் கொண்டு வரவேண்டும்.

நாம் கர்த்தருக்கு, நம் வருமானத்தின் நியமித்த பாகத்தைக் கொடுக்கும் போது, நாம் உண்மையில் நம்மையே கர்த்தருக்குக் கொடுக்கிறோம்.

மூன்றாவதாக, பரிசுத்த அலங்காரத்துடனே, கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள். (சங்கீதம் 96:9). நாம் அவரை அதே சூழலில் ஆராதிக்க வேண்டும்.

எனவே காணிக்கை கொண்டு வருவது தேவன் நியமித்த ஆராதனையின் பகுதியாகும். நாம் அவருக்கு நம்முடைய காணிக்கையைக் கொண்டு வரும்வரை நமது ஆராதனை

முழுமையடையாது. நாம் நம்முடைய பணத்தைக் கர்த்தருக்குக் கொடுக்கும் போது, நம்முடைய வாழ்க்கையின் ஒரு முக்கிய பாகத்தைக் கொடுக்கிறோம். நம்மில் பெரும்பாலோர் நம்முடைய வாழ்க்கையின் பெரும்பகுதியை வருமானத்தை கொடுக்கும் வேலையில் செலவிடுவதாக சொல்கிறோம். நாம் கர்த்தருக்கு நம் வருமானத்தின் நியமித்தப் பாகத்தைக் கொடுக்கும் போது, நாம் உண்மையில் நம்மையேக் கொடுக்கிறோம் - நம்முடைய நேரம், பெலன், தாலந்துகள், இவற்றைக் கொடுக்கிறோம். இதை விட, பரிசுத்தமான காணிக்கை வேறொன்றுமில்லை. கர்த்தர் சொல்கிறார், "நீ என்னுடைய பிரகாரத்தில் வர விரும்பினால், நீ என் சந்நிதியில் வர விரும்பினால், பரிசுத்தமான அலங்காரத்துடன் தொழுதுகொள்ள விரும்பினால், உன் காணிக்கையைக் கொண்டு வா". எனவே, காணிக்கையை கொண்டுவருவது, ஆராதனை, பரிசுத்தம் ஆகிய அனைத்தும் உங்களுக்கான தேவனுடைய திட்டத்தில் ஒன்றாக தொடர்புடையதாக இருக்கிறது.

கர்த்தர் ஒரு கணக்கு வைத்திருக்கிறார்

அநேக கிறிஸ்தவர்களுக்கு இது புரிவதில்லை. ஜனங்கள் என்ன கொடுக்கிறார்கள் என்பதற்கு கர்த்தர் ஒரு கணக்கு வைத்திருக்கிறார். எண்ணாகமம் 7-வது அதிகாரம் ஒரு நீண்ட அதிகாரம். அதற்கு, 89 வசனங்கள் உண்டு. அவைகள், 12 கோத்திரத் தலைவர்கள் அல்லது பிரபுக்கள் கர்த்தருக்குக் கொடுப்பதை விவரிக்கிறது. ஒவ்வொருவரும், ஒரே மாதிரியான பொருட்களைக் கொடுத்தார்கள். ஆனால், அவைகள் ஒவ்வொன்றாக எழுதப்பட்டுள்ளது ஆச்சரியமாக இருக்கிறது. இரண்டாவது, தலைவன், முதல் தலைவனைப் போல கொடுத்தான்

ஜனங்கள் என்ன கொடுக்கிறார்கள் என்பதற்கு கர்த்தர் ஒரு கணக்கு வைத்திருக்கிறார்.

என்று எழுதவில்லை. "அனைத்து பன்னிரண்டு பிரபுக்களும் ஒவ்வொருவராக இதைக் கொடுத்தார்கள் என்றும் சொல்லவில்லை", இல்லை, வேதவசனம் ஒவ்வொருவரின் ஒவ்வொரு பொருளையும் சொல்கிறது. வேதாகமம் மிகவும் பொருளாதார புத்தகமாகும் - அது இடத்தை வீணாக்காது. இதற்கு அர்த்தம் என்ன வென்றால், கர்த்தர் நாம் செலுத்தும் காணிக்கைகளை கவனமாக பதிவு செய்கிறார் என்பதை விளக்குகிறார். முதல் தலைவன் அல்லது பிரபுவின் காணிக்கை பின்வருமாறு:-

> *பலிபீடம் அபிஷேகம்பண்ணப்பட்ட நாளிலே, பிரபுக்கள் அதின் பிரதிஷ்டைக்காகக் காணிக்கைகளைச் செலுத்தி, பலிபீடத்துக்கு முன்பாகத் தங்கள் காணிக்கைகளைக் கொண்டு வந்தார்கள். அப்பொழுது, கர்த்தர் மோசேயை நோக்கி: பலிபீடத்தின் பிரதிஷ்டைக்காக ஒவ்வொரு பிரபுவும் தன்தன் நாளில் தன்தன் காணிக்கையைச் செலுத்தக்கடவன் என்றார். அப்படியே முதலாம் நாளில் தன் காணிக்கையைச் செலுத்தினவன் யூதா கோத்திரத்தானாகிய அம்மினதாபின் குமாரன் நகசோன். அவன் காணிக்கையாவது: போஜன பலியாகப் படைக்கும் பொருட்டு, எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளிதாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால், செய்த ஒரு தூபக்கரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும், பாவ நிவாரணபலியாக, ஒரு வெள்ளாட்டுக்கடாவும், சமாதானபலியாக, இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும் ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து*

ஆட்டுக்குட்டிகளுமே; இது அம்மினதாபின் குமாரனாகிய நகசோனின் காணிக்கை.

எண்ணாகமம் 7:10-17

கர்த்தர், ஒவ்வொரு பிரபுவும் கொடுத்த காணிக்கையின் முழுமையான பதிவை, குறிப்பிட்ட விவரங்களுக்கு எழுதி வைத்திருக்கிறார். மேலும் அது வேதாகமத்தில் பாதுகாக்கப்படும்படி செய்தார்.

ஆனால், இந்த கணக்கு, பழைய ஏற்பாட்டில் மட்டுமல்ல, மாற்கு சுவிசேஷத்திலும், இயேசு காணிக்கையை பதிவு செய்கிறார்.

இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார்; ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப் போட்டார்கள். ஏழையான ஒரு விதவையும் வந்து ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள். அப்பொழுது, அவர் தம்முடைய சீஷரை அழைத்து காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்; அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துப் போட்டார்கள். இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்.

மாற்கு 12:41-44

இங்கே, இரண்டு காரியங்கள் இருக்கின்றன. முதலாவது, இயேசு, ஒவ்வொருவரும் என்ன போட்டார்கள், அதன் மதிப்பு என்ன என்றும் கவனித்தார். இரண்டாவதாக, நாம் வைத்திருப்பதில் இருந்து, எவ்வளவு கொடுக்கிறோம் என்று கணக்கெடுக்கிறார். இயேசு சொன்னார், குறைவாகக் கொடுத்தவள், மற்றவர்களை விட அதிகமாகக்

கொடுத்தாள். ஏனெனில், அவளிடம் மீதியாக ஒன்றுமில்லை. இதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் என்னக் கொடுத்தீர்கள் என்று கணக்கெடுக்கும் போது, நீங்கள் எவ்வளவு வைத்திருக்கிறீர்கள் என்பதை கர்த்தர் பார்க்கிறார்.

ஒரு கடைசிக் குறிப்பு: ஒரு நாள் நாம் அனைவரும், கர்த்தருக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். "ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்". (ரோமர் 14:12). இதுதான் நம் ஒவ்வொருவருடைய எதிர்காலமாக இருக்கிறது. கிரேக்க மூலமொழியில் "கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" என்ற சொற்றொடர் முதன்மையாக நிதிக் கணக்கிற்கு பயன்படுத்தப்படுகிறது - பிரத்தியேகமாக அல்ல, ஆனால் முதன்மையாக. எனவே, வேதவசனத்தின்படி, நாம் ஒவ்வொருவருக்கும் தேவனுக்கு ஒரு நிதிக் கணக்கை ஒப்புவிக்கப்போகிறோம்.

கர்த்தருக்கு நம்முடைய பணம் தேவை இல்லை. ஆனால், பண விஷயத்தில் நம் மனநிலை தேவன் மீதான நமது உண்மையான மனநிலையை வெளிப்படுத்துகிறது என்பதை அவர் அறிவார். இயேசு சொன்னது போல,

> *இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றி கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.*
> *மத்தேயு 6:24*

நமக்கு ஒரு தெரிந்தெடுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் தேவனுக்கு ஊழியஞ் செய்தால், நாம் மமம்மனுக்கு (கெட்ட ஆவிக்கு) ஊழியம் செய்ய மாட்டோம். அவைகள், மனிதனின் பண ஆசையை வைத்து விளையாடுகிறான். கர்த்தருக்கு நேரான நம்முடைய மனநிலை சரியாக இருக்குமானால், பணத்துக்கு நேரான நம் மனநிலையும்

சரியாக இருக்கும். நாம் தேவனை பற்றிக் கொள்வோமானால், நாம் அவரை ஆராதித்தால், நாம், மம்மனை நித்திப்போம். சாத்தானின் வல்லமை நம்மை மேற்கொள்ளாது. கர்த்தரை நேசி அல்லது மம்மனை நேசி. மூன்றாவது ஒரு வழி இல்லை, நடுநிலையும் இல்லை.

ஆராதனை, தேவனுக்கு மட்டுமே, நீங்கள் மனுஷர்களை புகழலாம். அவர்களுக்கு நன்றி சொல்லலாம். ஆனால் கர்த்தரை தவிர மனுஷனை ஆராதிக்கக் கூடாது. "கர்த்தாவே, நீரே எங்கள் தேவன், உம்மையே நாங்கள் ஆராதிக்கிறோம். நாங்கள் சும்மா எழுந்து நின்று, உம்மை ஆராதிக்கிறோம் என்று சொல்லவில்லை. நாங்கள் முழங்கால் படியிட்டு, எங்கள் கைகளை விரித்து, முகங்குப்புற தரையில் விழுந்து, உம்மை ஆராதிக்கிறோம். எங்களையும், எங்களுக்குள்ள எல்லாவற்றாலும் உம்மை ஆராதிக்கிறோம்" என்று சொல்வதே தனித்துவமான செயலாகும். நாம் தேவனை ஆராதிப்பது நம் முழு ஈடுபாட்டிற்கு தகுதியானது.

ஆராதனை தவிர்க்க முடியாதது

இறுதியாக, மனுஷன் ஆராதிப்பானா என்பதல்ல, யாரை ஆராதிக்கிறான் என்பதை தான் தெரிந்தெடுக்க வேண்டும்.

இந்த விஷயம், தேவன் சீனாய் மலையில் இருந்து இஸ்ரவேல் மக்களிடம் பேசிய பத்துக்கட்டளை என்னும் வார்த்தைகளில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. அந்த தருணத்தில் தேவன் இஸ்ரவேலரிடம் சொன்னது இதுதான்:

> *தேவன் பேசிச் சொல்லிய சகல வார்த்தைகளுமாவன: உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும் கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும், உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும், நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்.*
>
> *யாத்திராகமம் 20:1-5*

இந்தப் பகுதியிலுள்ள சில முக்கிய கருத்துக்களை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன், முதலாவதாக, வேறு எவருடனோ, பொருளுடனோ, தேவன் ஆராதனையை பகிர்ந்து கொள்ள மாட்டார். நாம் தேவனை ஆராதிப்பதாயிருந்தால், அவரை மட்டும் ஆராதிக்க வேண்டும். அவர் ஒருவருக்கே, உரிமை உண்டு. உலகத்தில் உண்மையான தேவனைத் தவிர, நாம், வேறெந்த நபருக்கோ அல்லது பொருளுக்கோ, நாம் ஆராதனை செலுத்தக் கூடாது.

இரண்டாவதாக, பணிந்து குனிந்து ஆராதிப்பது. ஒரு ஆராதனை முறையாகும். தவிர்க்கப்பட்ட விக்கிரகங்களைப் பற்றி தேவன் சொல்லும் போது, நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம். (யாத்.20:5) என்று கூறுகிறார். பணிந்து வணங்குவதும், ஆராதிப்பதும் ஒன்று தான்.

மூன்றாவதாகவுள்ள குறிப்பு, முக்கியமானது. தவறான ஆராதனையின் தீமையான விளைவுகள் நம்முடைய சந்ததியாருக்குப் போய்ச் சேரும். பிதாக்களின் பாவங்களை, பிள்ளைகளிடம் மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் விசாரித்து தண்டிப்பேன் என்று தேவன் கூறுகிறார். இவ்வகையான, தலைமுறை நியாயத்தீர்ப்பு, மனுஷன் செய்கிற வேறெந்த பாவத்திலிருந்தும் வருவதில்லை. உண்மை தேவனை விட்டு, வேறே தேவனை ஆராதிப்பது என்பது பெரிய பாவம் - இதன் விளைவுகள், மூன்றாம், நான்காம் தலைமுறை வரையிலும் எடுத்துச் செல்லப்படும்.

போஜனப்பலி

லேவியராகமம், பழைய ஏற்பாட்டு, போஜன பலியை விவரிக்கிறது. ஆனால் வேறு பழைய ஏற்பாட்டு அனுபவங்களைப் போல, இதுவும் ஆவிக்குரிய, குறிப்பாக ஆராதனை முறைகளை விவரிக்கிறது.

ஒருவன் போஜன பலியாகிய, காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்த வேண்டுமானால், அவன் காணிக்கை மெல்லிய மாவாயிருப்பதாக; அவன் அதின்மேல், எண்ணெய் வார்த்து, அதின் மேல் தூபவர்க்கம் போட்டு,

லேவியராகமம் 2:1

போஜனபலியென்பது, போஜனம், அல்லது, மாவாக இருக்க வேண்டும். அது மெல்லிய மாவாக அரைக்கப்பட வேண்டும். நான் முன்பு சொன்னது போல், இது நம்முடைய காணிக்கை - நமது ஜீவனை பலியாக கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கை மெல்லியதாக அரைக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார். அவர் முழுவதையும் விரும்புகிறார். அதனால் அவருடைய சித்தத்துக்கு, எந்த எதிர்ப்பும் இல்லாமல் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

நாம் நம்முடைய வாழ்க்கையைக் கர்த்தருக்கு அர்ப்பணிக்கும் போது, நாம் இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும். நாம் அதின் மேல் எண்ணெயை ஊற்ற வேண்டும் மற்றும் தூபவர்க்கத்தை போட வேண்டும். வேதாகமம் முழுவதும், எண்ணெய், பரிசுத்த ஆவிக்கு ஒரு உவமையாகச் சொல்லப்பட்டுள்து. பரிசுத்த ஆவி நம்மை அனுமதிக்காவிட்டால், நாம் கர்த்தருக்கு எதையும் செலுத்த முடியாது.

பரிசுத்த ஆவி, நம்மை அனுமதிக்காவிட்டால், நாம் கர்த்தருக்கு எதையும் செலுத்த முடியாது.

தூபவர்க்கம் என்பது மரத்திலிருந்து எடுக்கப்படும், ஒருவகையான நறுமணமுள்ள பசையாகும். அதனுடைய இயற்கைத் தன்மையில், அது வழக்கமாக, வெள்ளை நிறமாக இருக்கும், அது வேறு எந்த கவர்ச்சியான தோற்றமும் உடையது அல்ல. ஆனால், அது எரிக்கப்படும் போது, அது ஒரு நறுமணத்தைக் கொடுக்கிறது. இது ஆராதனையைக் குறிக்கிறது. வேதாகமத்தில்

பல இடங்களில், தூபவர்க்கம், நறுமணம், சுகந்த வாசனை என்று வருவதைக் காணலாம். இது ஆராதனையைக் குறிப்பிடுகிறது.

எனவே, நாம் நம்மையே, கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கும் போது நாம் அதை பரிசுத்த ஆவியின் மூலம் செய்ய வேண்டும். அதை ஆராதனை மூலம் செய்ய வேண்டும். ஆனால், தூபவர்க்கத்துக்கு வித்தியாசமான ஒன்று சம்பவிக்கிறது.

> *அதை ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்களிடத்தில் கொண்டுவருவானாக; அப்பொழுது ஆசாரியன் அந்த மாவிலும், எண்ணெயிலும் ஒரு கைப்பிடி நிறைய தூபவர்க்கம் எல்லாவற்றோடும் எடுத்து, அதைப் பலிபீடத்தின்மேல் ஞாபகக்குறியாகத் தகனிக்கக்கடவன்; அது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி.*
>
> *லேவியராகமம் 2:2*

காணிக்கை செலுத்த ஒரு ஆசாரியன் இருக்க வேண்டும். அவன் கொஞ்ச மாவும், எண்ணெயும் எடுத்து நெருப்பில் போடுவான். ஆனால், அவன், அதில் தூபவர்க்கமும் சேர்ப்பான் - இது மிகவும் முக்கியம். ஆராதனை, தேவனுக்கே உரியது. கர்த்தரைத் தவிர, வேறொருவருக்கும், ஆராதனை, தூபவர்க்கம் செலுத்துவது பாவம். இந்த சத்தியத்தை கிறிஸ்தவர்கள் உணர வேண்டும். சமீப காலங்களில், பிரபலமான நபர்கள், வீழ்ச்சியடைந்து, அவமானமடைந்ததைப் பார்க்கிறோம். அவர்களைப் பின்பற்றுகிறவர்கள் தூப வர்க்கத்தின் ஒரு பகுதியை, அவர்களுக்காகக் கொடுத்திருக்ககூடும்.

ஆராதனை உறுதியாக ஊழியத்துக்கு வழிநடத்துகிறது. நாம் எதை ஆராதிக்கிறோமோ இறுதியில் நாம் அதையே சேவிக்கிறோம்.

ஒரு பிரசங்கியார் என்ற முறையில் நான் தூபவர்க்கத்தை விரும்புவதில்லை. அடிக்கடி, ஜனங்கள், முகஸ்துதி பேசி என்னிடம்

வருவதுண்டு. ஆனால், ஆராதனை தேவனுக்கே உரியது. நாம் யாரை ஆராதிக்கிறோமோ, அவர்கள் நம்மை தேவன் ஆக்கிவிடுகிறார்கள். நாம் பிரசங்கியாரை ஆராதித்தால், அவர் நம் தேவன் ஆகிவிடுகிறார். அது ஒரு பயங்கரமான காரியம்.

ஆராதனை மற்றும் ஊழியம்

ஆராதனை சம்பந்தமான வேதப்பகுதிகளை பார்த்தால், ஆராதனை உறுதியாக ஊழியத்துக்கு வழிநடத்துகிறது. நாம் எதை ஆராதிக்கிறோமோ இறுதியில் நாம் அதையே சேவிக்கிறோம். இது இயேசுவுக்கும், சாத்தானுக்கும் நடந்த உரையாடலில் தெளிவாக வெளிப்படும். இயேசு, அவனுக்குக் கீழே விழுந்து அவனை ஆராதிக்க சோதிக்கப்பட்டார். மூன்று சோதனைகளில் இதுவே, இறுதியானது.

> *மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின் மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து; நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.*
>
> *மத்தேயு 4:8-10*

இங்கே வரும் வரிசை முறையையும், தொடர்பையும் கவனியுங்கள்: முதலாவது, ஆராதனை, பிறகு ஊழியம். பல கிறிஸ்தவர்கள் இந்த வரிசையை மாற்ற முயலுகிறார்கள். ஆனால், அது வேலை செய்வதில்லை. ஆராதனையில்லாத ஊழியம் கிரியை செய்யாது.

ஆனால், ஒரு செயல்முறை தொடர்பு உண்டு. நாம் ஒரு நபரை அல்லது பொருளை எவ்வளவு அதிகமாய் ஆராதிக்கிறோமோ,

அவ்வளவுக்கு அதிகமாய் அதன் விளைவுகள் நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும். முதலாவதாக, அந்த நபர் அல்லது பொருளுக்கான நம்முடைய அர்ப்பணிப்பு மேலும் முழுமையானதாக இருக்கிறது; இரண்டாவதாக, அந்த நபர் அல்லது பொருளின் அடையாளத்தை நாம் அதிகமாக எடுத்துக்கொள்வோம். ஆராதனை, தவிர்க்க முடியாதபடி, ஒப்புக்கொடுத்தலுக்குள்ளும், இசைவுக்கும் நேராக வழி நடத்துகிறது. எனவே, ஆராதனை என்பது இறுதி தீர்மானமாகும். நம்மில் யாரும் அதைத் தவிர்க்க முடியாது. மனிதன், ஆரம்பத்தில், ஆராதிக்கவே சிருஷ்டிக்கப்பட்டான். அவனுடைய இந்த சுபாவத்தை அவன் மாற்றமுடியாது. அவன் மாற்றக் கூடியதெல்லாம், ஆராதனையின் திசையைதான் - உண்மையான தேவனை விட்டு, பொய்த் தேவனிடம் செல்வது.

ஜனங்கள் ஆராதிக்கும் சில பொய்த் தேவர்களின் உதாரணத்தைக் கொடுக்க விரும்புகிறேன். முதலாவது, உண்மையான விக்கிரகங்கள். உலகம் முழுவதிலும், எல்லா கலாச்சாரங்களிலும், மரத்தினாலும் கற்களாலும் செய்யப்பட்ட விக்கிரகங்களை மக்கள் ஆராதிப்பதைக் காணலாம். இதற்கு நாம் பயன்படுத்தும் வார்த்தை தான், விக்கிரகாராதனை!

இரண்டாவது, ஜனங்கள் பெரும்பாலும் தங்களுடைய, சரீர இச்சைகளையும், இன்பங்களையும் ஆராதிக்கிறார்கள். இவைகள் அவர்களுடைய தேவர்கள் ஆகின்றன. இதற்கு இச்சை ஆராதனை என்று பெயர்.

மூன்றாவதாக, பணமும், சொத்துக்களும். கோடிக்கணக்கான ஜனங்கள் பணத்தை தங்கள் தெய்வமாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். வேதம், இதை பொருளாசை என்ற விக்கிரகமாகக் கருதுகிறது.

நான்காவதாக, மனுஷ அரசியல் தலைவர்கள் - ஹிட்லர், லெனின்

போன்றவர்கள். வேதத்தை நிராகரித்து, உண்மையான தேவனை தங்கள் அரசியல் தத்துவங்களால் நிராகரிப்பவர்கள் பெரும்பாலும் தங்கள் ஆராதனையின் மாற்றாக, மனிதர்களை ஆராதிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள் என்பது சுவாரஸ்யமானது.

கடைசியாக, உலகில் பல மன்றங்களும், பொய் மதங்களும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அவற்றின் தலைவர்கள் ஆராதிக்கப் படுகிறார்கள். ஜோன்ஸ்டவுன், கயானா, வாக்கோ, டெக்ஸாஸ், இவைகள், அவர்களை ஆராதித்தவர்களின் விளைவுகள்!

ஆராதனையும், முடிவு காலங்களும்

இந்த பொய் ஆராதனைகளுக்கெல்லாம் எது பொதுவான காரணம்? அவைகளெல்லாம், சாத்தானுக்கு நேராக வழி நடத்துகின்றன. சாத்தான் ஆராதிக்கப்பட விரும்புகிறான். சாத்தான், தேவனோடு சமமாக இருக்க விரும்பினான், இதன் மூலம் அது நிறைவேறுகிறது. நான் முன்பு சொன்னது போல், ஆராதனை கர்த்தருக்கே உரியது. எனவே, சாத்தான் ஆராதிக்கப்படும் போது, அவன் தேவனுக்கு சமமாகி விடுகிறான். இது தான் அவனுடைய வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது. *அதிகாலையின் மகனாகிய விடி வெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே. (ஏசாயா 14:12).* விடிவெள்ளி, லூஸிபர் என்பது சாத்தானின் பட்டப்பெயர்கள். பின்வரும் வசனங்களில், சாத்தானுடைய உள்நோக்கத்தை தீர்க்கதரிசி வெளிப்படுத்துகிறார். அதுவே உண்மையான தேவனுக்கு எதிராகக் கலகம் செய்யக் காரணமாக இருந்தது:

> *நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக, என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக, உன்னதங்களில் ஏறுவேன்;*

உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே.

ஏசாயா 14:13-14

ஜனங்கள் பெரும்பாலும் தங்களுடைய, சரீர இச்சைகளையும், இன்பங்களையும் ஆராதிக்கிறார்கள். இவைகள் அவர்களுடைய தேவர்கள் ஆகின்றன.

ஐந்துமுறை திரும்பச் சொல்லப்படும் ஒரு வார்த்தையைக் கவனியுங்கள். நான் செய்வேன். இது தான் சாத்தானின் முரட்டாட்டம் அவனுடைய சித்தத்தை, தேவசித்தத்துக்கு எதிராக நிறுத்துவது. கடைசி வார்த்தையில், சாத்தானின் நோக்கத்தைக் காணமுடியும்: "உன்னதமானவருக்கு ஒப்பாவேன்", எனவே, தேவனுக்கு சமமாவது தான் அவனுடைய குறிக்கோள். மேலும், அதை அவன் பெறுவதற்கான ஒரே வழி ஆராதனைதான். ஏனென்றால், அப்படி செய்யும்போது ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தில் ஒரு தேவனாக அடையாளம் காணப்படுகிறான்.

வேதாகமப்படி சாத்தான், தன்னுடைய நோக்கத்தை ஒரு குறுகிய காலம், பூமியில் நிறைவேற்ற நெருங்குவான்.

பின்பு நான் கடற்கரை மணலின் மேல், நின்றேன். அப்பொழுது, சமுத்திரத்திலிருந்து, ஒரு மிருகம் எழும்பி வரக் கண்டேன். அதற்கு, ஏழுதலைகளும் பத்து கொம்புகளும் இருந்தன. அதின் கொம்புகளின் மேல், பத்து முடிகளும், அதின் தலைகளின் மேல், தூஷணமான நாமமும் இருந்தன. நான் கண்ட மிருகம் சிறுத்தையைப் போலிருந்தது. அதின் கால்கள் கரடியின் கால்களைப் போலவும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப் போலவும் இருந்தன. வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது.

வெளி. 13:1-2

இந்தப் பகுதியை முழுமையாகப் படித்தால், அந்த மிருகம், ஒரு மனித ஆட்சியாளர் என்பது தெரிய வரும். ஆனால், வலு சர்ப்பம் சாத்தான் ஆகும். இப்பொழுது விளைவைப் பாருங்கள்.

அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த, வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். அல்லாமலும், மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே, யுத்தம் பண்ணத்தக்கவன் யார்? என்று சொல்லி மிருகத்தையும் வணங்கினார்கள்.

வெளிப்படுத்தல் 13:4

இப்படித்தான், மனுஷ வரலாறு, தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் செய்தது. சாத்தான், ஜாதிகள் மேலும், அரசியல் தலைவர்கள் மேலும், அவர்களுடைய ஆராதனையைப் பெறுவதற்கான ஒரு நோக்கத்தையே முயற்சிக்கிறான். கடைசியாக, மனுஷர்கள் ஆராதிக்கக் கூடிய ஒரு அரசியல் தலைவனைக் கண்டுப்பிடிப்பார்கள். அவன் மூலமாக, சாத்தான் ஆராதனையைப் பெறுவான்.

இதனால்தான், நாம், தெள்ளத்தெளிவாக இருக்க வேண்டும். நான் யாரை ஆராதிக்கிறேன்? என்னுடைய தேவன் யார்? இயேசு, இந்த கேள்விக்கு ஒரு சரியான பதில் கொடுக்கிறார்.

அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.

மத்தேயு 4:10

நீங்கள் இப்படிச் சொல்லத் தயாரா? நான் தேவனாகிய கர்த்தரையே ஆராதிப்பேன். அவர் ஒருவருக்கே ஊழியம் செய்வேன் என்று சொல்லுவீர்களா? இது, நீங்கள் எடுக்க வேண்டிய முக்கியமான தீர்மானம் அது உங்கள் நித்தியத்தையே முடிவு செய்யும்.

சிங்காசனத்தில் ஆராதனை

சில காலத்துக்கு முன், நான் ரூத்திடம், "நாம் வெளிப்படுத்தின விசேஷத்தை, அடிக்கடி வாசிப்பதில்லை. அது புரிந்து கொள்ள கடினமானது. ஆனால், அதற்காக, அதை வாசிக்கக் கூடாது என்று அர்த்தமில்லை", என்று சொன்னேன். எனவே, அதை ஒரு முறை வாசித்தோம். ஆனால், அதிலிருந்து, ஒன்றும் கிடைக்கவில்லை. இரண்டாவது, ஒரு முறை வாசித்தோம். ஒன்றும் கிடைக்கவில்லை. நான் சொன்னேன், "பரவாயில்லை, அது தேவனுடைய வார்த்தை. நாம் வாசிப்போம்" என்றேன். மூன்றாம் முறை வாசித்தோம், ஏதோ கிடைத்தது போலத் தோன்றியது. அதன்பிறகு நாம் என்ன வாசிக்க வேண்டும் என்று ரூத் கேட்கும்போதெல்லாம், நான் என்ன சொல்வேன் என்று அவளுக்குத் தெரியும். அது தான் வெளிப்படுத்தல் 4 மற்றும் 5-ம் அதிகாரங்கள்.

வெளிப்படுத்தின விசேஷம். 4-ம் அதிகாரம், பரலோக சிங்காசனம் பற்றியது. இந்த இடத்திலிருந்து தான், உலகம் ஆளப்படுகிறது. இந்த அதிகாரத்திலுள்ள முக்கிய வார்த்தை, சிங்காசனம். பதினொரு வசனங்களில், இந்த வார்த்தை, 14முறை வருகிறது. இந்த அறைக்குள், ஒரு உன்னத கிரியை நடைபெறுகிறது. அது தான் ஆராதனை!

அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்று அவ்வாறு சிறகுள்ளவைகளும், சுற்றிலும், உள்ளேயும் கண்களால் நிறைந்தவைகளுமாயிருந்தன. அவைகள், இருந்தவரும், இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள

தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன.

மேலும், சிங்காசனத்தின்மேல், வீற்றிருந்து, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவருக்கு அந்த ஜீவன்கள், மகிமையையும் கனத்தையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்தும் போது, இருபத்து நான்கு மூப்பர்களும், சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும், உயிரோடிருக்கிறவரைத் தொழுது கொண்டு தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து.

வெளி.4:8.10

இது தான் பரலோகத்தின் ஆராதனை முறை. சிங்காசனத்தில் உட்காா்ந்திருப்பவருக்கு முன் விழுந்து வணங்குகிறாா்கள். சபைகளில் பாடப்படுகிற ஒரு பழைய கீா்த்தனை பாடல், என் நினைவுக்கு வருகிறது. "எல்லாரும் இயேசுவின் நாமத்தை உயா்த்துங்கள்! தேவதூதா்கள் சாஷ்டாங்கமாக விழுவாா்களாக; கிரீடத்தை அவருக்குச் சூட்டுங்கள். சா்வ வல்ல கா்த்தாவே". சபைக்குப் போகிறவா்கள், தங்கள் இருக்கையில் எழுந்து நேராக நின்று, வேததூதா்கள் சாஷ்டாங்கமாக விழுவாா்களாக என்று பாடுவது என் நினைவுக்கு வருகிறது.

பலா் சொல்வாா்கள், "நல்லது, தேவ தூதா்களைப் பொறுத்த வரையிலும் அது நல்லது தான். ஆனால், என்னை அந்த மாதிரி, அந்தஸ்துக் குறைவான காாியங்களை செய்யச் சொல்லி விடாதீா்கள்! ஆனால் பரலோகத்தில், இப்படித் தான் செய்யப்படுகிறது. அவா்கள் ஆராதிப்பது போலவே, ஆராதிப்பதில் நான் நிறைவு பெறுகிறேன்.

வெளிப்படுத்தின விசேஷத்தில், சிங்காசனத்தில், ஒரு புஸ்தகச் சுருளோடு உட்காா்ந்திருப்பவருடைய ஒரு காட்சியைப் பாா்க்கிறோம். அது அந்தப் புத்தகத்தைத் திறந்து வெளிப்படுத்துவதைக் குறிக்கிறது.

ஒரு பலமான தேவதூதன் சொல்கிறான், "புஸ்தகத்தைத் திறக்கவும், அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யார்? (வெளி.5:2). ஒருவரும் பாத்திரவான் இல்லை. பரலோகத்திலுள்ள ஒருவராலும் முடியாது. யோவான், அந்த புஸ்தகச் சுருளில் என்ன இருக்கிறது? என்று அழ ஆரம்பிக்கிறான். அப்போது, மூப்பர்களில் ஒருவன், "நீ அழ வேண்டாம்! இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும், தாவீதின் வேருமானவர், புஸ்தகத்தைத் திறக்கவும், அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான்". (வெளிப்படுத்தல் 5:5).

இந்தச் சிங்கத்தைப் பார்க்கும்படி, யோவான் திரும்புகிறார். ஆனால், அவர் ஒரு ஆட்டுக்குடியைத் தான் பார்க்கிறார். அது அடிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. யோவான் சொல்கிறார்,

> *அப்பொழுது, இதோ அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக் கண்டேன். அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது; அந்தக் கண்களை பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம். அந்த ஆட்டுக்குட்டியானவர் வந்து சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலது கரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினார்.*
>
> *வெளிப்படுத்தின விசேஷம் 5:6-7*

இதைத் தொடர்ந்து பரலோகம் முழுவதுமே, ஆராதனையில் ஈடுபடுகிற காட்சியைக் காண்கிறோம்.

> *அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கின போது, அந்த நான்கு ஜீவன்களும், இருபத்து நான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு, ஆட்டுக்*

தூபவர்க்கம் எதைக் காட்டுகிறது ?- ஆராதனை !

குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து: தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும், பாத்திரராயிருக்கிறீர், ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து, எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக் கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே,அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்.

வெளிப்படுத்தின விசேஷம் 5:8-10

மூப்பர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைக் கவனியுங்கள். அவர்கள் கீழே விழுகிறார்கள். நம்முடைய ஜெபங்கள் எப்படி, தேவ பிரசன்னத்தில் வருகின்றன என்பதை கவனியுங்கள் - தூபவர்க்கம் நிரப்பப்பட்ட பொற்கிண்ணங்களில், தூபவர்க்கம் எதைக் காட்டுகிறது ? ஆராதனை ! இது தான் முதல் வட்ட ஆராதனை ! நான்கு ஜீவன்களும், இருபத்தி நான்கு மூப்பர்களும். அவர்கள் கீழே விழுந்து, இயேசு மூலமாக இரட்சிப்பைக் கொடுத்த சர்வ வல்லமையுள்ள தேவனை துதிக்கிறார்கள். பிறகு யோவான் தொடருகிறான்:-

பின்னும் நான் பார்த்தபோது, சிங்காசனத்தையும், ஜீவன்களையும், மூப்பர்களையும், சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன்; அவர்களுடைய இலக்கம் பதினாயிரம், பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாகவுமிருந்தது.

வெளிப்படுத்தின விசேஷம் 5:11

சீன மொழி, இப்போதும், மில்லியன் என்பதை - பத்தாயிரம் தடவை, பத்தாயிரம், ஒரு நூறு மில்லியன் என்று குறிப்பிடுகிறது. அந்த ஒரு

தேவ தூதனை நினைத்துப் பார்க்கும் போது, ஒரே இரவில் 1,85,000 அசீரிய வீரர்களை கொன்றான். (2 ராஜாக்கள் 19:35ஐ பார்க்கவும்). நாம் எதற்காக கவலைப்பட வேண்டும் என்று நீங்கள் யோசிக்கிறீர்களா ?

அவர்களும் மகா சத்தமிட்டு; அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள். அப்பொழுது, வானத்திலும், பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள்யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும் அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும்: சிங்காசனத்தின் மேல், வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக் குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும், கனமும், மகிமையும், வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன்.

வெளிப்படுத்தின விசேஷம் 5:12-13

உலகத்தின் எல்லையெங்கிலுமுள்ள ஒவ்வொரு சிருஷ்டியும், ஒரு விஷயத்தில் ஒன்றுப் பட்டிருந்தார்கள் - அவரை ஆராதிப்பதில்! பின்னர்:

அதற்கு நான்கு ஜீவன்களும் ஆமென் என்று சொல்லின இருபத்து நான்கு மூப்பர்களும், வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுது கொண்டார்கள்.

வெளிப்படுத்தின விசேஷம் 5:14

சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுது கொண்டார்கள். எவ்வளவு அருமையான காட்சி! உலகத்தின் மையப் பகுதியில் சிங்காசனம், அது, உலகத்தின் கடைசி எல்லைகள் வரைக்கும் விரிவடைகிறது. சகலமும் ஒவ்வொருவரும் ஒரே ஒரு

காரியத்தை மட்டும் செய்திருக்கிறார்கள், ஆராதனை! மையத்தில் இருப்பவர் யார்? ஆட்டுக் குட்டியானவர். அது எவ்வளவு மகிமையான நாளாக இருக்கும்! ஆமென்!

ஆசிரியரைப் பற்றி...

டெரிக் பிரின்ஸ் (1915-2003) இந்தியாவில் வசித்து வந்த ஆங்கிலேய பெற்றோருக்குப் பிறந்தவர். இங்கிலாந்து நாட்டின் ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கிரேக்க மற்றும் லத்தீன் மொழிகளில் புலவராக தேர்ச்சி பெற்றார். பழங்காலத்து மற்றம் நவீன தத்துவம் என்ற துறையில், கிங்ஸ் கல்லூரியில் அவர் கௌரவ பணியாற்றினார். மட்டுமல்ல, அராமிய மற்றும் எபிரெய மொழிகள் உட்பட, பல மொழிகளைக் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் எருசலேமிலுள்ள எபிரெய பல்கலைக்கழகத்திலும் அவர் கற்றார்.

இரண்டாம் உலக யுத்தத்தில், பிரிட்டிஷ் ராணுவத்தில் பணியாற்றியபோது, அவர் வேதத்தை வாசிக்க ஆரம்பித்து, இயேசுவுடன் வாழ்வை மாற்றும் ஓர் நேர்முக சந்திப்பைப் பெற்றார். இச்சந்திப்பிலிருந்து அவர் இரண்டு முடிவுகளுக்கு வந்தார்: முதலாவது, இயேசு கிறிஸ்து உயிரோடிருக்கிறார்; இரண்டாவது, வேதாகமம் ஓர் உண்மையான, அர்த்தமுள்ள, நவீன காலத்துக்கும் ஏற்ற புத்தகம். இவ்விரண்டு முடிவுகளும் அவருடைய வாழ்க்கையின் முழுப் போக்கையும் மாற்றின. அதன்பின் வேதத்தைப் படிக்கவும் அதைக் கற்றுக்கொடுக்கவும் அவர் தனது வாழ்வை அர்ப்பணித்தார்.

வேதாகமத்தையும் அதின் போதனையையும் தெளிவான மற்றும் எளிய விதத்தில் விளக்கும் டெரிக்கின் பிரதான வரம், லட்சக்கணக்கான மக்களுடைய வாழ்க்கையில் விசுவாசத்தின் அடித்தளத்தை அமைப்பதற்கு உதவி செய்திருக்கிறது. சபைப் பிரிவுகளை மற்றும் குழுக்களைச் சாரா நிலையினால், அவருடைய போதனை எல்லா இன மற்றும் மதப் பின்னணிகளிலிரந்தும் வந்த மக்களுக்கு மிகப் பிரயோஜனமாகவும், வாழ்க்கைக்கு ஏற்றதாகவும் அமைந்துள்ளது.

அவர் 50ற்க்கும் மேற்பட்ட புத்தகங்களுக்கும், 600 ஒலி மற்றும் 100 ஒளிப்பபதிவு செய்யப்பட்ட போதனைகளுக்கும் காரணராய் இருக்கிறார். இவைகளில் அநேகம் 100க்கும் மேலான பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு, அச்சிடப்பட்டுள்ளன. அவருடைய அனுதின ரேடியோ ஒலிபரப்பு, அராபிய, பஹாசா, இந்தோனேஷியா, சீன (அமாய், காண்டோனீஸ், மாண்டரின், ஷாங்காயீஸ், சுவாட்டோ) க்ரோஷிய, ஜெர்மன், மலகாசி, மங்கோலிய, ரஷிய, சமோவா, ஸ்பானிஷ் மற்றும் டோங்கன் பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த ரேடியோ ஒளிபரப்பு இன்றைக்கும் உலகெங்கும் அநேகருடைய வாழ்வை மாற்றிக்கொண்டிருக்கிறது.

140 நாடுகளில், டெரிக் பிரின்ஸின் போதனைகளைக் கொண்டு, விசுவாசிகளைச் சந்திக்கும் ஊழியத்தை, டெரிக் பிரின்ஸ் ஊழியங்கள் இன்றும் செய்து வருகிறது. இதனால் "இயேசு கிறிஸ்து வரும் வரை" என்ற கட்டளையை நிறைவேற்றுகிறது. உலகெங்குமிருக்கும் 30 டெரிக் பிரின்ஸ் அலுவலகங்கள் மூலம் இப்பணி நிறைவேறி வருகிறது. இவ்வலுவலகங்கள், ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லேண்ட்ஸ், நியூசிலாந்து, நார்வே, ரஷியா, தென் ஆப்பிரிக்கா, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் இந்தியா உட்பட பல நாடுகளில் உள்ளன. மேலும் விபரங்கள் அறிய **www.derekprince.in** என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

உங்கள் ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப, புத்தகங்கள் வாங்க மற்றும் இதர காரியங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

For orders, prayer requests & other enquiries please contact :

DEREK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201

உங்கள் காணிக்கைகளையும், நன்கொடைகளையும் மேலிருக்கும் முகவரிக்கும் அனுப்பி வைக்கவும்.

You can also send your offerings and contributions towards this ministry to the above address.

Visit our WEBSITE:

www.derekprince.com/ta-in